தன்வந்திரி

சூட்சும வைத்தியம் 200

விஷபேதி வைத்தியம்

No 5

தாமரை நூலகம், சென்னை - 600 026.

தன்வந்திரி

சூட்சும வைத்தியம் 200
விஷபேதி வைத்தியம்
(மூலமும் உரையும்)

பதிப்பாசிரியர்

எஸ்.பி. இராமச்சந்திரன்

தொலைபேசி எண் - 23620249

தாமரை நூலகம்

எண்- 7, என்.ஜி.ஓ. காலனி

வடபழனி, சென்னை - 600 026

website : www.intamm.Com/nool/thamarai

email:thamarai@intamm.com

பொருளடக்கம்

தன்வந்திரி சூக்ஷும வைத்தியம் 200

விஷபேதி நிவாரணி

முற்றும்

உ

கடவுள் துணை

தன்வந்திரி சூக்ஷும வைத்தியம் 200

காப்பு
நேரிசை வெண்பா

ஆதியந்த மில்லா வகண்டபரி பூரணமாய்ச்
சோதியந்த வாழ்மயிலே சொற்பெரிய- யாதியைகேள்
நாதியந்த மான நல்ல சரஸ்பதியை
வாதியந்தன் பங்கிலுறை வாழ்வே.

இதுவுமது

வாழ்வென்ன வல்லபையின் வளர்முகற்றின் கணபதியைத்
தாழ்வென்ன மணிவிளக்கின் சொல்பெரிய- வாழ்மறையின்
ஆதியென்ன நான்முகவன் நல்லதொரு பிரமனவன்
காதியென் னாவிற் கணக்கே.

நூல்
எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கணக்கென்ன வயிரவன்றன் பாதங் காப்பு
கனமான நந்தீசர் பாதங் காப்பு
வணக்கென்ன ரவிமதியின் பாதங் காப்பு
வானான சதாசிவத்தின் பாதங் காப்பு
அணக்கென்ன நாதாக்கள் பாதங் காப்பு
ஆனதொரு சற்குருவின் பாதங் காப்பு
மணக்கென்ன தேவிசிவ காமி வாலை
மகத்தான தேவியம்பாள் பாதங் காப்பே. 1

காப்பென்ற நந்தீச ரவரி டத்தே
கனிந்தடுத்துப் பணிவிடைகள் மிகவே செய்தேன்
வாப்பென்ற வென்குணத்தை யறிந்தா ரையர்
வளமாக வெனையழைத்தார் முன்னே நின்றேன்
மாப்பென்ற வமுதமதை யூட்டி னார்பா
ரன்பான மூமைதனைக் காதிற் கொன்னார்
நாப்பென்ற வமுதரசங் கனிய லாச்சு
நலமான சகலசித்து நினைவி லாச்சே. 2

ஆச்சப்பா வூமையனை நிகண்டிற் சொன்னேன்
அன்பான வாசிமர்ம மெல்லாஞ் சொன்னேன்
வாச்சப்பா மூன்றுலட்சம் பாட லெல்லாம்
வளமாக நிகண்டிலே சொன்னேன் பாரு
நாச்சப்பா வைத்தியத்திற் காதி கேளு
நலமான வட்டாங்க வயிரவன்றா னையா
காச்சப்பா வவன் பூசை வேண்டும் பாரு
கனமான பூசையைத்தான் சொல்வேன் கேளே. 3

கேளப்பா ரங்கெனவும் டிங்குடிங் கென்றும்
கெடியான மங்கெனவும் நங்கென் றேசொல்
வாளப்பா வயிரவருக் கிம்மூ லந்தான்
வளமான லட்சமுருப் போட்டுக் கொள்ளு
ஆளப்பா வுன்னிடத்திற் குடியி ருப்பா
ரன்பான சக்கரத்தைச் சொல்லக் கேளு
நாளப்பா வறையைந்து கீறிக் கொண்டு
நலமாகக் குறுக்கஞ்சா மறையுங் கீறே. 4

கீறவே சுற்றிலுந்தான் சூலம் போடு
கிருபையாற் பீசங்கள் சொல்லக் கேளு
வாறவே யுற்றிரத்தில் அங்பிங் மங்
வானதொரு சிங்கென்றும் போடு வாய்நீ
மாறவே தெக்ஷணத்திற் சொல்லக் கேளு
மகத்தான ரங்கென்றும் ரிங்கென் றுந்தான்
நாறவே சிங்கென்றும் வங்கென் றுந்தான்
நலமாகக் கிழக்குநிலை சொல்லக் கேளே. 5

கேளப்பா கிழக்கினிலே வகோயாவென்று போடு
கெணிதமுடன் மேற்கேதான் சொல்லக் கேளு
வாளப்பா விறிம் இறிம் என்று போடு
வளமான ஆமென்றும் ஊமென் றுந்தான்

நாமப்பா நாற்சதுர மாகிப்போச்சு
நலமான வுள்ளறையி னாட்டங் கேளு
தாளப்பா விரண்டிற்கு நடுவிற் பாரு
நலமான வீட்டிலே சொல்லு வேனே. 6

சொல்லவே ராவென்ற வக்ஷரத்தைப் போடு
சொற்பெரிய நடுவெழுத்து லாவென்று போடு
அல்லவே கீழ்மேலாய்ச் சுழியைச் சுற்று
அப்பனே சுழிமுனையிற் சூலம் போடு
நல்லவே சூலத்தில் ரீங்காரம் போடு
நலமாக இம்மென்றும் நடுவிற் போடு
வல்லவே ஊமையெழுத் திதுதான் பாரு
வளமான வடமொழியிற் றிறந்திட் டேனே. 7

திறக்கவே விவ்விதமாய்ச் செடத்தி லுண்டு
தெரியாத மூடர்களை யிருத்திப் பாரு
வார்க்கவே சக்கரத்தைப் போட்டுக் கொண்டு
வளமாக உத்திரத்தின் முகமாய்க் குந்து
ஆர்க்கவே பாயாசம் பலகா ரங்க
ளப்பனே தூபமொடு தீபங் காட்டு
நார்க்கவே நாற்பத்தி னைந்துக் குள்ளே
நலமாகச் சித்திப்பா நவின்று பாரே. 8

நவிலவே சித்தித்தாற் கரும நோய்க
ணலமாக வுன்முகத்தைக் கண்ட போதே
தவிலவே யோடிவிடும் நோய்கள் பாரு
தாரணியிற் பிணிகளுனைக் கண்டு தானால்
வவிலவே சிம்மந்தான் வருகு தென்று
வளமாக வோடிவிடும் வல்ல நோய்கள்
கவிலவே வடமொழியைக் கண்டா ரானால்
கருவான வுலகத்திற் சித்தி யாமே. 9

சித்தனாய்ச் சடமெடுத்தா லெல்லாஞ் சித்தி
சிறப்பான மற்றோர்க்குச் சித்தியாமோ
வத்தனாய் மூன்றெழுத்து ஊமை தாண்டா
வப்பனே யஞ்செழுத்து ஊமை யாலே
யத்தனா யெட்டெழுத்து ஊமை யாலே
யதையடுத்த வைம்பத்தோ ரக்ஷரமு மூமை
பத்தனா யிருந்தோருக் கெல்லாஞ் சித்தி
பரிவான வாதத்திற் கெடுவார் பாரே. 10

பாரெனவே ஞானத்தைப் பார்க்கா மூடர்
பாவமான பாவத்தைச் செய்வாரையா
ஆரெனவே ஞானமொடு வைத்தியம் யோகம்
அப்பனே பார்த்தாக்காற் பாவ மாமோ
நாரெனவே யொன்றுமிலை யேது மில்லை
நலமானா வாறுபத்து நாலுஞ் சொல்வார்
வாரெனவே வனபூத மோடிப் போகும்
வளமான கன்மத்தா லாட லாச்சே. 11

ஆச்சென்ற யோகத்தைப் பாரா னாகில்
அப்பனே வாதமொடு ஞானஞ் சித்தி
வாச்சென்ற வாதத்தா லென்ன வாகும்
வளமான ஞானத்தைப் பாரு பாரு
நாச்சென்ற ஞானத்தை யறிந்தா ரானால்
நலமான சிவயோகப் பதவி யாவார்
நீச்சென்ற பொருளறிந்தோன் சித்தன் சித்தன்
நிலையான மனத்தோர்க்குச் சித்தியாமே. 12

வழலை

சித்தென்னா லுமையனைத் தெரிந்து சொன்னேன்
சிறப்பான வழலையுட மார்க்கங் கேளு
வத்தென்ன வைத்தியத்தின் வழலை கேளு
மன்பான பூமியுட நாத மப்பா
சுத்தனா யிருந்தாக்காற் சொல்வேன் பாரு
சொற்பெரிய வுவருப்பைக் கொண்டு வந்து
நற்றென்ன படியொன்று அளந்து கொண்டு
நலமான பாண்டத்திற் கொட்டிப் பாரே. 13

வழலைமுப்பு விபரம்

பாரப்பா பனிநீரைக் கொண்டு வந்து
பரிவாக விரண்டுபடி யதனில் வார்த்து
சேரப்பா கலக்கியே யடுப்பி லேற்றிச்
சிறப்பான குழம்புபோ லாகும் யோசி
வாரப்பா விறக்கியதை வைத்துக் கொண்டு
வளமாக வாறிவரும் பதத்தைக் கேளு
சீரப்பா பீங்கான்றா னகலமாகச்
செப்பமுடன் கொண்டுவந் ததனி லூற்றே. 14

ஊற்றியதோர் பீங்கானை யில்லத் தில்வை
உணர்வான வாலையைத்தான் லட்ச மோது
வாத்தியதோர் நைவேத்தியம் தூபங் காட்டு
வளமான பால்பழங்கள் வைத்து வைத்து

நாத்தியதோர் நாற்பதுநாட் சென்று தானால்
நலமான பூப்பூத்துக் காய்க்கும்பாரு
மாற்றியதோ ரஞ்சுநா ளானபின்பு
வளமான காய்காய்த்துப் பழமாம் பாரே. 15

பழமாகு நாற்பத்தினைந்துக் குள்ளே
பரிவாகப் பூவெடுத்துப் பதனம் பண்ணு
வளமாகும் தூபமொடு தீபங் காட்டி
வப்பனே வைத்தியமுப் பிதுதான் பாரு
நழமாகும் முப்பூவின் சுண்ணங் கேளு
நலமான கல்வத்தில் முப்பூ விட்டு
கழமாகும் குக்குடத்தி லண்டம் வாங்கி
கனமாகப் பிளந்ததிலே * விந்தை வாரேன். 16

வாரப்பா சாமமது ஒன்று மட்டும்
வளமான பனிநீராற் சாம மாட்டு
ஆரப்பா வில்லைசெய்து நிழ லுலர்த்தி
யப்பனே விந்துவினா லேழு சீலை
நாரப்பா யாறவைத்துக் கோழிபுடம் போடு
நலமாகச் சுண்ணமதாய் வெண்ணீ ராகும்
காரப்பா சுண்ணமதை யெடுத்துக் கொண்டு
கருவாக வயிரவர்க்குப் பூசை பண்ணே. 17

பண்ணவே குப்பிதனிற் பதனம் பண்ணு
பண்பான அவுடதத்தின் கூடச் சேரு
வண்ணவே யாக்கிராணங் கலிக்கத் தோடு
வகுத்தவிந்தக் கட்டுவகை செயநீர்ப் போக்கு
மெண்ணவே சிந்தூரம் பற்பத்தோடு
மேலான மாத்திரைக ளெண்ணெ யோடும்
சொன்னவே தைலமொடு சூரணங்கள்
கனமான லேகியங்கள் கிருதந் தானே. 18

தானான ஞானமொடு வாதப் போக்கு
தனதான தீக்ஷையொடு சமாதி தானும்
வானான கருக்கிடைசூட் சத்திற் சொல்வேன்
வளமான வடமொழிதா னிந்நூல் பாரு
மானான காயாதி கற்பத்தோடு
மகத்தான மந்திரஞ்சக் கரங்கள் தானும்
தேனான வகத்தீசர் கடாக்ஷத் தாலே
திறமாக விரித்துயான் சொல்வேன் பாரே. 19

---

* விந்து - வெண்கரு

பூமியில் விளையும் பூநீர் அல்லது உவர் உப்பைக் கொண்டு வந்து ஒரு படி அளந்து ஒரு பாண்டத்தில் போட்டுக் கொள்ளவும். அதில் இரண்டு படி பனி நீரில் நன்றாகக் கலக்கி அடுப்பில் வைத்து காய்ச்சி குழம்பு போலாகும் பதத்தில் இறக்கி ஒரு பீங்கானில் வார்த்துக் கொள்ளவும்

அதை வீட்டில் பத்திரமான இடத்தில் வைத்து பால் பழம் நைவேத்தியம் வைத்து தூப தீபம் காட்டி வாலையை பூஜை செய்ய வேண்டும். வாலையின் மந்திரத்தை லட்சம் உரு ஓத வேண்டும்.

நாற்பது நாளில் அதன் மேல் பூ பூத்துக் காய்த்துப் பழமாகும். நாற்பத்தைந்து நாட்களுக்கு அதைப் பூசித்து தூபதீபம் காட்டி எடுத்துக் கொள்ளலாம். இது முப்பூ ஆகும்.

முப்பூவை சுன்னம் செய்ய அதை கல்வத்தில் போட்டு கோழி முட்டையை உடைத்து வார்த்து பனிநீர் விட்டு நன்றாக அரைக்க வேண்டும்.

அரைத்ததை சிறு சிறு வில்லைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல் மூடி ஏழு சீலை மண் செய்து கோழிப் புடம் போட அது வெந்து வெண்மை நிறமான சாம்பலாகும். அதுவே முப்பூச் சுண்ணம்.

சுண்ணத்தை எடுத்துக் கொண்டு வயிரவர்க்குப் பூஜை செய்து குப்பியில் பத்திரப் படுத்திக் கொள்ள வேண்டும். இந்தச் சுண்ணத்தை லேகியங்கள், கிருதங்கள், தைலங்கள், சூரணங்கள் முதலான எல்லா வகை மருந்துகளோடும் சிறிதளவு சேர்க்க அம் மருந்து அதிக வீரிய முள்ளதாகும்.

சுரமாத்திரை

சொல்லவே மாத்திரைதா னொன்று கேளு
சுளுவான வாளமது பலந்தா னொன்று
மெல்லவே பூரங்கா லழிஞ்சிவேர்ப் பட்டை
மேலான கொடி வேலிப் பட்டை காலாம்
வெல்லவே யிதுவெல்லாஞ் சுத்தி பண்ணி
யப்பனே கல்வத்திற் போட்டே யாட்டு
வெல்லவே முலைப்பாலாற் சாமம் ரெண்டு
வேதாந்தக் கையானிற் சாமம் ரெண்டு 20

ரெண்டான நாற்சாம மரைத்துக் கொண்டு
ரேசககும் பகமுடனே பூசை பண்ணு
வண்ட ஈன துவரைபோல் மாத்திரைதான் பண்ணு
வளமாக வுலர்த்திநன்றாய்ச் செப்பில் வைத்து
கண்டாளத் தேனிலே கொடுத்துப் பாரு
கைகடந்த சுரமெல்லா மோடிப் போகும்
மண்டான சுரமாந்த மாத்திரைதா னப்பா
வானதோ ரிம்மருந்தைச் செய்து கொள்ளே. 21

நேர் வாளம் 1 பலம், பூரம், அழிஞ்சி வேர்ப் பட்டை, கொடி வேலிப் பட்டை, வகைக்கு கால் பலம் இவற்றை சுத்தி செய்து கல்வத்தில் போட்டு தாய்ப்பால் விட்டு இரண்டு சாம நேரம் அரைக்கவும். பிறகு கரிசாலைச் சாறு விட்டு இரண்டு சாம நேரம் அரைக்கவும். பிறகு பூஜை செய்து அரைத்த மருந்தை துவரை அளவு மாத்திரைகளாகச் செய்து உலர்த்தி பத்திரப் படுத்திக் கொள்ளவும்.

ஒரு மாத்திரை தேனிலுரைத்துக் கொடுத்தால் எந்த வித சுரமாக இருந்தாலும் ஓடிப் போகும்.

குங்குமப்பூ மாத்திரை

கொள்ளவே குங்குமத்தின் குளிகை கேளு
கொடிதான குங்குமப்பூ பலந்தா னொன்று
மள்ளவே திரிகடுகு திரி பலாதி
மகத்தான சாதிக்காய் கிராம்பு ஏலம்
விள்ளவே சந்தனத்தூள் மருதம் வேரும்
விதமான கடுகுரோ கணியுங் கூட்டு
உள்ளவே யிதுவெல்லா மரைதான் கூட்டு
இயல்பான கல்வத்திற் போட்டுக் கொள்ளே. 22

கொள்ளென்ற பழச்சாறு தான்சாம மொன்று
கொடியான விஞ்சிச்சாறு சாமம் ரெண்டு
வாளென்ற கண்டங்கத் திரிப்பழச் சாறுசாமம்
வளமாக வரைத்ததனை வழித்தெ டுத்து
தாளென்ற சிறுபயறுபோற் குளிகை செய்து
தப்பாம லுலர்ந்தபின்பு செப்பில் வைநீ
மாளென்ற வனுபான மறிந்து செய்தால்
மகத்தான குளிர்சன்னி சுரங்கள் போமே. 23

ஒரு பலம் குங்குமப்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிக்காய், கடுக்காய், தானிக்காய், சாதிக்காய், கிராம்பு, ஏலம்.

சந்தனத்தூள், மருதம் வேர், கடுகு ரோகணி, வகைக்கு அரை பலம் சேர்த்து கல்வத்தில் போட்டு எலுமிச்சம்பழ சாற்றால் ஒரு சாம நேரம் இஞ்சிச் சாற்றால் இரண்டு சாம நேரம் பிறகு கண்டங் கத்திரி பழச் சாற்றால் ஒரு சாம நேரம் நன்றாக அரைத்து வழித்து எடுத்துக் கொண்டு சிறு பயிரளவு குளிகைகளாகச் செய்து உலர்த்தி பத்திரப் படுத்திக் கொள்ளவும்.

இந்த மாத்திரையை தக்க அனுபானத்துடன் கொடுத்தால் குளிர் சன்னி, சுரங்கள் யாவும் போகும்.

வயிரவ மாத்திரை

போமென்ற வயிரவமாத் திரைதான் கேளு
புகழான லிங்கமொடு நாபி கந்தி
வாமென்ற வெண்காரம் நவச்சாரம் வீரம்
வளமாகு மிதுவெல்லாம் விராகன் ரெண்டு
சாமென்ற சுத்திசெய்து கல்வத் திட்டுக்
கனமான லவங்கமொடு பத்திரியுஞ் சுக்கு
மாமென்ற கையானில் ரெண்டு சாமம்
அப்பனே மங்கையர்தன் பாலால் ரெண்டே. 24

ரெண்டான குமரிச்சாறு சாமம் ரெண்டு
ரேசித்து வழித்ததனை யரைத் தெ டுத்து
வண்டான பனிப்பயறுபோல் மாத்திரை செய்து
அப்பனே ரவிதனிலே யுலர்த்திக் கொண்டு
அண்டான மனிதருக்கே யனுபா னத்தில்
அளவாக மாட்டிடவே சொல்லக் கேளு
கண்டாக சுழற்சன்னி சிலேஷ்ம சன்னி
கனமான சுரங்கள் முதற் குளுமை போமே. 25

லிங்கம், நாபி, கெந்தி, வெண்காரம், நவச்சாரம், வீரம், வகைக்கு 2 வராகன் எடுத்து சுத்தி செய்து கல்வத்தில் இட்டுக் கொண்டு அவற்றுடன் இலவங்கம், பத்திரி, சுக்கு மூன்றும் சேர்த்து கரிசாலைச் சாற்றால் இரண்டு சாம நேரம், தாய்ப் பாலால் இரண்டு சாமநேரம் சோற்றுக் கற்றாழைச் சாரால் இரண்டு சாம நேரம் அரைத்து வழித்து எடுத்துக் கொண்டு பயறு போல் மாத்திரைகளாகச் செய்து சூரிய வெப்பத்தில் உலர்த்தி பத்திரப் படுத்திக் கொள்ளவும்.

இந்த மாத்திரையை தக்க அனுபானத்துடன் கொடுக்க சுழல் சன்னி, சிலேத்தும சன்னி, முதலிய நோய்கள் தீரும்.

சஞ்சீவி மாத்திரை

போமப்பா சஞ்சீவி மாத்திரைதான் கேளு
புகழான நாபியொடு சூதம் லிங்கம்
வாமப்பா வரிதாரம் பூரங் கெந்தி
வளமான ரசத்தினுட செந்தூரங் கூட்டு
காமப்பா சுத்திசெய்து இதுவெல் லாந்தான்
கனமான பல மரைதான் கல்வத் திட்டு
நாமப்பா கிராம்புடனே பத்திரியு மேலம்
நலமான திரிகடுகு திரிபலாதி யென்னே. 26

என்னவே நேர்வாளஞ் சுத்தி பண்ணி
யியல்பாக மருந்தெல்லாங் கூடச்சேரு
வண்ணவே நிம்பக்காய்ச் சாறதாற் சாமம்
வளமான கன்னிப்பால் சாமம் ரெண்டு
மன்னவே குமரிச்சாறு சாமம் நாலு
மகத்தான கொன்றைபட்டை சாறுதான் சாமம்
அண்ணவே சாமமது எட்டு மாட்டி
அப்பனே மாத்திரைதா னதின்பின் செய்யே. 27

செய்யவே யனுப்பான மறிந்து செய்தாற்
செயலான சன்னியொடு சுரங்கள் தோஷம்
மையவே மாண்டுவிடும் நோய்க ளெல்லா
மகத்தான பால்தேனிற் கொள்ளும் போது
வையப்பா செத்தபிண மெழுந்து குந்தும்
வளமான விதியிருந்தாற் பிழைப்பா னப்பா
கையவே விதியில்லா விட்டாக் காற்றான்
கனமான மூன்றரைநா ழிகைக்குட் போமே. 28

போமப்பா விம்முறைபோ லர்தான் சொல்வார்
புகழ்கிரந்தி யேழுக்கும் முறைதா னப்பா
வாமப்பா நந்தீச ரருடன் னரலே
வழி துறையாய் மாத்திரையை வழுத்திவிட்டேன்
காமப்பா கிரந்தியி லே ஏழுக்குந் தான்
கனமான மாத்திரைதா னொன்று சொல்வேன்
நாமப்பா பூரமுடன் கந்திசேரு
நலமான கடுகுஞ்சீர கந்தான் சேரே. 29

நாபி, ரசம் லிங்கம், அரிதாரம், பூரம், கெந்தி, ரச செந்தூரம் முதலிய மருந்துகளை வகைக்கு அரை பலம் எடுத்து சுத்தி செய்து கல்வத்தில் இட்டுக் கொண்டு கிராம்பு, பத்திரி, ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிக்காய், கடுக்காய், தானிக்காய், இவற்றுடன் சுத்தி செய்த நேர்வாளமும் சேர்த்து எலுமிச்சம் பழச் சாற்றால் இரண்டு சாம நேரம், தாய்ப்பாலால் இரண்டு சாமம், சோற்றுக் கற்றாழைச் சாற்றால் இரண்டு சாமம், கொன்றைப் பட்டைச் சாற்றால் இரண்டு சாமம் அரைத்து மாத்திரை செய்து வைத்துக் கொள்ளவும்.

இந்த மாத்திரையை பால், தேன் முதலிய அனுபானத்தோடு கொடுக்க சன்னி சுரம் முதலிய நோய்கள் ஓடிப் போய் விடும் (நிம்பக்காய் என்பதற்கு வேப்பங் காய் என்றும் பொருள் உண்டு இங்கு எலுமிச்சம் பழச்சாறு என்ற பொருள் கொள்ளப்பட்டது)

கிரந்தி மாத்திரை

சேரப்பா பறங்கிச்சக்கை யிதுமூன் றுந்தான்
செயலாகச் சுத்திபண்ணிக் கல்வத் திட்டு
வாரப்பா சீர்கமும் போட்டுக் கொண்டு
வளமான கையான்சா றதனா லாட்டே
பாரப்பா தாணிக்காய்போ லுண்டை செய்து
பண்டாக வெடுத்து நன்றாய் நோய்கள் தீர
நாரப்பா நசித்துவிட்டு உதிர்ந்து போகும்
நலமான பத்தியந்தான் உப்புப்புளி தள்ளே. 30

தள்ளவே யரைக்கீரை புரட்டிப் போடு
தன்தான முருங்கக்காய் கத்திரியுங் கூட்டு
விள்ளவே யுப்பைத்தான் வறுத்துக் கூட்டு
விதமான மாத்திரையை விழுங்கச் சொல்லு
நள்ளவே கிரந்தியது தவறுண்டே போம்
நலமான மாத்திரைதான் நன்மை நன்மை
அள்ளவே கலிக்கத்தின் மாத்திரைதான் கேளு
அப்பனே வெண்காய நாபி கூட்டே. 31

பூரம், கெந்தி, கருஞ்சீரகம், பறங்கிச் சக்கை, இவற்றைச் சுத்தி செய்து கல்வத்தில் இட்டு, சீரகம் சேர்த்து [illegible] சாற்றால் அரைத்துத் தானிக்காய் போல் மாத்திரைகளாக செய்து வைத்துக் கொண்டு கொடுக்கவும்.

பாத்தியம் : உப்பு, புளி, ஆகாது. மிக அவசியமானால் உப்பை வறுத்துப் போட்டுக் கொள்ளலாம்.

அமுர்தாதி கலிகக் மாத்திரை

கூட்டவே வெண்மிளகு வாளங் கூட்டு
கூறாக விதுவெல்லாஞ் சுத்தி பண்ணி
ஆட்டவே வகைக்கியொரு கழஞ்சி கூட்டு
ஆனதொரு திரிகடுகு கூடச் சேரு
வாட்டவே கல்வத்திற் போட்டுக் கொண்டு
வளமான பழச்சாற்றில் சாம மூன்று
காட்டவே கன்னிமுலைப் பாலாற் சாமம்
கருத்தான வெற்றிலைச்சாறு சாமம் நாலே. 32

நாலான வெற்றிலைச்சா றதனிற் போட்டு
நாதாந்த வவுடதங்கேள் சன்னி போகும்
சாலான முலைப்பாலிற் போட்டிட் டாக்காற்
சமர்த்தான குளிருடனே சுரமும் போகும்
மாலான வமுர்தாதிக் கலிக்கஞ் சொன்னேன்
அப்பனே சன்னியுட மாத்தி ரைதான்கேளு
மேலான முத்தமொடு வெடியுப்- போடும்
மென்மேலும் பூரமுடன் கெவுரி கூட்டே. 33

வெண்காரம், நாபி, வெண்மிளகு, நேர்வாளம் இவற்றை யெல்லாம் சுத்தி செய்து வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் எடுத்துக் கொண்டு சுக்கு, மிளகு, திப்பிலி இவையும் சேர்த்து கல்வத்தில் போட்டு எலுமிச்சம் பழச் சாற்றால் மூன்று சாம நேரம், தாய்ப்பாலால் ஒரு சாமநேரம் வெற்றிலைச் சாற்றால் நான்கு சாம நேரம் அரைத்து கலிக்கமாகப் போட சன்னி, சுரம், குளிர் போன்ற நோய்கள் யாவும் தீரும்

சன்னி மாத்திரை

கூட்டப்பா வதிமதுர மக்கிர காரம்
குணமான கஞ்சாவுங் கர்க்கடக சிங்கி
வாட்டப்பா முச்சரக்குச் சுத்தி செய்து
வளமான மருந்தெல்லாங் கல்வத் திட்டு
காட்டப்பா வெலுமிச்சம் பழச்சாறு சாமம்
கனமான இஞ்சிநீர் சாமம் நாலு
ஆட்டப்பா முலைப்பாலில் சாம மாட்டு
அப்பனேயாட் டினபின் மாத்திரைதான் செய்யே. 34

செய்யப்பா விதற்கெல்லா முப்பூ போடு
செயமான பூபோட்டால் சரக்கே கொல்லும்
வையப்பா வோருரைப்பூ தேனிற் கொள்ளு
வளமான சன்னிபதின் மூன்று போகும்
மையப்பா வனுப்பான மறிந்து கொள்ளு
மானதொரு விடசன்னி தோடம் போகும்
கையப்பா வேழையுந்தான் வைத்தியஞ் செய்வான்
கருதியதோர் குளிகையது வளம தாமே. 35

ஆமென்ற மாத்திரைதா னிதுதான் பாரு
மன்பான வைத்தியரே யுங்க ளுக்கு
நாமென்ற வானுவத்தாற் சொல்லி விட்டோம்
நலமான கருக்களெல்லா மிதிலே சொல்வேன்
பாமென்ற மேகமதிருபத் தொன்றும்
அப்பனே மேகத்தால் எழுந்த ரோகம்
தாமென்ற க்ஷயமெட்டு நீரிழிவு மெட்டுந்
தாக்கான சூலையது பதினெட் டாமே. 36

முத்தக்காசு வெடியுப்பு, பூரம், கெவுரி, அதிமதுரம், அக்கரகாரம், கஞ்சா, கர்க்கடக்சிங்கி, இவற்றை யெல்லாம் சுத்தி, செய்து கல்வத்தில் இட்டு எலுமிச்சம் பழச் சாற்றால் ஒரு சாமம், இஞ்சிச்சாற்றால் நான்கு சாமம் தாய்ப்பாலால் ஒரு சாம நேரம் ஆட்டி சிறிதளவு உப்பும் சேர்த்து மாத்திரைகளாக செய்து கொள்ளவும்.

இந்த மாத்திரையில் ஒரே ஒரு உரைப்பு தேனில் கொடுக்க பதின்மூன்று வகையான சன்னி நோய்களும் ஓடிப் போய் விடும். தக்க அனுபானத்துடன் கொடுக்க விஷ ஜன்னி முதலான நோய்களும் தீரும்.

மேக ராஜாங்க எண்ணெய்

ஆமப்பா மேகத்தா லெழுந்த ரோக
மானதொரு வியாதியைத்தான் சொல்லக் கேளு
காமப்பா மேகரா சாங்கத் தெண்ணெய்
கருவாகச் சொல்லுகிறோங் கேளு கேளு
வாமப்பா கருங்கையாந் தகரைச்சாறு படியொன்று
வளமான சங்கஞ்சாறு படிதா னொன்று
காமப்பா கருநொச்சிச் சாறுபடி யொன்று
தருவான விசைவல்லிச் சாறுபடி யொன்றே. 37

ஒன்றான கோவைச்சாறு படிதா னொன்று
உத்தமனே நெல்லிக்காய்ச் சாறுபடி யொன்று
வன்றான வாகைச்சாறு படிதா னொன்று
வளமான தழுதாழைச் சாறுபடி யொன்றே
கன்றான கருப்பஞ்சாறு படிதா னொன்று
கனமான வாவாரைச் சாறுபடி யொன்று
அன்றான வத்திப்பால் படியரைதா னப்பா
அப்பனே யரைக்கீரைச் சாறுபடி யொன்றே. 38

ஒன்றான தக்காளிச் சாறுபடி யொன்று
உத்தமனே குமரிச்சாறு படிதா னொன்று
ஒன்றான கன்னிமுலைப் பால்ப்படிதா னொன்று
ஓதுவோம் வெள்ளாட்டுப் பால்படிதானொன்று
ஒன்றான வாவின்பால் படிதா னொன்று
உகந்ததென்னம் பாளைச்சாறு படிதா னொன்று
ஒன்றான ஒதிவிருக்ஷ சாறுபடி யொன்று
உறுதியுள்ள விச்சிச்சாறு படிதா னொன்றே. 39

ஒன்றப்பா கழுதைப்பால் படிதா னொன்று
உத்தமனே சித்தேரண்டத் தெண்ணெய்ரெண்டு
வன்றப்பா வெள்ளெண்ணெய் படிதா னொன்று
வளமான கற்கவகை சொல்லக் கேளு
கன்றப்பா திரிகடுகு திரிபலாதி
கனமான வேலமொடு கிராம்பு பத்திரி
நன்றப்பா வெட்டிவேர் விலாமிச்சம் வேரு
நாதாந்தச் சந்தனத்தூள் தேவதாரந் தானே. 40

தானான விவையெல்லாந் தேங்காய்ப் பாலில்
தனதாக வரைத்தெண்ணெயதிற்கரைத்து
வேனான சாறுவகை யெண்ணெய் கற்கம்
வேதாந்த சட்டிதனிற் கலக்கிக் கொண்டு
வானான வடுப்பேற்றித் தீயைமுட்டி
வளமான சாமமது பனிரெண் டப்பா
கானான சாமமது எரித்துக் கொண்டு
கனகமதி யிறக்கியதைப் பதியில் வையே.

வையப்பா வெண்ணெய்தனை வடித்துக் கொண்டு
வளமான வயிரவர்க்குப் பூசை பண்ணிக்
கையப்பா கரண்டிநிறை நாளுதுநாட் கொள்ளக்
கனமான மேகமெலாந் தவறுண் டேபோம்

மையப்பா வாத க்ஷயம் பித்த மெல்லா
மகத்தான சிலேஷ்மக்ஷய மெல்லாம் போகும்
நையப்பா கர்மவினை மேக ரோகம்
நலமாகப் பறந்துவிடும் கன்ம நோயே. 42

நோயான வகையேது கர்மத் தாலே
நோயான கர்மத்தால் வந்த நோய்தான்
வாயான வாதரா சாங்கங் கேளு
வளமான வெண்ணெயப்பா யார் தான் சொல்வார்
நாயான உள்ளபடி நான்தான் சொன்னேன்
நலமான வறிவாலே கண்டு செய்வாய்
காயான கனிபழம்போ லென்னூ லப்பா
கருவாக விருநூற்றிற் சொல்வேன் பாரே. 43

கரிசலாங்கண்ணிச் சாறு, கருநொச்சிச்சாறு, சங்கஞ் சாறு, வல்லிச்சாறு, கோவைச் சாறு, நெல்லிக்காய் சாறு, வாகைச் சாறு, தழு தாழைச் சாறு, கரும்புச் சாறு, ஆவாரைச் சாறு முதலியவை வகைக்கு ஒரு படி, அத்திப் பால் அரைப் படி

அரைக்கீரைச் சாறு, தக்காளிச் சாறு, சோற்றுக் கற்றாழைச்சாறு வகைக்கு ஒரு படி

கழுதைப் பால், தாய்ப்பால், வெள்ளாட்டுப் பால், பசுவின் பால், வகைக்கு ஒரு படி.

தென்னம்பாளச் சாறு, ஒதிய மரச் சாறு, இஞ்சிச் சாறு வகைக்கு ஒரு படி.

விளக்கெண்ணெய் இரண்டு படி நல்லெண்ணெய் ஒரு படி இவற்றுடன்

சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிக்காய், கடுக்காய், தானிக்காய், ஏலம், கிராம்பு, பத்திரி, வெட்டி வேர், சந்தனத் தூள், தேவதாரம், இச்சரக்குகளை தேங்காய்ப்பால், விட்டு அரைத்து.

முன் கூறிய சாறு வகைகள் பால் வகைகள், எண்ணெய் வகைகள் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து தேங்காய்ப் பாலால் அரைத்த விழுதையும் கரைத்து நன்றாகக் கலந்து கொண்டு ஒரு சட்டியிலிட்டு ஒரு பெரிய பாண்டத்திலூற்றி அடுப்பிலேற்றி பனிரெண்டு சாம நேரம் எரிக்க வேண்டும்.

பிறகு பாண்டத்தை எரித்து எண்ணெயை வடித்து எடுத்துக் கொண்டு வயிரவர்க்கு பூஜை செய்து நாற்பது நாள் ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள எல்லா விதமான மேக நோய்களும், சிலேத்துமத்தால் உண்டான க்ஷய ரோகம் போன்றவை மற்ற கர்ம ரோகங்களும் கூட இருந்த இடம் தெரியாமல் ஓடிப் போகும்.

வாத ராஜாங்க எண்ணெய்

பாரப்பா கண்டங்கத்திரிச் சாறுபடிதா னொன்று
பரிவான மிளகரணைச்சாறு படிதா னொன்று
காரப்பா வாகைச்சாறு படிதா னொன்று
கனமான மாவிலிங்கம் படியரைதா னப்பா
வாரப்பா கொன்றைச்சாறு படிதா னொன்று
அப்பனே வெள்ளறுகுச் சாறுபடி யொன்று
நாரப்பா வாதநாராயண மூலிச்சாறு
நலமான படியொன்று கூடச் சேரே. 44

சேரப்பா விதுகளுடன் கனல்தான் போக
செயமான வெள்ளாட்டுப் பால்படிதான் கூட்டு
நாரப்பா கற்கவகை சொல்லக்கேளு
நலமான முருங்கைவேர் சங்கின்வேரும்
மாரப்பா கொடிவேலி வேருங் கூட்டி
அப்பனே வெள்ளறுகு வேருங் கூட்டி
காரப்பா திப்பிலியுஞ் சுக்கு ஓமம்
கருவான கருஞ்சீர கம்முங் கூட்டே. 45

கூட்டப்பா காயுடனே கிராம்பு பத்திரி
குருவான விவ்வகைக்கு விராகன் ரெண்டு
வாட்டப்பா முன்கற்க வகைக்கு மைந்தா
வளமான பலமரைதான் கல்வத்திட்டு
ஆட்டப்பா வேறுவகைக் கடைச்சரக் கெல்லாம்
அப்பனே வெள்ளாட்டின் பாலா லாட்டி
நாட்டப்பா வேரண்டத் தெண்ணெய்படி யொன்று
நலமான சாறுஎண்ணெய் கற்கஞ் சேரே. 46

சேர்த்தப்பா சட்டிதனில் வார்த்துக் கொண்டு
செயலான கற்கத்தைக் கலக்கிக் கொண்டு
வார்த்தப்பா வடுப்பேற்றிச் சாம மஞ்சு
வளமாகக்காய்ந் துகடுகுந் திரளும்பாரு

ஏற்றப்பா மெழுகுபதந் தனில் வடித்து
இதமாக வயிரவர்க்குப் பூசை பண்ணு
கார்த்தப்பா வெண்ணெயைக் காசிடைதான் கொள்ள
கனமான வாதமெண் பதுவும் போமே. 47

போமப்பா நாற்பதுநாட் கொள்ளு கொள்ளு
புகழான பத்தியந்தான் காரு காரு
வாமப்பா வாதமெண் பத்தி நாலால்
வந்திடுமா வல்வினையைக் கேளு கேளு
காமப்பா கழுத்திசுவு மண்டைக் குத்து
கனமான கால்கைக ளுடம்புக் குத்து
நாமப்பா முன்னிசுவு பின்னிசுவு வாய்வு
நலமான கழல்வாத மண்டவாதம் பாரே. 48

பாரப்பா நடுக்குமுதல் வாதந் தீரும்
பரிவான விடுப்புநோ யிதினாற் போகும்
மாரப்பா கைகாலில் திமிர்த்த வாய்வு
அப்பனே கைமுடக்குக் கால்முடக்குத் தீரும்
வாரப்பா வெண்பதிநா லால்வளர்ந்த தெல்லாம்
வளமாகப்பொடிப் பொடியாய்ப் பறந்துபோகும்
நாரப்பா விந்தவெண்ணெய் பத்தி யங்கார்
நலமாக வந்திடமும் குணமும் பாரே. 49

பாரென்ற கண்பார்த்து முகத்தைப் பார்த்துப்
பரிவாக வவனுடைய பலத்தைப் பார்த்து
வாரென்ற வியாதியுட பலத்தைப் பார்த்து
அப்பனே நாடியுட பலத்தைப் பாரு
ஏரென்ற விதுகளெல்லா மறிந்து பாரு
என்மகனே குணம்பார்க்கா மூடர் தானும்
நாரென்ற னரகில்விழுந் தழுவர் பாரு
நலமின்றித் துரிதமுடன் சினஞ் செய்வானே. 50

நாடி விபரம்

வானென்ற நாடி தானெல் லாருஞ் சொல்வார்
வளமான வேனகதி சொன்னா ரையா
தானென்ற நான்கேட்டுப் பன்னீ ராயிரத்திற்
றயவாகக் குருடனுக்குந் தெரியச் சொன்னேன்
பானென்ற வடமொழியார் காணப் போறார்
பரிவான வென்னூல்போற் சொன்னா ரையா
தேனென்று உள்ளபடி தெரியச் சொன்னேன்
தெளிவான வறிவுள்ளோர் தெரிவார் பாரே. 51

கண்டங்கத்திரிச் சாறு, பிளகருணைச்சாறு, வாகைச்சாறு கொன்றைச் சாறு, வெள்ளருகுச் சாறு, வாத நாராயணமூலிச் சாறு, இவை வகைக்கு ஒரு படி மாவிலிங்கச் சாறு அரைபடி இவற்றுடன் வெள்ளாட்டுப் பால் ஒருபடி கலந்து வைத்துக் கொள்ளவும்

முருங்கைவேர், சங்கன்வேர் கொடிவேலி வேர், வெள்ளருகு வேர் இவற்றுடன் திப்பிலி, சுக்கு, ஓமம், கருஞ் சீரகம், கிராம்பு, பத்திரி, ஏலக்காய் வகைக்கு 2 வராகன் எடை இவற்றை கல்வத்திலிட்டு நன்றாக பொடித்துக் கொண்டு வெள்ளாட்டுப் பாலால் ஆட்டி முன் கலந்து வைத்துள்ள சாறுகளுடன் கலந்து கொள்ளவும்.

அவற்றுடன் விளக்கெண்ணெய் ஒரு படி சேர்த்து சட்டியில் வார்த்து நன்றாக கலக்கிக் கொண்டு அடுப்பில் வைத்து 5 சாம நேரம் காய்ச்சவும் மெழுகு பதமாக இறக்கி வைத்துக் கொண்டு வயிரவர்க்கு பூஜை செய்து நாள் ஒன்றுக்கு ஒரு காசு எடை வீதம் நாற்பது நாள் உட்கொள்ள 84 விதமான வாதங்களும்

வாதத்தினாலுண்டான கழுத்திசிவு, மண்டைக் குத்து, கால், கைகள், உடம்புக் குத்து, சுழல் வாதம், அண்டவாதம், நடுக்குவாதம், இடுப்பு நோய், கைமுடக்கு கால் முடக்கு, கை கால்களில் திமிர்த்த வாயு முதலான நோய்கள் எல்லாம் தீரும்.

முடக்குவாதத் தைலம்

பாரான முடக்குவாதம் கடுக்குவாதந் தீரப்
பரிவான தைலமொன்று சொல்லக் கேளு
வாரான எண்ணெய்படி கால்தான் வாங்கி
அப்பனே வாகைச்சாறு காற்படிதான் கூட்டு
பாரான தில்லம்பால் படி யரைக்கால்
பண்பான முருங்கைவேர் சாறுபடி யரைக்கால்
நாரான கற்கவகை சொல்லக் கேளு
நலமான கறியுப்பு இந்துப் பாச்சே. 52

இந்தான வெள்ளுள்ளி காயங் கூட்டி
யிதமான மாவிலிங்கம் வேர் சித்திரமூலம்
வந்தான வசம்புடனே திப்பிலியுங் கூட்டி
வளமாக வரைத்தெண்ணெய் தனிற் கரைத்து

கந்தான வடுப்பேற்றி நீர்சுண்டக் காய்ச்சிக்
கனமான நோய்க்கெல்லாந் தடவிப் போடு
தந்தான நிமிஷத்தில் நோய் வீக்கம் வாங்கும்
தானதொரு நடுக்குடனே திமிரும் போமே. 53

ஒரு படி நல்லெண்ணெயில் வாகைச்சாறு காற்படி தில்லைப் பால் அரைக்கால் படி, முருங்கை வேர்ச் சாறு அரை படி கலந்து வைத்துக் கொண்டு

இந்துப்பு, கரியுப்பு, வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், மாவிலிங்கம் வேர், சித்திர மூலம், வசம்பு, திப்பிலி, இவற்றை அரைத்து மேற்படி எண்ணெயில் கரைத்து அடுப்பிலேற்றி நீர்ச் சுண்டக் காய்ச்சி எடுத்து வைத்துக் கொண்டு நோய்களுக்குத் தடவ வலி, வீக்கம் எல்லாந் தீரும்.

கரப்பான் எண்ணெய்

போமப்பா விதுரெண்டுஞ் செய் திருந்தாற்
பொல்லாத பிணிவாய்வு தீரும் பாரு
வாமப்பா வழியாகச் சொல்லி விட்டேன்
வளமான வைத்தியரே யறிந்து செய்வீர்
காமப்பா கரப்பனெல்லாந் தீரு தற்குக்
கனமான வெண்ணெயொன்று சொல்லக் கேளு
நாமப்பா வெண்ணெய்ப்படி முக்கால் வாங்கி
நலமான சீனிச்சாறு கூந்தற் சாறே. 54

சாரான செருப்படிச்சாறு கருநொச்சிச்சாறு
சமர்த்தான கிரந்திநா யகத்தின் சாறு
வாரான சங்கஞ்சாறு சாரணையின் சாறு
வளமான வெள்ளறுகுச் சாறு கூட்டு
நாரான விதுவெல்லாங் கூடச் சேரு
நலமான வகைக்குப்படி கால்தான் கூட்டு
பாரான கற்கவகை சொல்லக் கேளு
அப்பனே சீரகந்தா னிரண்டு கூட்டே.. 55

கூட்டப்பா கடுகுரோ கணியுங் கூட்டு
கூறான வாதகரப்பான் பட்டை கூட்டு
வாட்டப்பா கண்டங்கத் திரியுங் கூட்டு
வளமான யானையுட நெருஞ்சி கூட்டு
சாட்டப்பா வேம்பாட மரத்தை சுக்கு
கனமான பறங்கிச்சக்கை குமிழம் வேரே
நாட்டப்பா விதுவெல்லாந் தூளாய்ப் பண்ணி
நலமான வகைக்கு அரைப் பலந்தான் சேரே. 56

சேரடா வெண்ணெய் தனிற் கலக்கிக் கொண்டு
சிறப்பாக நேர்வாளம் பலமரைதான் பொடித்துபோடு
வாரடா நீர்சுண்டக் காய்ச்சிக் கொண்டு
வளமான மெழுகுபதந் தன்னைப் பாரு
காரடா விறக்கியதை வடித்துக் கொண்டு
கனகமதை நாற்பதுநாட் கொள்ளச் சொல்லு
நாரடா பத்தியந்தா னிச்சா பத்தியம்
நலமாகக் கொண்டிடவே தீரு நோய்கேள். 57

கேளப்பா வீக்கமுடன் கொள்ளி சுட்டான்
குறிப்பான வாதசிலேஷ்ம கரப் பான்
வாளப்பா பித்தத்தால் எழுந்த பீடை
வளமான செங்கரப்பான் சொறிக ரப்பான்
ஆளப்பா லிங்கப்புற்று யோனிப்புற்று
அப்பனே கிரந்திவலி கொறுக்கைப் புண்ணு
நாளப்பா பித்தத்தா லெழுந்த தேமல்
நலமான வெடிகிரந்தி யிதுவெல்லாம் போமே. 58

நல்லெண்ணெய் முக்கால் படியுடன் சீனிச் சாறு கூந்தல் சாறு, செருப்படைச் சாறு, கரு நொச்சிச்சாறு, கிரந்திநாயகத்தின் சாறு, சங்கங் சாறு, சாரணைச் சாறு, வெள்ளருகுச் சாறு இவை வகைக்குக் கால்படி வீதம் கலந்து கூட்டிக் கொள்ளவும்.

சீரகம், கடுகு ரோகணி, வாதகரப்பான் பட்டை, கண்டங்கத்திரி, யானை நெருஞ்சில், வேம்பாடம் பட்டை, சிற்றறுத்தை, சுக்கு, பரங்கிச் சக்கை, உமிழம் வேர்,

இவற்றை யெல்லாம் எடுத்து தூளாக்கி வகைக்கு அரை பலம் முன் கூட்டி வைத்துள்ள எண்ணெயில் கலந்து கொள்ளவும்.

பிறகு அரை பலம் நேர்வாளம் பொடித்துப் போட்டு நீர் வற்றக் காய்ச்சி மெழுகு பதமாக எடுத்து வைத்துக் கொண்டு நாற்பது நாள் உட்கொள்ள வாத சிலேத்தும கரப்பான் நோய்கள், பித்தத்தால் எழுந்த நோய்கள், வீக்கம், செங்கரப்பான், சொறி கரப்பான், லிங்கப்புற்று, யோனிப் புற்று, கிரந்தி வலி, கொருக்கைப் புண், பித்தத்தால் உண்டான நோய்கள் எல்லாந் தீரும்.

மேகத்தெண்ணெய்

போமப்பா மேகத்தி னெண்ணெய் கேளு
புகழான வத்திப்பால் காற்படிதா னப்பா
வாமப்பா செவ்விளநீர் தேங்காய்ப் பாலும்
வளமான பனைமரத்தின் நொங்கினீரும்
ஆமப்பா- வொதியம்பட்டைச் சாறு கூட்டு
அப்பனே யாவின்பா லாவி னெய்யும்
காமப்பா வெண்ணெய்ப்படி யொன்றரையுங் கூட்டு
கனமான வகையெல்லாம்படிமுக்கால் கூட்டே.. 59

கூட்டப்பா கற்கவகை சொல்லக் கேளு
குணமான முல்லைவேர் குமிழம் வேரும்
வாட்டப்பா கொடிவேலி வேருங் கூட்டு
வளமான சாதிக்காய் கிராம்பு ஏலம்
நாட்டப்பா பத்திரியுந் தாளீசந்தான்
நலமான கோரோசனை சந்தனத் தூள்
ஆட்டப்பா வெட்டிவேர் விலாமிச்சம் வேரும்
அப்பனே யாவின்பால் தன்னா லாட்டே. 60

ஆட்டவே யெண்ணெய்ப்பால் தனிற் கரைத்து
அப்பனே யடுப்பேற்றித் தீயை மூட்டி
காட்டவே மெழுகுபதந் தன்னைப் பார்த்துக்
கனகமாய் வடித்ததனைப் பதனம் பண்ணு
மாட்டவே மண்டலந்தான் கரண்டி கொள்ளு
மகத்தான வங்கபற்பம் போட்டுக் கொள்ளு
நாட்டவே நீரிழிவு குட்டஞ் சொறி யெல்லாம்
நலமாகப் பறந்துவிடுஞ் சலவை தானே. 61

தானான வெண்ணெய்க்குப் பத்தி யந்தான்
தனதான புகையோடு பெண்ணு மாகா
வானான பாகற்காய் பூசணிக்காய்
வளமான கொள்ளுடனே யகத்திக் கீரை
தேனான வெள்ளெண்ணெயிது வெல்லா மாகா
திறமான பத்தியத்தின் பதார்த்தங் கூட்டு
வானான பெரும்பாட்டி னெண்ணெய் கேளு
அப்பனே யெள்ளெண்ணெய் படிமுக்கா லாச்சே.62

அத்திப்பால் காற்படி, செவ்விளநீர், தேங்காய்ப் பால், பனை நொங்கின் நீர், ஓதியம் பட்டைச் சாறு, பசுவின் பால், பசுவின் நெய் இவையெல்லாம் வகைக்கு முக்காற் படி, எண்ணெய் ஒன்றரைப் படி.

முல்லை வேர், உமிழும் வேர் கொடி வேலி வேர், ஜாதிக்காய், கிராம்பு, ஏலம், தாளிசப் பத்திரி, கேரோசனை சந்தனத்தூள், வெட்டிவேர், விளாமிச்சம் வேர், முதலான சரக்குகளைப் பொடித்து பசுவின் பால் விட்டு ஆட்டி முன் கலந்து வைத்துள்ள சாற்றுடன் கலந்து அடுப்பில் வைத்து தீயெரிக்கவும்.

மெழுகு பதமாக வரும் போது இறக்கி வைத்துக் கொண்டு ஒரு நாள் ஒரு கரண்டி வீதம் 48 நாள் உட்கொள்ள மேக நோய் தீரும். இந்த எண்ணெய் வங்கபற்பம் சேர்த்துக் கொள்ள நீரிழிவு, குட்டம், சொறி முதலான நோய்களும் பறந்து விடும்.

பத்தியம்: புகை, புளி, பூசணிக்காய், பாகற்காய், கொள்ளு அகத்திக்கீரை, நல்லெண்ணெய் முதலானவை ஆகாவாம்.

பெரும்பாட் டெண்ணெய்

ஆச்சப்பா நாவற்பட்டைச் சாறுபடி முக்கால்
அப்பனே ஒதியம்பட்டைச் சாறுபடி முக்கால்
வாச்சப்பா வத்திபட்டைச் சாறுபடி முக்கால்
வளமான நெல்லிக்காய்ச் சாறுபடி முக்கால்
நாச்சப்பா பழச்சாறு படிதான் முக்கால்
நலமான வாவிநெய் படிதான் முக்கால்
காச்சப்பா கருப்பஞ்சாறு முக்கால் கூட்டு
கனமான கற்கவகை சொல்லக் கேளே. 63

கேளப்பா படிமுக்கால் தாளீ சந்தான்
கெடியான சாதிக்கா யேலங் கிராம்பு
வாளப்பா வரத்தையொடு அதிமதுரங் கூட்டு
வளமான நிலப்பனைக் கிழங்குங் கூட்டு
ஆளப்பா வகைக்குப்பலங் கல்வத் திட்டே
அப்பனே தென்னங்காய்ப் பாலா லாட்டே
காளப்பா வெண்ணெயதிற் கலக்கிக் கொண்டு
கருவாக வடுப்பேற்றித் தீயைச் சாடே. 64

சாடையிலே நீர்சுண்டிக் கடுகுதிரண் டால்
சமர்த்தான கைபாக மென்றறிந்து
வாடையிலே யெண்ணெ யதை யிறக்கிக் கொண்டு
வளமான வடுகனுக்குப் பூசை பண்ணிக்

கூடையிலே கரண்டிநிதங் கொண்டிட் டாக்காற்
குணமான பெரும்பாடு குடியோ டிப்போம்
நாடையிலே வெள்ளையொடு நீரச்சு ருக்கு
நல்லநீர்க் கட்டுசதை யடைப்புப்போமே. 65

போமென்ற தயிருபால் தன்னைக் கூட்டு
புகழான வுப்பைத்தான் வறுத்துக் கூட்டு
வாமென்ற மற்றதெலாந் தள்ளிப் போடு
அப்பனே யெண்ணெயுட மகுத்து வந்தான்
ஆமென்ற புடத்தைல மகிமை கேளு
வளமான வெட்டிவித்துத் தைலஞ் சொல்வேன்
நாமென்ற வெட்டிவித்துப் படிதா னான்கு
நலமான புங்கம் வித்து நான்கு சேரே. 66

நல்லெண்ணெய் முக்கால் படி,

நாவல் பட்டைச் சாறு

ஒதியம் பட்டைச் சாறு

அத்திப்பட்டைச் சாறு

நெல்லிக்காய்ச் சாறு

எலுமிச்சம் சாறு

வகைக்கு முக்கால் படி, பசு நெய் முக்கால் படி, ஜாதிக்காய், ஏலம், கிராம்பு, அரத்தை, அதிமதுரம், நிலப்பனைக் கிழங்கு வகைக்கு ஒரு பலம் கல்வத்திலிட்டு தேங்காய்ப் பாலில் அரைத்து எண்ணெயில் கலந்து அடுப்பேற்றி அரைக்கவும்.

நீர்ச் சுண்டி கடுகு பதமாக திரண்டு வரும் காலத்தில் எண்ணெயை இறக்கி வைத்து வடுகனுக்கு பூஜை செய்து ஒரு கரண்டி வீதம் உட்கொண்டால் பெரும் பாடு, நீர்ச் சுருக்கு, நீர்க்கட்டு, முதலிய நோய்கள் ஓடிப் போய் விடும்.

நிறைய தயிர், பால் சேர்க்கவும் உப்பை வறுத்து சேர்த்துக் கொள்ளலாம்- மற்றவை ஆகாது.

எட்டிவித்துத் தைலம்

சேரென்ற கூவிளத்தின் பழமாறு கூட்டு
செயமான விதுமூன்றும் புடத்தைலம் வாங்கி
வானென்ற மனிதருக்குக் கொடுத்தா யானால்
வளமான குட்டமுதற் பாண்டு தீரும்

பானென்ற தலைக்குத்தான் தேய்த்து மூழ்கு
அப்பனே பித்தச்சூடு மயிருதிர்தல் தீரும்
நானென்ற சொறிசிரங்கு யானைப் புண்ணு
நலமாக வோடிவிடும் நவின்றிட் டேனே. 67

எட்டி வித்து 4 படி, புங்கம் வித்து 4 சேர், வில்வப் பழம் ஆறு, இந்த மூன்று சரக்கையும் சேர்த்து புடத்தைலம் வாங்கிக் கொடுத்தால் குட்டம், பாண்டு முதலிய நோய்கள் தீரும். தலைக்குத் தேய்த்து முழுகினால் பித்தச் சூடு, மயிர் உதிருதல், சொறி, சிரங்கு, யானைப்புண் முதலான நோய்கள் தீரும்.

புங்கம் வித்துத் தைலம்

நவிலுவே னின்னமொரு தைலங் கேளு
நலமான புங்கம்வித்துத் தைலஞ் சொல்வேன்
வவிலவே புங்கம்வித்துப் படிதா னெட்டு
அப்பனே யழிஞ்சிவித்துப் படிதானொன்று
கவிலவே முல்லைவேர் வீசை ரெண்டு
கனமான குமரிவேர் வீசை யெட்டு
மவிலவே யிதுவெல்லாந்தான் பாண்டத் திட்டு
மகத்தான குழித்தைலந் தன்னை வாங்கே. 68

வாங்கவே கடுகளவு உள்ளுக் கீந்து
வடிவாக மேலுக்குப் பூசிவா நீ
யாங்கவே நரைதிரைக ளிதனாற் போகும்
அப்பனே காயமது இறுகிப் போகும்
நாங்கவே பாண்டுடனே மேகம் போகும்
நலமான வித்தனையு மிதனாற் போகும்
சாங்கவே யின்னமொரு தைலங்கேளு
சமத்தான அறுகம்வேர் தைலங் கேளே. 69

புங்கம் விதை 8 படி, அழிஞ்சி விதை 1 படி முல்லை வேர் 2 வீசை, குமரி வேர் 8 வீசை (சோற்றுக் கற்றாழை) இவற்றை யெல்லாம் ஒரு பாண்டத்திலிட்டு குழித்தைலம் இறக்கி வைத்துக் கொண்டு ஒரு கருகளவு உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசி வர பாண்டு மேக ரோகங்கள் தீரும். உடல் இறுகும். நரை திரைகளும் போய் விடும்.

மூதண்டத் தைலம்

கேளப்பா வறுகம்வேர் வீசை யெட்டுக்
கெடியான முற்றமது வீசை யெட்டு
ஆளப்பா புங்கம்வேர் வீசை யெட்டு
அப்பனே யிதுவெல்லாம் பாண்டத் திட்டு

வாளப்பா குழித்தைலந் தன்னை வாங்கி
வளமாகத் தைலத்தைப் பதனம் பண்ணி
நாளப்பா வுள்ளுக்குக் காசிடைதான் கொள்ள
நலமாகச் சிரசிற்கு முழுகு வாயே. 70

முழுகிடவே தீருமது பித்த பாண்டு
முக்கியமுள்ள பித்த வெட்டை பித்தச்சூடு
வழுகிடவே கிரகச்சூ டெல்லாந் தீரும்
வளமில்லா காதிரைச்சல் மண்டைக் குத்தல்
அழுகிடவே யுடம்பெரிவு கைகாற் காந்தல்
அப்பனே நெஞ்செரிவு மூக்கெரிச்சல்
பழுகிடவே புளிபுகையு மாகா தப்பா
பண்பான பத்தியத்தைச் செவ்வையாச் செய்யே. 71

அருகம் வேர் 8 வீசை (முத்தம்) இசங்குச் செடி வேர் 8 வீசை, புங்கம் வேர் 8 வீசை இவற்றை ஒரு பாண்டத்திலிட்டு குழித் தைலம் இறக்கிக் கொள்ளவும் இந்தத் தைலம் ஒரு காசிடை உள்ளுக்கு சாப்பிட்டு தலைக்கும் தேய்த்து முழுக பித்த பாண்டு பித்த வெட்டை, பித்தச் சூடு, காதிரைச்சல், மண்டைக் குத்தல், உடம்பெரிச்சல், நெஞ்செரிச்சல், மூக்கெரிச்சல் கை கால் காந்தல் முதலிய நோய்கள் எல்லாம் தீரும்

பத்தியம்: புளியும் புகையும் ஆகாது.

வாளாயுத ரணத் தைலம்

செய்யப்பா வாளாயுத ரணத்திற் கெல்லாம்
செயமான தைலமொன்று சொல்லக் கேளு
வையப்பா சங்கம்வேர் வீசை ரெண்டு
வளமான பூவரசம் பட்டை ரெண்டு
கையப்பா சிவன்வேம்பு வீசை ரெண்டு
கனமான வாலுளுவை வீசை ரெண்டு
நையப்பா விவையெல்லாந் தரித்துக் கொண்டு
நலமான பாண்டத்திற் கொட்டி டாயே. 72

போடப்பா குழித்தைலந் தன்னைவாங்கிப்
புகழாகச் சீசாவிற் பதனம் பண்ணு
வாடப்பா மனிதருக்கு உள்ளுக்கீய
வளமாகப் பறந்துமே யோடிப் போகும்

நாட்டப்பா ரணத்தின்மேற் தைலம் போடு
கவனாகப் பறந்துவிடும் ரணங்கள் தானும்
மாட்டப்பா ரணமென்ற தெல்லாம் போகும்
அப்பனே பத்தியமா யிருப்பாய் தானே. 73

சங்கம் வேர், பூவரசம் பட்டை, சிவனார் வேம்பு, வாலுளுவை இவை வகைக்கு 2 வீசை வீதம் எடுத்து இடித்து ஒரு பாண்டத்திலிட்டு குழித்தைலம் ஆக்கிக் கொள்ளவும். இந்தத் தைலத்தை உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும் தடவ எல்லாவித ரணங்களும் பறந்து ஓடி விடும்

க்ஷயத் தைலம்

தானான ரெணத்தைலஞ் சொன்னே னப்பா
தயவான க்ஷயத்துக்குத் தைலங் கேளு
தேனான செம்முள்ளி வேர்வீசை ரெண்டு
செய்யான சங்கம்வேர் வீசை ரெண்டு
நானான வாடாதோடை மூலிவேரும்
நலமான வீசையது ரெண்டுங் கூட்டி
வானான விதுமூன்றுங் குழித்தைலம் வாங்கி
வளமான தைலத்தைப் பதனம் பண்ணே. 74

பண்ணப்பா பணவெடைதான் கொள்ளச் சொல்லு
பரிவாக விருபொழுது உள்ளுக் கேற்று
சண்ணப்பா சஞ்சார சிலேஷ்பன ரோகம்
சமர்த்தான விளைப்போடு சுவாச காசம்
மண்ணப்பா மாண்டுவிடு மிருமல் ரெத்தம்
மகத்தான கொறுகொறுப்பு மேற்சு வாசம்
கண்ணப்பா கண்காணா தோடிப் போகும்
கனமான மேகத்தா லெழுந்த தாச்சே. 75

செம்முள்ளி வேர், சங்கம் வேர், ஆடாதோடை வேர் வகைக்கு 2 வீசை, வீதம் இடித்து பாண்டத்தில் போட்டு குழித் தைலம் இறக்கிக் கொண்டு ஒரு நாளைக்கு இரு வேளை பணவெடை வீதம் உட்கொள்ள இளைப்பு காசம், இருமல், இரத்தம், கொர கொரப்பு, மேல் சுவாசம், முதலிய நோய்கள் எல்லாம் கண் காணாமல் ஓடிப்போகும்.

மூலக் கூட்டிற்குத் தைலம்

ஆச்சப்பா வதினுடைய தைலஞ் சொன்னேன்
அப்பனே மூலக்கூ டெல்லாம் போக
வாச்சப்பா தைலமொன்று சொல்லக் கேளு
வளமான தைலமடா யாருஞ் சொல்லார்
மாச்சப்பா மிளகரணை முக்கத்தாரி
மகத்தான தென்னம்வேர் பனையின் வேரும்
காச்சப்பா கையானுங் கொழிஞ்சி வேரும்
கனமான விலந்தைவேர் முசுட்டை வேரே. 76

வேரப்பா கீழாநெல்லி சிற்றாமுட்டி
வேதாந்த நெல்லிப்பட்டை யானைப் பட்டை
காரப்பா விதுவெல்லாம் வீசை யொன்று
கனமான பாண்டத்தி லிட்டுக் கொண்டு
பாரப்பா குழித்தைலந் தன்னை வாங்கி
அப்பனே யடக்கமாய்ப் பதனம் பண்ணு
காரப்பா மனிதருக்குக் காசிடைதா னீந்தால்
கனமான மூலமெல்லாம் பறந்து போமே. 77

மிளகரணை, முக்கத்தாரி, தென்மை வேர் பனைவேர், கரிசாலி வேர், பொழிஞ்சு வேர், இலந்தை வேர், முசுட்டை வேர், கீழா நெல்லி வேர், சிற்றாமுட்டி, வெள்ளிப்பட்டை, யானைப் பட்டை இவையெல்லாம் வகைக்கு ஒரு வீசை வீதம் ஒரு பாண்டத்திலிட்டு குழித்தைலம் வாங்கிக் கொண்டு அதில் ஒரு காசடை வீதம் உள்ளுக்குக் கொடுக்க எல்லாவிதமான மூல ரோகங்களும் பறந்து போகும்.

சகல வாதத்திற்குஞ் சூரணம்

போமப்பா புடத்தைலப் பெருமை சொன்னேன்
புகழான சூரணத்தின் மகிமை கேளு
ஆமப்பா வாதமெலா மொழிந்து போக
அப்பனே சூரணந்தா னொன்று சொல்வேன்
வாமப்பா கொன்றையொடு மாவிலிங்கம்
வளமான கொடுவேலி கண்டங் காலி
காமப்பா வாதத்தின் கரப்பான் பட்டை
கனமான தூதுவளை சங்கம் வேரே. 78

வேரான வெள்ளறுகு வேருங் கூட்டி
விதமான இதுவகைக்குப் பலந்தானைந்து
வாரான பூண்டுடனே காயஞ் சுக்கு
அப்பனே யிந்துப்பு வளைய லுப்பு

காரான கம்பியுப்பு கல்லுப்போடு
கனமான வுப்பெல்லாஞ் சுத்தி செய்து
நாரான வேரெல்லாங் கல்லுரலி லிட்டு
நலமான கடைச்சரக்குத் தூளாய்ப் பண்ணே. 79

பண்ணவே யிரண்டுமொன்றாய்க் கலந்து கொண்டு
பண்பான சூரணத்தைப் பதனம் பண்ணு
கண்ணவே வெருகடிதூள் உள்ளுக் கேற்று
கனமான வாதத்தால் வந்த பீடை
வண்ணவே சூரணத்தைக் கண்ட போது
அப்பனே காணாம லோடிப் போகும்
விண்ணவே வாதத்தின் சூரணந்தான்
விதமான க்ஷயத்துக்குச் சூரணந்தான் கேளே. 80

கொன்றை, மாவிலிங்கம், கொடுவேலி, கண்டங்கத்திரி, வாத கரப் பான் பட்டை, தூதுவளை, சங்கம் வேர், வெள்ளருகு வேர் இவற்றை வகைக்கு 5 பலம் வீதம் எடுத்துக் கொண்டு

பூண்டு பெருங்காயம், சுக்கு, இந்துப்பு, வளையலுப்பு கம்பியுப்பு கல்லுப்பு, முதலியவற்றை எடுத்து சுத்தி செய்து

முன்கூறிய வேர் வகைகளை தனியாகவும் கடைச் சரக்குகளை தனியாகவும் கல்லுரலில் இட்டு இடித்துத் தூளாகச் செய்து கொள்ளவும் பிறகு இரண்டு வகை தூள்களையும் நன்றாகக் கலந்து பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு நாள் தோறும் மூன்று விரல்களால் எடுக்குமளவு தூள் வெந்நீருடன் உட்கொள்ள வாத நோய்கள் யாவும் அகலும்.

க்ஷயமேகத்திற்குச் சூரணம்

கேளப்பா செம்முள்ளி யாடா தோடை
கெடியான சங்கொடு யீயவேரும்
வாளப்பா திரிகடுகு ஏலத்தோடு
வளமான கண்டங்கத் திரிய ரத்தை
நாளப்பா கடுக்காயுஞ் சித்திர மூலம்
நலமான கையானுந் தாளீ சந்தான்
ஆளப்பா இது வெல்லாம் பலந்தா னொன்று
அப்பனே கல்லுரலில் தூளாய்த் தாக்கே. 81

தாக்கென்ற சூரணத்தை வடித்துக் கொண்டு
தனதாகச் சீனியிது மூன்றுஞ் சேரு
வாக்கென்ற சூதமொடு தாள கந்தான்
வளமான பற்பத்தி லெதுவா னாலும்

நாக்கென்ற பணவெடைதான் வைத்துக் கொள்ள
நலமான க்ஷயகாச மீழை போகும்
மாக்கென்ற புகைபுளியும் பெண்ணுந் தள்ளு
அப்பனே யரைக்கீரை துவரை தானே. 82

செம்முள்ளி, ஆடா தோடை, சங்கங்குப்பி, புலித்தொடக்கி ஆகிய இவற்றின் வேரும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கண்டங் கத்திரி, சித்தறுத்தை, கடுக்காய், சித்திரமூலம், கரிசாலை, தாளிச பத்திரி இவை வகைக்கு 1 பலம் எடுத்து கல்லிரலில் போட்டு நன்றாக இடித்துத் தூள் செய்து கொண்டு செய்த சூரணத்தை

வெள்ளைத் துணியில் சலித்து மெல்லிய தூளாக எடுத்துக் கொண்டு சரியளவு சீனி சேர்த்து

இந்த சூரணத்துடன் பணவெடை, ரசபற்பம் அல்லது தாழகபற்பம் சேர்த்து உட்கொள்ள க்ஷயகாச, ஈழை ரோகங்கள் யாவும் விலகும். இதற்கு பத்தியம் புகை பெண், புளி, ஆகாது. அரைக்கீரை, துவரை மட்டும் சேர்த்துக் கொள்வது நல்லது.

தாளிசப் பத்திரிச் சூரணம்

தானான * வரா வோலை யதற்குக் கூட்டுத்
தனதான மற்றதெல்லா மாகா தப்பா
வேனான வின்னமொரு சூரணந்தான் கேளு
வேதாந்த தாளீசப் பத்திரியின் சூர ணந்தான்
கானான வேலமொன்று தாளீ சந்தான்
கருத்தான திரிகடுகு திரிப லாதி
யானான வேலமொடு கிராம்பு பத்திரி
அப்பனே யிதுவெல்லாம் பலமரைதான் கூட்டே. 83

கூட்டவே யிடித்ததனை வடிகட்டிக் கொண்டு
கூறான சீனியதிற் பலமூன் றிட்டு
வாட்டவே வெருகடித்தூ ளுள்ளுக் கேற்று
வளமான மூலத்திற் கடுப்பி ரத்தம்
மாட்டவே மூலத்தின் ரோக மெல்லாம்
மகத்தான வறட்சியொடு ரெத்த பாண்டு
நாட்டவே நீரடைப்புக் கல்ல டைப்பு
நலமான மேகவெள்ளை பறந்து போமே. 84

* வரா வோலை - ஓலை வாளை

சுக்கு, மிளகு, திப்பிலி, (திரிகடுகு) நெல்லிக்காய், கடுக்காய், தானிக்காய், (திரிபலம்) ஏலம், கிராம்பு, தாளிசபத்திரி இவை வகைக்கு அரைபலம் வீதம் எடுத்து நன்றாக இடித்து வடிகட்டிக் கொண்டு மூன்று பலம் சீனி சேர்த்து கலந்த சூரணத்தில் வெருகடித்தூள் (வெருகடி - மூன்று விரல்களால் எடுக்குமளவு) சாப்பிட்டு வர மூலக்கடுப்பு, மூலத்தில் இரத்தம் விழுதல் போன்ற சகல ரோகங்களும் நீரடைப்பு, கல்லடைப்பு மேக வெட்டை, வறட்சி, இரத்தப் பாண்டு முதலான நோய்களும் தீரும்.

பித்த சூரணம்

போமப்பா வின்னமொரு சூரணந்தான்
　　பொற்பாக வேசொல்வேன் புகழாக் கேளு
வாமப்பா ஆவாரம் பட்டை வேரும்
　　வளமான ஓரிலைத்தாமரை கீழ்காய் நெல்லி
ஆமப்பா குமிழம்வேர் சிற்றாமுட்டி
　　அப்பனே யிலவ வேர்வேலி பாசி
காமப்பா நரிப்பயற்றம் நன்னாரி வேரும்
　　கனமான விலாமிச்ச வேருங் கூட்டே. 85

கூட்டப்பா எலுமிச்சை வேருங் கூட்டு
　　கூறான இதுவகைக்குப் பலந்தான் ரெண்டு
ஆட்டப்பா கடுக்காய் மேல மாஞ்சில்
　　அப்பனே சந்தனத்தூள் தேவ தாரம்
வாட்டப்பா விதுவெல்லா மரைதான் கூட்டு
　　வளமாக விடித்ததனை வடித்துக் கொள்ளு
காட்டப்பா சீனியுடன் சீரகமுங் கூட்டு
　　காசினியி லாரறிவார் சூரணத்தின் போக்குத்தானே.86

தானான சூரணத்தை யிருபோ துண்ண
　　தனதான பித்தெரிவு கண்புகைச்சல்
வானான பித்தத்தா லெழுந்த தெல்லாம்
　　வளமாக மாண்டுவிடுஞ் சத்தியஞ் சொன்னேன்
கானான பீனிசங்க ளெல்லாம் போகும்
　　கனமான சூரணந்தா னொன்று கேளு
மானான கடுக்காயுங் கடுகு ரோகணி
　　மகத்தான செண்பகப்பூ பெருமருந்து தானே. 87

ஆவாரம் பட்டை, [illegible] ஓரிலைத் தாமரை கீழாநெல்லி, குமிழ், சிற்றாமுட்டி, [illegible] நரிப்பயறு,

நன்னாரி, விலாமுச்சி, எலுமிச்சை, இந்தச் செடிகளின் வேர்கள் யாவும் வகைக்கு 2 பலம் எடுத்துக் கொள்ளவும்.

கடுக்காய் ஏலம் சடா மாஞ்சில், சந்தனத்தூள் தேவதாரம், இவை வகைக்கு 5 பலம் வீதம் எடுத்துக் கொள்ளவும். இவற்றையெல்லாம் நன்றாக இடித்து வடிக்கட்டி எடுத்துக் கொண்டு சீரகப் பொடியும் சீனியும் சேர்த்து ஒரு நாளைக்கு ஒரு வேளை உண்டு வர பித்தத்தால் உண்டான எரிச்சல் கண்புகைச்சல் வாந்தி, மயக்கம் போன்ற நோய்களெல்லாம் நீங்கும்.

பீனிசத்துக்குச் சூரணம்

தானான திரிகடுகு செங்கத் தாரி
தனதான கொடுவேலி கண்டங் காலி
வானான சங்கம்வேர் சீரகந்தான் ரெண்டு
வளமான இதுவெல்லாம் பல மொன்றாக
கானான கல்லுரலி லிடித்துக் கொண்டு
கனமாக எடுத்ததனை வடித்துக் கொள்ளு
நானான வெருகடித்தா ளிருபோ துண்ண
நலமான வேழுநாட் கொள்ளு கொள்ளே. 88

கொள்ளப்பா மேகசூலை பீனிசங்கள்
கொடிதான நாசிரத்தம் நாசி நாற்றம்
வள்ளப்பா வுடம்பெல்லாந் தினவு குட்டம்
வளமான பொருமலுடன் விம்மல் வீக்கம்
கள்ளப்பா காதினுட சீழு நாற்றம்
கனமான பீனிசங்க ளெல்லாம் போகும்
அள்ளப்பா பீனிசத்தின் சூரணந்தான் சொன்னேன்
அப்பனே யின்னமுமொன் றருள்கின் றேனே. 89

திரிகடுகு, செங்கத்தாரி, கொடுவேலி, கண்டங்கத்திரி சங்கம் வேர் கருஞ்சீரகம், நற்சீரகம் இவை வகைக்கு ஒரு பலம் விதம் எடுத்துக் கொண்டு கல்லுரலில் இட்டு நன்றாக இடித்துக் கொண்டு வடித்துக் கொள்

நாள் ஒன்றுக்கு இருவேளை வெருகடித்தூள் உட்கொள்ள பீனிச நோய்கள், மூக்கிலிருந்து இரத்தம் வழிதல், துர் நாற்றம் வீசுதல், உடம்பெல்லாம் திணவு பொருமல், விம்மல், வீக்கம், காதில் சீழ் வடிதல் போன்ற நோய்கள் யாவும் விலகும்.

கண்டமாருதச் சூரணம்

அருளுகின்றேன் மூலமது வொன்ப துக்கு
அடவாகச் சண்டமாருதச் சூரணந்தான் சொல் வேன்
வருளுகின்றேன் கொடிவேலி சுக்குங் கூட்டி
வளமான மிளகரணை முத்தக் காசு
கருளுகின்றேன் கடுக்காயுங் கடுக்காய்ப் பூவுங்
கனமான புளியாரை சிற்ற ரத்தை
மருளுகின்ற குங்குமப்பூ சாதிக்காயும்
மகத்தான பிரண்டையொடு கொழிஞ்சி வேரே. 90

வேரான சரக்கொன்றை வேருங் கூட்டி
வேதாந்தப் பச்சையொடு மாவேர்ப் பட்டை
யாரான விதுவெல்லா முலர்த்தித் தூளாய்
அப்பனே வகைக்குப்பல மிரண்டுவாங்கி
வாரான விதுவெல்லாம் ரேகித்துக் கொண்டு
வளமான சீனியதிற் கலந்து கொள்ளு
நாரான விருபோது மண்டலந்தான் கொள்ளு
நலமான மூலமெலா மோடிப் போமே. 91

கொடி வேலி, சுக்கு, மிளகரணை, முத்தக்காசு, கடுக்காய், கடுக்காய்ப்பூ, புளியாரை, சிற்றரத்தை, குங்குமப்பூ, சாதிக்காய், பிரண்டை, கொழிஞ்சி வேர், சரக்கொன்றைவேர்.

வேதாந்த பச்சை, மாவேர்ப் பட்டை இவற்றையும் உலர்த்தி எல்லாவற்றிலும் வகைக்கு 2 பலம் எடுத்து நன்றாக இடித்து வடிகட்டி எடுத்துக் கொண்டு அதனுடன் சீனி கலந்து ஒரு நாளுக்கு இரு வேளை வீதம் ஒரு மண்டலம் உட்கொள்ள எல்லாவித மூல நோய்களும் விலகும்.

வல்லாரைக் கிருதம்

போமப்பா சூரணத்தின் மகுத்துவஞ் சொன்னேன்
பொருளான கிருதநெய் நடவைக் கேளு
வாமப்பா வல்லாரைக் கிருதஞ் சொல்வேன்
வளமான வல்லாரைச் சாறுபடி தானொன்று
நாமப்பா வாவாரைச் சாறு படிதா னொன்று
நலமான கொன்றைச்சாறு படிதா னொன்று
காமப்பா தக்காளிச் சாறுபடி யொன்று
கனமான கொன்றைச்சாறு படிதானொன்றே. 92

ஒன்றான வாவின்பால் படிதா னொன்று
உத்தமனே கற்கவகை சொல்லக் கேளு
நன்றான திரிபாலை சாதிக் காயும்
நலமான கல்வத்தி லாவின்பா லாட்டி
வண்டான நெய்தனிலே கலந்துகொண்டு
வளமான வடுப்பேற்றித் தீயை மூட்டி
கண்டான நீர்சுண்டக் கிருத மாகும்
கனமான சர்க்கரைதான் பல மிரண்டுபோடே. 93

போட்டப்பா வடிப்பற்றாமல் கிண்டு கிண்டு
பேரான கிருதத்தைப் பதனம் பண்ணு
வாட்டப்பா பூசித்து மனிதருக்கு
வளமான கரண்டிநிறை யிருபோ துண்ண
ஆட்டப்பா மேகமொடு கிரந்தி யூறல்
அப்பனே சொறிசிரங்கு வெள்ளை ரெத்தம்
நாட்டப்பா சதையடைப்பு நீர்க்கட்டெல்லா
நலமாக வோடிவிடும் நவிலொண் ணாதே. 94

வல்லாரைச் சாறு 1 படி, ஆவாரைச்சாறு, 1 படி, கொன்றைச்சாறு, 1 படி, தக்காளிச்சாறு 1 படி, பசுவின் பால் 1 படி எடுத்துக் கொள்ளவும்.

திரி பலை சாதிக்காய் இவற்றைக் கல்வத்திட்டு பசுவின் பாலால் ஆட்டி முன் எடுத்துள்ள சாறு வகைகளில் கலந்து அதனுடன் இதையும் கலந்து நெய் விட்டு அடுப்பில் வைத்து கொதி வரும் போது கிளறிக் கொண்டே இருக்க வேண்டும். பக்குவம் பார்த்து சர்க்கரை கலந்து அடி பிடிக்காமல் கிளிறிக் கொண்டே சமயம் பார்த்து இறக்கிக் கொள்ளவும்.

இந்த வல்லாரை நெய்யை ஒரு நாளைக்கு இரு கரண்டி வீதம் உட்கொண்டு வர மேகம், கிரந்தி ஊறல், சொறி, சிரங்கு, நீர்க்கட்டு, சதையடைப்பு, முதலிய நோய்கள் யாவும் ஓடிவிடும்.

முயல்ரத்த நெய்

ஒண்ணாத நெய்யொன்று சொல்லக் கேளு
உத்தமனே முயல்ரெத்தம் நெய்யைச் சொல்வேன்
வண்ணாத முயல்ரெத்தம் படியரைதான் வாங்கி
வளமான வெள்ளாட்டு நெய்யை வாங்கு

கண்ணாத தூதளைச்சாறு படிதா னொன்று
கடுத்தான யிஞ்சிச்சாறு படிதா னொன்று
அண்ணாத ஈச்சஞ்சாறு படிதா னொன்று
அப்பனே சங்குச்சாறு படியொன்று வாங்கே. 95

வாங்கப்பா கற்கவகை சொல்லக் கேளு
வளமான ஏலமொடு தேக்கு வங்கம்
ஆங்கவே கற்கடக சிங்கி யோடு
அப்பனே வாலுளுவை கண்டங் கத்திரி
நாங்கவே யிதுவகைக்குப் பலந்தா னொன்று
நலமாக வரைத்ததிலே கலக்கி விட்டே
சாங்கவே யடுப்பேற்றி நீர்சுண்டக் காய்ச்சி
சமர்த்தான நெய்யதனை வடித்துக் கொள்ளே. 96

கொள்ளப்பூ சித்தமிரு போது முண்ணக்
குணமான க்ஷயமெட்டும் பறந்து போகும்
விள்ளவே சுவாச மொடு காச மாந்தை
விதமான விருமலோ டிளைப்பு விம்மல்
கொள்ளவே கொறுகொறுப்பு மேற்சுவாசம்
குணமான சுரமுடனே பிணிக ளெல்லாம்
மெள்ளவே யோடிவிடு மகுத்து வந்தான்
இதமான முயல் நெய்யின் பெருமைதானே. 97

முயல் ரத்தம் ½ படி, வெள்ளாட்டு நெய் ½ படி தூதுவளைச் சாறு 1 படி, இஞ்சிச்சாறு 1 படி, ஈச்சஞ் சாறு 1 படி சங்கங்குப்பிச்சாறு 1 படி, இவற்றைக் கலந்து வைத்துக் கொண்டு.

ஏலம், தேக்கு, இலவங்கம், கற்கடகசிங்கி, வாலுளுவை, கண்டங்கத்திரி, இவை வகைக்கு 1 பலமாக எடுத்து அரைத்து முன் கலந்து வைத்துள்ள சாற்றில் கலந்து அடுப்பேற்றி நீர்ச் சுண்டக் காயவைத்து, நெய்யை வடித்து எடுத்துக் கொள்ளவும்.

இதை பூசித்து வைத்துக் கொண்டு இரு வேளை இரு கரண்டி வீதம் உட்கொண்டு வர எல்லாவிதமான க்ஷய ரோகங்களும், காசம். இருமல் இளைப்பு, விம்மல், நெஞ்சில் கொர கொரப்பு முதலிய நோய்கள் யாவும் விலகும்.

பிரம்ம லேகியம்

தானான வின்னமொரு பிரமமென்ற
தனதான லேகியந்தான் சொல்லக் கேளு
வானான நன்னாரி நத்தைச்சூரி
வளமான சங்கங்குப்பி கூட்டு கூட்டு
கானான செம்முள்ளி யானை நெருஞ்சில்
கனமான மேனியொடு முக்கத் தாரி
ஆனான கூவிளம்வேர் குன்றிவேரும்
அப்பனே செவ்வலரி நெருஞ்சில் செப்பே. 98

செப்பாத கையானும் பொற்றலையுங் கூட்டு
செயலான மருதம்வேர் சின்னி வேரும்
வப்பாத வாகாயக் கருடன் கூட்டு
வளமான விஷ்ணுமூலி கீழா நெல்லி
கப்பாத கரந்தையொடு பொன்னாங் காணி
கனமான இலந்தைவேர் முசுமு சுக்கை
யப்பாத கொல்லையுட கிழங்கு புங்கு
அப்பனே விளாம்பிசினும் விளாமிச்சாமே. 99

ஆச்சென்ற வத்திப்பிஞ் சிலவம் பிஞ்சு
ஆனதொரு கொன்றைப்பிஞ்சு தென்னம்பிஞ்சு
வாச்சென்ற பூவரசம் பிஞ்சு கூட்டு
வளமான நிலப்பனைக் கிழங்கு கூட்டு
நாச்சென்ற கொடிவேலி குமரி கூட்டு
நலமான கூந்தலொடு வேலிப் பாசி
காச்சென்ற விதுவெல்லாம் ரவி யுலர்த்திக்
கனமான வகைக்குப்பலம் மூன்று வாங்கே. 100

வாங்கியே யிடித்ததனை வடித்துக் கொண்டு
வளமான கடுக்காயுங் கடுக்காய்ப் பிஞ்சு
தாங்கியே சாதிக்கா யேலங் கிராம்பு
தலமான பத்திரியுஞ் செண்ப கப்பூ
யாங்கியே திரிகடுகு குங்கு மப்பூ
அப்பனே பலமொன்று தூளாய்ப் பண்ணி
தாங்கியே பனைவெல்லம் பாகு செய்து
தளராத சூரணத்தைக் கொட்டிக் கிண்டே. 101

கிண்டவே மெழுகதுபோற் பாகம் பாரு
கெடியான லேகியத்தை யிறக்கிக் கொண்டு
வண்டவே பூசித்துப் பரணில் வைத்து
வளமான இருபோது பாக்களவு கொள்ளு

நண்டவே பாண்டுடனே காச சூலை
நலமான வெட்டையொடு இருமல் ரெத்தர்
கண்டவே கன்னவிப் புருதி சூலை
கனகண்ட மாலைவெண் குட்டம் போமே. 102

போமப்பா கிராணியொடு மூல குஷ்டம்
பேரான கிரந்தியரை யாப்பு புண்ணு
வாமப்பா வயிற்றுவலி வாத ரோகம்
வழிகாணா தோடுமடா வகுத்திட்டேனே
நாமப்பா நவபிரம லேகியந்தான் சொல்வேன்
நலமான சிவன்வேம்பு சங்கு மூலம்
யாமப்பா கொடிவேலி வெள்ளறுகு முத்தம்
அன்பான வெருமுட்டை சங்கு குப்பே. 103

நன்னாரி, நத்தைச் சூரி, சங்கங்குப்பி, செம்முள்ளி யானை நெருஞ்சில் குப்பைமேனி முக்கத்தாரி, கூவிளம். குன்றி செவ்வலரி, நெருஞ்சில், கரிசாலை, மஞ்சள் கரிசாலை, மருது, சின்னி, ஆகாசகருடன் விஷ்ணுமூலி, கீழா நெல்லி, கரந்தை, பொன்னாங்காணி இலந்தை, முசுமுசுக்கை, கொல்லங்கோவைக், கிழங்கு, புங்கு, விளா இவற்றின் வேர்களும்.

விளாம்பிசின் அத்திப்பிஞ்சு, இலவம்பிஞ்சு, கொன்றைப் பிஞ்சு, தென்னம் பிஞ்சு, பூவரசம் பிஞ்சு நிலப்பனைக்கிழங்கு, கொடிவேலி, சோற்றுக்கற்றாழை, முதியார் கூந்தல், வேலிப்பாசி, இவற்றையெல்லாம் வெயிலில் உலர்த்தி வகைக்கு 3 பலம் எடுத்துக் கொண்டு நன்றாக இடித்து வடிகட்டி எடுத்துத் தனியாக வைத்துக் கொள்ளவும்.

கடுக்காய்ப் பிஞ்சு, ஜாதிக்காய், ஏலம், கிராம்பு தாளிசப்பத்திரி, செண்பகப்பூ, குங்குமப்பூ, திரிகடுகு. இவற்றை வகைக்கு ஒரு பலம் எடுத்து இடித்துத்தூள் செய்து வடிகட்டி எடுத்துக் கொள்ளவும். பனைவெல்லத்தை பாகு செய்து சூரணத்தைக் கொட்டி கிளறிக் கொண்டே யிருக்க இலேகியமாகும். இந்த இலேகியத்தை பூசை செய்து ஒரு பரணியில் எடுத்து வைத்துக் கொண்டு ஒரு நாளைக்கு 2 வேளை கொட்டைப் பாக்களவு உட்கொண்டு வர பாண்டு. காசம். சூளை. வெட்டை , இருமல். கண் அரிப்புறுதி. சூலை, வெண்குட்டம். இருமிஇரத்தம் கக்குதல். கிரந்தி, அரையாப்பு. வயிற்றுவலி, வாத ரோகம் ஆகிய நோய்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடி விடும்.

நவபிரம்ம லேகியம்

குப்பியென்ற கூவிளம்வேர் சின்னி வேரும்
குருவான குன்றிவேர் நத்தைச் சூரி
வப்பியென்ற கருவேலங் காய்பொற்கை யானு
மப்பனே வாதகரப்பான் பறங்கிச் சக்கை
நப்பியென்ற நாயுருவி நன்னாரி கொத்தான்
நலமான கண்டங்கத்திரி சங்கு மூலம்
தப்பியென்ற தழுதாழை கொன்றை முன்னி
தரிதான காரையொடு விலாமிச்சை வேரே. 104

வேரான வழுக்குரா யிலவன் வேரும்
வேதாந்தக் கிரிமூலி சிவன்மூலி வேரும்
ஆரான பூவரசம் வேரும்பட்டை
அப்பனே கொள்ளுக்காய் வேளை மூலம்
நாரான தூதளை புங்கம் வேரும்
நலமான பொற்கையான் வேரும் கூட்டே
காரான பத்திரியுங் குருந்த வல்லி
கனமான அல்லிநாவ லாலம் விழுதே. 105

விழுதான விலுப்பையொடு வெள்ளரி வேரும்
வேதாந்த நாரத்தையொடு நற்றுளசி மூலம்
தழுதான பிசினிவகை சொல்லக் கேளு
தரிதான புங்கினொடு அத்தி மாவும்
மழுதான கருவேலி மாசிக்காய் கூட்டு
மகத்தான வேம்புடனே கொன்றைபிசினிகூட்டு
வழுதான மூலிவகை யுலர்த்திக் கொண்டு
அப்பனே பலமூன்று இடித்துத் தானே. 106

தானான பிசினிவகை யுலர்த்திக் கொண்டு
தப்பாமற் பலமரைதா னிடித்துக் கூட்டு
வானான பிசினியுடன் பாவுசெய்து
வளமான சூரணத்தைக் கொட்டிக் கிண்டு
நானான கடைச்சரக்குச் சொல்லக் கேளு
நலமான திரிகடுகு திரிப லாதி
மானான சாதிக்காய் ஏலங் கிராம்பு
மகத்தானவாலுளுவை லவங்கப்பட்டை தானே. 107

தானென்ற பலமரைதா னிடித்துத் தூவு
தப்பாமற் கிண்டிவர மெழுகாம் பாரு
வானென்ற இறக்கியதைப் பரணில் வைத்து
வளமான விருப்பேது பாக்களவு கொள்ள

நானென்ற பத்தியந்தான் புகைபுளியைத் தள்ளு
நலமான வெண்ணெயொடு பெண்ணுந் தள்ளு
யானென்ற கர்மந்தான் மேக ரோகம்
அப்பனே யஸ்திவெட்டை மேலெரிவுகால்
காந்தல்போமே. 108

போமப்பா வயிற்றுவலி குன்மமெட்டும் போகும்
அப்பனே யஸ்திரெணம் சூலைபதி னெட்டும்
போமப்பா வாதத்தால் வந்த நோய்கள்
பொல்லாத விந்தகுன்மம் பீனிசங்கள்
காமப்பா கண்டமாலை பவுத்தி ரங்கள்
கண்காணா தோடுமடா கர்மநோய்கள்
நாமப்பா வித்தனையும் மிதனாற் றீரும்
நலமான வடமொழிதா னின்னூல் பாரே. 109

பாரப்பா வைத்தியரே யுங்களுக்காய்ப்
பரிவாக யானறிந்து பாடினேன் பாரு
காரப்பா வென்னூல்தா னெழுபத் தொன்றில்
காட்டினேன் யானறிந்து சுருக்காயப்பா
வாரப்பா வறுபத்து நான்குசித்து
வளமாக வாடுதற்குக் கலைக்கியானஞ் சொன்னேன்
ஆரப்பா வறிவார்க ணிகண்டின் போக்கு
ஆதவன்போற் திருமூலர் காணுந் தானே. 110

பாரப்பா வாயிரத்தி னூற்றி லேதான்
பண்பான கருக்கிடைதான் வைத்தியந்தான் தோன்று
யாரப்பா வறிவார்கள் இந்நூ லைத்தான்
அப்பனே முழுது முற்றுங் கண்ட போக்கு
மாரப்பா வைத்தியனோ டெதிர்க்க மாட்டார்
மகத்தான பிரசண்ட வயித்தி யானாவான்
காரப்பா கருவாளி யென்னூல் பார்ப்பான்
கருத்தறியார் கழுதைகளே பாரார்தானே. 111

தானப்பா கருத்தறிய வேணு மென்றால்
தனதான முப்பூவின் கருவைப் பாரு
வானப்பா சாகாம லிருக்க வென்றால்
வளமான வாசியுட வளப்பங் காணும்
காணப்பா வமுர்தமதைக் கொள்ள வென்றால்
கண்மணியே கண்ணோட்டங் கனலைப் பாரு
மாணப்பா மதியமுர்தந் தன்னைக் கொள்ளு
மகத்தான சஞ்சீவி திகைப்பூட்டைக் காணே. 112

அண்டத்தின் பெயர்

காணப்பா பூட்டென்ற திறவு கோல்தான்
கனமான வாயிரத்தெட் டண்டமாச்சு
வாணப்பா வழலையுட மகிமை கண்டால்
வளமான மறைப்பெல்லாங் கண்ணிற் காணும்
மாணப்பா மகத்தான சித்தன் காண்பான்
மற்றோர்கள் மடையர்கள் காணார் பாரு
ஆணப்பா ஆதியந்த கோசபீசம்
அப்பனே அடிமுடியும் அண்டபிண்ட மாச்சே. 113

ஆச்சப்பா கந்தரு வாண்ட மாச்சு
ஆகாச வெளியாச்சு யமந்த தாச்சு
மாச்சப்பா மதியமுர்தம் விந்து மாச்சு
மகத்தான கண்ணினொளி யதனா லாச்சு
காச்சப்பா வல்லாரை கற்பமாச்சு
கண்மணியே யுந்தியெனுங் கமல மாச்சு
நாச்சப்பா நந்தியென்ற வண்ட மாச்சு
நாதாந்தச் சித்தருட மூலங் காணே. 114

பிண்டத்தின் பெயர்

காணப்பா சிவதீட்சை சத்தி தீட்சை
கனமான தீட்சையெலா முப்பூ வாச்சு
யாணப்பா வழலையென்ற வண்ட முப்பூ
அப்பனே யிதினாலே யெல்லா மாச்சு
வாணப்பா விவ்விதங்க ளான மூலம்
வளமான வுலக பிரம விஷ்ணு ருத்திரன்
மாணப்பா மண்டையெனு மண்டந் தன்னை
மகத்தான சிவனெடுத் தமுதுண்ணாரே. 115

உண்ணப்பா இதுவிட்டால் எல்லாம் போச்சு
உத்தமனே காயாதி கற்ப மில்லை
வண்ணப்பா காயென்னா கபாலந் தாண்ட
வளமான சற்குருகான் கபால முற்று
மண்ணப்பா வப்பாச்சு உப்புமாச்சு
மகத்தான வண்டமென்ற பிண்ட மாச்சு
கண்ணப்பா கல்விபெற வுப்பு மாச்சு
கண்மணியே யோகமுடன் ஞான மாச்சே. 116

சிவ்னார் வேம்பு. சங்கங் குபபி, கொடிவேலி, வெள்ளறுகு, முத்தக்காசு, முசுறு முட்டை,

இவற்றுடன் வில்வம் வேர் சிம்மி வேர், குன்றி வேர், நத்தைச் சூரி, கருவேலங்காய், மஞ்சள் கரிசலாங்கன்னி, வாத கரப்பான், பரங்கிச் சக்கை, நாயுருவி நன்னாரி, முடக்கத்தான், கண்டங்கத்திரி, சங்கன் வேர், தழுதாழை வேர், கொன்றை வேர், முள்ளி வேர், காரை வேர், விலாமிச்சை வேர், அமுக்கிரா வேர், இலவம் வேர், வேதாந்த கிரிமுரி வேர், சிவனூலிவேர், பூவரசம் வேர்ப் பட்டை, கொள்ளுக்காய், வேளை வேர், தூதுவளை வேர், புங்கம் வேர், புற்கையான்வேர், தாளிசபத்திரி, குருந்தவள்ளி. அல்லி, நாவல், ஆலம் விழுது, இலுப்பை, விளரிவேர், நாரத்தை துளசிவேர், இவற்றோடு

புங்கம் பிசின், அத்திப்பிசின், மாமரப் பிசின் கருவேலிப்பிசின், வேப்பம் பிசின், கொன்றைப் பிசின் மாசிக்காய் இவற்றையும் எடுத்துக் கொள்ளவும்.

முதலாவதாக மூலி வகைகளை உலர்த்தி இடித்து வடித்து சூரணத்தை 3 பலம் எடுத்துத் தனியாக வைத்துக் கொண்டு பிறகு பிசின் வகைகளை நன்றாக உலர்த்தி இடித்து 1/2 பலம் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

திரிகடுகு திரிபலம், சாதிக்காய், ஏலம், கிராம்பு, வாலுளுவை, இலவங்கப் பட்டை இவற்றை இடித்து சலித்து எடுத்துக் கொள்ளவும்.

சர்க்கரைப்பாகு காய்ச்சி முதலாவதாக கூறப்பட்டுள்ள வேர்களின் பொடியையும், பிசின் வகை பொடிகளையும் கடைச் சரக்குகளின் பொடிளையும் கலந்து பாகில் போட்டு அடிப்பிடிக்காமல் கிளறிக் கொண்டே இருக்கவும். பக்குவம் பார்த்து இறக்கி பரணியில் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு பாக்களவு வீதம் உட்கொள்ள கர்ம வசத்தால் ஏற்பட்ட எல்லா விதமான மேக ரோகங்களும், எலும்பு சூடு, மேலெரிச்சல், கை கால் காந்தல், வயிற்றுவலி, எட்டு விதமான குன்மரோகங்கள் 18 விதமான சூளை ரோகங்கள், கண்ட மாலை, பவுத்திரம், பீனிச ரோகங்கள் யாவும் விலகும். இது அமிர்தம் போன்ற மருந்தாகும்.

மும்மூர்த்தி தைலம்

ஆச்சப்பா மாதினிஷ்டை மார்க்கஞ் சொன்னேன்
அப்பனே தைலத்தின் மார்க்கங் கேளு
மூச்சப்பா மும்மூர்த்தி தைலஞ் சொல்வேன்
உத்தமனே புங்கம்வேர்ச்சாறு படி தா னொன்று

காச்சப்பா பாதிரியின் வேர்ப்பட்டைச் சாறுங்
கனமான கோவையுட கிழங்குச் சாறு
நாச்சப்பா வாழைக்கட்டை யெருக்கஞ் சாறு
நலமான வில்வவேர் வகைபடிதான் சாறே. 117

சாறப்பா நெல்லிச்சாறு வல்லாரைச் சாறு
சதா சிவந்தன் தண்டினது மூலிச் சாறு
யாரப்பா கர்ப்பூரவள்ளிச் சாறு
அப்பனே சங்குச்சாறு செருப்படைச் சாறு
நாரப்பா நற்றுளசி மாசிப் பத்திரி
நலமான சாறுடனே கையான் சாறும்
வாரப்பா தும்பைச்சாறு குமரிச் சாறும்
வளமான மாசிப்பத்திரிச் சாறுங் கூட்டே. 118

கூட்டப்பா விதுவெல்லாம் படிதா னொன்று
குறிப்பறிய ச்சிற்றண்ட வெண்ணெய் ரெண்டு
வாட்டப்பா கற்கமூலி விபரஞ் சொல்வேன்
வளமான கீழாநெல்லி சூரிய காந்தி
ஆட்டப்பா சந்தனத்தூள் கர்க்கட சிங்கி
அப்பனே வால்மிளகு சீரகந்தான் ரெண்டு
நாட்டப்பா சாதிக்காய் ஏலங்கிராம்பு
நலமான லவங்கப்பட்டை மாசிக் காயே. 119

காயோடு இதுவெல்லாம் பலந்தா னொன்று
கனமான வாவின்பால் தன்னா லாட்டி
வாயோடு எண்ணெயிலே கலக்கிக் கொண்டு
வளமாக வடுப்பேற்றித் தீயை மூட்டி
நாயோடு நீர் கண்டி மெழுகுபதத்தைப் பாரு
நலமான தைலத்தை யிறக்கிக் கொண்டு
தாயோடு நெற்பானை தன்னில் வைத்து
தயவாக ஏழுநாட்சென்று பாரே. 120

பாரப்பா தைலத்தை முழுகி னாக்கால்
பாழான கிழவனவன் குமர னாவான்
யாரப்பா நரைதிரையு மறைந்து போகும்
அப்பனே சூலையொடு ரணங்கள் கட்டி
நாரப்பா மேககர்ம வியாதி யெல்லாம்
நலமாகப் பொடிப்பொடியாய்ப் பறந்துபோகும்
காரப்பா கணப்பாண்டு கர்ம மூலம்
கைகடந்த மூலச்சூ டெல்லாம் போமே. 121

புங்கம் வேர் இடித்துப் பிழிந்த சாறு 1 படி, பாதிரி வேர்ப்பட்டைச் சாறு, கோவைக் கிழங்குச் சாறு, வாழைக் கட்டைச் சாறு, எருக்கஞ் சாறு, வில்வ வேர்ச் சாறு, நெல்லுச் சாறு, வல்லாரைச் சாறு, கற்பூர வல்லிச் சாறு, சங்கங்குப்பிச் சாறு, செருப்பிடைச் சாறு, துளசிச்சாறு, மாசிபத்திரிச் சாறு, கரிசாலைச்சாறு, தும்பைச் சாறு, குமரிச்சாறு, இவற்றுடன் சிவமூலிச் சாறு, (சதாசிவந்தன் தண்டினது மூலிச் சாறு) இவையெல்லம் வகைக்கு 1 படி வீதம் எடுத்துக் கொண்டு விளக் கெண்ணெய் 2 படி

கீழா நெல்லி, சூரியகாந்தி, சந்தனத்தூள், கற்கடசிங்கி, வால் மிளகு, சீரகம், கருஞ்சீரகம், சாதிக்காய், ஏலம், கிராம்பு, இலவங்கப்பட்டை மாசிக்காய், இவையெல்லாம் வகைக்கு 1 பலம் வீதம் எடுத்து பசுவின் பாலால் ஆட்டி விளக்கெண்ணெயில் கலந்து அதனுடன் சாறு வகை கலவையையும் சேர்த்து அடுப்பேற்றி சுண்டக் காய்ச்சவும்.

அடிப்பற்றிக் கொள்ளாமல் கிளறிக் கொண்டேயிருந்து நீர் வற்றி மெழுகு பதமாக வரும் பக்குவத்தில் இறக்கி அதை அப்படியே ஒரு நெல் பானையில் வைத்து மூடி வைக்கவும்.

7 நாள் கழித்து தைலத்தை எடுத்து தலைக்குத் தேய்த்து முழுகி வர நரை திரைகள் மாறிப்போகும். சூலை நோய், இரணங்கள், கட்டி மேக நோய்கள், பாண்டு நோய்கள், மூல நோய்கள், மூலச்சூடு முதலான எல்லா நோய்களும் சொல்லாமல் ஓடி விடும்.

கண்டா விழ்தம்

போமப்பா கண்டாவிழ்தஞ் சொல்லக் கேளு
　　பொருளான கலைக்கொம்பு யானைக் கொம்பு
நாமப்பா காண்டாமிரு கத்தின் கொம்பு
　　நலமான வதிமதுர மக்கிரா காரம்
காமப்பா கோஷ்டமுடன் எலங் கிராம்பு
　　கனமான துமபராட்சகமுஞ் சேரு
வரமப்பா இவை யெல்லாஞ் சமன தாக
　　வானதொரு திப்பிலியு மாதளம் விரையே. 122

விரையான பொடியுடனே சீனி கூட்டி
விதமான தேனதிலே குழைத்துக் கொண்டு
அரையான நாவினிலே தேய்த்திட் டாக்கால்
அப்பனே குளுமையுடன் தோட சன்னி
கரையான தோஷமெலாங் கரைகெட் டோடும்
கனமான நோயெல்லாங் கழன்று போகும்
நரையான நாவறட்சி சுரங்கள் போகும்
நலமான தாகமுட னழலும் போமே. 123

போமப்பா என்னைப்போ லார்தான் சொல்வார்
புகழான என்னந்தி யருளி னாலே
காமப்பா கணக்காய்க்கை பாகஞ் சொன்னேன்
கண்மணியே யறிவுள்ளோர் தேர்வாரையா
வாமப்பா பன்னீ ராயிரம் போலே
வளமாக யார்சொன்னார் வகுத்துப்பாரு
நாமப்பா என்னந்தி யருளி னாலே
நலமாகச் சொல்லிவிட்டே னின்னங் கேளே. 124

கேளப்பா கிருதமொடு நெய்யுஞ் சொன்னேன்
கெட்டியா ஞானமொடு காந்தஞ் சொன்னேன்
வாளப்பா வழிதுறைகள் காணச் சொன்னேன்
வளமான வறிவுடனே விவேகஞ் சொன்னேன்
காளப்பா வெண்ணெயொடு தைலஞ் சொன்னேன்
கண்மணியே யென்னைப்போ லார்தான் சொல்வார்
ஆளப்பா சகலருக்குந் தோணச் சொன்னேன்
அப்பனே மாத்திரைகள் கலிக்கஞ் சொன்னேன். 125

சொன்னனப்பா லேகியங்கள் எண்ணெய்சொன்னேன்
சொல்பெரிய புடத்தைலஞ் சக்கரங்கள் சொன்னேன்
வன்னனப்பா யோகமுடன் வாசி சொன்னேன்
வளமான தேவதைகள் வசியஞ் சென்னேன்
கன்னனப்பா ஊமையெழுத் ததனைச் சொன்னேன்
கனமான வழலைமுப்பூவுஞ் சொன்னேன்
பன்னனப்பா யோகநிஷ்டை யமுர்தஞ் சொன்னேன்
பண்பான இனிமேலே சொல்லக் கேளே. 126

மான் கொம்பு, யானைக் கொம்பு, காண்டா மிருகத்தின் கொம்பு, அதிமதுர்ம், அக்கிரக் காரம், கோஷ்டம், ஏலம், கிராம்பு, தும்பராஈட்சகம், இவையெல்லாம் சம எடையாக எடுத்துக் கொண்டு.

திப்பிலி மாதுளம் வித்து, இவற்றையும் பொடித்து சர்க்கரைச் சேர்த்து தேனில் குழைத்து நாவில் தேய்க்க சன்னி தோஷங்கள், நாவறட்சி, சுர ரோகங்கள் யாவும் தீரும்

தோஷக் கிஷாயம்

கேளப்பா கிழாயத்தின் பெருமை கேளு
கெடியான முத்தமோ டக்கிரா காரம்
வாளப்பா வதிமதுரங் கோஷ்ட மூலம்
வளமான லவுங்கமொடு சித்திர மூலம்
நாளப்பா திரிகடுகு திரிபலாதி
நலமான வெட்பாலை சீரகந்தான் ரெண்டு
ஆளப்பா மிளகுதனைப் பற்பம் பண்ணி
யப்பனே சீரகத்தைப் பொரிய வையே. 127

வையப்பா மற்றதெல்லாம் பொடித்துக் கொண்டு
வளமான சலந்தன்னைப் படியளந்து வாரு
வையப்பா வெட்டொன்றாய்க் காய்ச்சிக் கொண்டு
அப்பனே மனிதருக்கு முப்பொழுது வாரு
வையப்பா கைவிட்ட தோஷ மெல்லாம்
வகைகடந்த தோஷமுடன் சுரங்கள் போகும்
வையப்பா வெலும்பு ரெத்தமாங்கிழத்தில் வந்த
வன்பான வறுபத்து நான்கும் போமே. 128

முத்தக்காசு, அக்கராகாரம், அதிமதுரம், கோஷ்டம், இலவங்கம், சித்திரமூலம், திரிகடுகு, திரிபலா, வெட்பாலை, கருஞ்சீரகம், நற்சீரகம், மிளகு, இவற்றை எடுத்துக் கொண்டு (மிளகைப் பொடித்துக் கொள்ளவும், சீரகத்தைப் பொரித்துக் கொள்ளவேண்டும்) மற்றச் சரக்குகளை பொடித்த பொடியோடு இவையும் கலந்து 1 படி நீரில் கரைத்து எட்டில் ஒரு பங்காக குறையும் வரை நன்றாகக் காயவைக்க வேண்டும்.

இந்தக் கஷாயம் மூன்று வேளை உட்கொள்ள சுர ரோகங்கள் தீரும். எலும்பு இரத்தம் சம்பந்தமான எல்லா வித நோய்களும் தீரும்.

சன்னிக் கிஷாயம்

போமப்பா யின்னமொரு கிழாயஞ் சொல்வேன்
புகழான கிழாயமதை யாருஞ் சொல்லார்
வாமப்பா வாலுளுவை சிவனார் வேம்பு
வளமான கண்டங்கத் திரிபாரத்தை

நாமப்பா நஞ்சுமறி கழுதைப் பாலை
நலமான திரிகடுகு வசம்பு வெள்ளுள்ளி
காமப்பா கொடிவேலி கஞ்சாங் கோரை
கனமான போஸ்தக்காய் மாசக்காயே. 129

காயப்பா சாதிக்காய் சிஷ்டி யேலம்
கனமான லவங்கமொடு பறங்கிச் சக்கை
வாயப்பா வால்மிளகு சங்கம் பட்டை
வளமான நாயுருவி புளியம் பட்டை
நாளப்பா தூதளை முக்கத் தாரி
நலமான பேய்ப்புடோல் கூவிளம் வித்து
பேயப்பா நாமமுடன் கருஞ்சீரகங் கூட்டு
புகழான மாவிலிங்கம் வேருங் கூட்டே. 130

சேரப்பா வால்மிளகு மிளகு ரெண்டும்
செம்மையுடன் பற்பமதாச் செய்து கொண்டு
வாரப்பா மருந்தெல்லா மிடித்துக் கொண்டு
வளமாகக் கூடச்சேர்த்து தண்ணீர்படி ரெண்டு
பாரப்பா வெட்டொன்றாய்க் காய்ச்சிக் கொண்டு
பதிவாக சன்னிகண்ட மனிதர்க்கீந்தால்
நாரப்பா சன்னிவிஷ தோஷங்கள்
நாடாது கிழாயங்கண்ட போது தானே. 131

வாலுளுவை, சிவனார் வேம்பு, கண்டங்கத்திரி, சித்தறுத்தை, கழுதைப்பாலை, நஞ்சுமூலி, திரி கடுகு, வசம்பு, வெள்ளைப் பூண்டு, கொடி வேலி, கஞ்சாங் கோரை போஸ்தக்காய், மாசிக்காய், சாதிக்காய், மஞ்சிஷ்டி, ஏலம், இலவங்கம், பரங்கிச் சக்கை, வால்மிளகு, சங்கம்பட்டை, நாயுருவி, புளியம் பட்டை, தூதுவளை, முக்கத்தாரி, பேய்புடல், கூவிளம்பித்து, கருஞ்சீரகம், மாவிளங்கம் வேர், இவற்றுடன் வால் மிளகு, மிளகு இரண்டையும் பற்பமாக செய்து கொண்டதை

முன் கூறிய வேர் வகைகளை இடித்துப் பொடியுடன் மிளகு பற்பத்தையும் சேர்த்து 2 படி தண்ணீரில் நன்றாய்க் கலந்து அடுப்பேற்றி 8-ல் ஒன்றாக சுண்டும் படி காய வைக்கவும். இந்தக் கஷாயம் சகல விதமான சன்னி ரோகங்களையும் தீர்க்கும்.

பித்தநோய்க் கிஷாயம்

தானப்பா மாத்திரைக ளனுப்பான மாகத்
தானீய நோயெல்லாந் தவறுண் டேபோம்
வானப்பா வின்னமொரு கிழாயஞ் சொல்வேன்
வளமான கிழாயந்தான் மெத்த நன்று
யானப்பா ஒதியம்பட்டை யத்திப் பட்டை
அப்பனே சிற்றாமுட்டி பேரா முட்டி
நானப்பா வில்வவேர் நெல்லி யீர்க்கு
நலமான நரிப்பயற்றனி லவன் வேரே. 132

வேரப்பா நெருஞ்சில்வேர் நேர்பொரியுங் கூட்டு
வேதாந்த ஓரிலைத்தாமரை கீழ்காய் நெல்லி
நாரப்பா ஆவாரம் வேருங் கூட்டு
நலமான தாணியுடன் சீரகந்தான் கூட்டே
வாரப்பா சீரகத்தைச் சட்டிதனிலே போட்டு
வகுத்துமே மருந்தெல்லா மிடித்துப் போட்டு
காரப்பா தண்ணீர்படி முக்கால் விட்டுக்
கனமான தீயெரித் தெட்டொன் றாக்கே. 133

ஆக்கப்பா சிங்கிபற்பம் போட்டுக் கொள்ளு
ஆனதொரு மேலெரிவு கைகால் காந்தல்
வாக்கப்பா வயிறெரிவு நெஞ்செரிவு போகும்
வளமான கண்ணெரிச்சல் மண்டைக் காந்தல்
சாக்கப்பா சஞ்சாரப் பித்த நோய்கள்
சமர்த்தான நோயெல்லா மாண்டு போகும்
நாக்கப்பா நந்தீச ரருடன் னாலே
நலமாகப் போகுமடா நவின்றிட் டேனே. 134

ஓதியம் பட்டை, அத்திப்பட்டை, சிற்றாமுட்டி வேர், பேராமுட்டிவேர், வில்வம் வேர், நெல்லி வேர், ஈர்க்கு நரிப்பயிற்றின் வேர், இலவம் வேர், நெருஞ்சில் வேர், ஓரிலைத் தாமரை, கீழாநெல்லி, ஆவாரம், இவற்றின் வேர்களை எல்லாம் எடுத்து இடித்து ஒரு சட்டியில் போட்டுக் கொண்டு சீரகமும் சேர்த்து முக்கால் படி தண்ணீர் விட்டு 8-ல் ஒன்றாக சுண்டக் காயவைத்து எடுத்துக் கொள்ளவும்.

இந்தக் கஷாயத்தில் சிங்கி பற்பம் போட்டு உட்கொள்ள மேலெரிச்சல், கை கால் காந்தல், கண்ணெரிச்சல், மண்டைக் காந்தல், வயிறு எரிதல், நெஞ்சு எரிதல், மற்றும் பித்த நோய்கள் எல்லாம் சொல்லாது ஓடி விடும்.

ஆக்கிராணத்தூள்

ஏனப்பா வாக்கிராண மகிமை சொல்வேன்
என்மகனே யென்னைப்போ லியார்தான் சொல்வார்
வானப்பா தும்பைவேர் வெண்மிளகு கூட்டு
வளமான முருங்கைவேர் பழம்புண் ணாக்கு
யானப்பா இதுவெல்லா முலர்த்திக் கொண்டு
அப்பனே பலமொன்று தூக்கி வாங்கு
நாமப்பா தூள்பண்ணி கட்டிக் கொண்டு
நலமாக பரணைதனில் பதனம் பண்ணே. 135

பண்ணப்பா பூசித்து சன்னி நோய்க்குப்
பணவெடைதா னெடுத்துநா சியினில் போடு
எண்ணப்பா பிசகாது சொன்னேன் சொன்னேன்
இணைக்கமுட னிம்முறையைச் செய்து பாரு
வண்ணப்பா சன்னியொடு நாவறட்சி போகும்
வளமான பீடைநோ யெல்லாம் போகும்
மண்ணப்பா வாக்கிராண மறைப்பே யில்லை
மகத்தான வைத்தியரே மகிழ்ந்து பாரே. 136

முப்பூ பெருமை

பாரப்பா விதுக்கெல்லா முப்பூ வேணும்
பண்பான முப்புதொட்டால் வயித்திய னாவான்
காரப்பா முப்புவிட்டால் விடாது கர்மம்
கனமான சிவநிஷ்டை முப்பூ வையா
யாரப்பா முப்பூவும் க்ஷணத்தி லாகும்
அப்பனே முப்பூவை வேண்டிக் கொள்ளு
நாரப்பா வைத்தியர்க்கு இந்நூல் போதும்
நாதாந்தம் போகுமடா நவிலக் கேளே. 137

கேளப்பா தேறுவோர்க் கெந்நூல்தான் வேணும்
கேள்மகனே ஞானியர்க் கெந்நூல்தான் வேணும்
வாளப்பா வென்னூலைப் பார்க்கா மூடர்
வளமான செய்முறைகள் பலியா தையா
ஆளப்பா கைபாகந் திறமாய்ச் சொல்வேன்
அப்பனே செய்பாக மறிந்து சொன்னேன்
நாளப்பா கருக்களுடன் செய்பா கந்தான்
நலமான வைத்தியரே நன்மை பாரே. 138

ஞான புத்தி

பாரப்பா வேணமுறை யதிலே சொன்னேன்
பண்பான கருக்கஎெல்லா மிதிலேசொன்னேன்
ஆரப்பா வறிவார்கள் கருக்கிடையின் சூட்சம்
அப்பனே முழுதுமுற்றுங் கண்டபேர்க்கு
யாரப்பா வொருநாளுங் குறைவ ராது
அப்பனே சடாட்சரம்போ லிந்நூ லையா
நாரப்பா வாயிரத்து இருநூற்றுக்கு
நலமான விந்நூல்தான் திறவு கோலே. 139

கோலான முதல்மொழிதான் காவியஞ் சொன்னேன்
குருவான பிற்பாடு கலைக்கியானஞ் சொன்னேன்
வாலான பன்னீரா யிரந்தான் சொன்னேன்
வளமான நூல்கஎெல்லாந் தேர்ந்து சொன்னேன்
காலான காற்றலையாய் மறைத்த தெல்லாம்
கனமான நிகண்டுமுந் நூற்றிற் சொன்னேன்
யாலான முந்நூற்றை யார்கொடுக்கப் போரார்
அப்பனே நிகண்டைத்தான் தேடிக் கொள்ளே. 140

கொள்ளப்பா நான் சொன்ன முப்பூ வைத்தான்
கெதிகெட்ட நாதாக்கள் கொடுக்கா ரப்பா
வாளப்பா நவகோடி சித்த ரெல்லாம்
வாங்கிமிகத் தெளிந்தார்கள் வண்மை யாக
காளப்பா கனகசபை நடனங் கேட்டு
கயிலாச வர்க்கமெனக் களித்தார் சித்தர்
நாளப்பா செயநீரின் பெருமை கேட்டால்
நாதாந்த வன்பதிலே நன்மை பாரே. 141

பாரப்பா வெகுகோடி சித்துக் கெல்லாம்
பண்பான செயநீரி லெடுத்து வாரு
வாரப்பா வடமொழியில் நவகோடி போக்கு
வளமான ஜெயநீரா மின்னூலையா
காரப்பா வெனைப்போன்ற பொதிகைச் சித்தர்
கனமான பதினெண்பேர் குருநூ லென்னூல்
ஆரப்பா வறிவார்கள் பதினெண் பேரும்
அப்பனே வடதேச மிருந்தோ ராச்சே. 142

ஆச்சப்பா வீசனுட சபதத்தாலே
அப்பனே யென்னைப்போற் பொதிகை சேர்ந்தார்கள்
காச்சப்பா சித்தர்களுங் கூட்ட மானார்
[illegible]வான பொதிகையிலே [illegible]ந்த்தை வைத்தார்

நாச்சப்பா தென்பொதிகைச் சித்தர்க் கெல்லா
நாதாந்த வென்னூல்தான் தாய்நூலப்பா
மாச்சப்பா வடமொழியொன் றரும புத்திரன்
மகத்தான வென்னுடைய வாக்கியந் தானே. 143

தானான மடையருக்கே யின்னங் கேளு
தாக்கான வென்னூற்றான் செப்பே டப்பா
வானான செப்போலை தன்னி லையா
வளமான தேறுவதோர்க் கெழுதி விட்டேன்
கானான கருவாளி தேறுவா னென்று
கனமான நான்முகனுந் தேறச் சொன்னேன்
நானான தருமவான் தேர்வா னையா
நலமான கருமிகளோ தேரார் பாரே. 144

வல்லாரைக் கற்பம்

பாரப்பா கற்பத்தின் மகிமை கேளு
பண்பான வல்லாரை கொடிமூலம் வாங்கிச்
சேரப்பா சுத்திசெய்து உலர்த்திக் கொண்டு
செவையான கல்லுரலில் தூளாய்ப் பண்ணி
வாரப்பா சுரண்டி நிறை சூரணத்தை
வளமான ஊசிநீர் தன்னிற் கொள்ளு
பேரப்பா யோகநிஷ்டை கற்பஞ் சொன்னேன்
புகழான ஞானத்தின் கற்பங் கேளே. 145

யோகச் சூரணம்

கேளப்பா நிஷ்டையுட கற்பஞ் சொன்னேன்
கெடியான யோகத்தின் கற்பங் கேளு
வாளப்பா வடிமூலந் தன்னை வாங்கி
அப்பனே சுத்திபண்ணி யுலர்த்திக் கொண்டு
காளப்பா கல்லுரலில் தூளாய்த் தாக்கி
கரண்டி நிறை யுட்கொள்ளு ஞானப் போக்கு
மாளப்பா ஞானமது வன்பருக்கு
மகத்தாகச் சித்திக்கும் வகுத்துப் பாரே. 146

தும்பை வேர், முருங்கை வேர், வெள்ளை மிளகு, பழைய புண்ணாக்கு வேர் இவற்றை நன்றாக உலர்த்தி இவை வக்க்கு 1 பலம் எடுத்து தூள் செய்து பரணியில் ப்க்குவப் படுத்தி வைத்துக் கொண்டு சன்னி நோய் கண்டவர்க்கு மூக்கில் உறிஞ்சக் கொடுக்க ரோகம் தீரும்.

வங்கபற்பம்

பாரப்பா வங்கபற்பஞ் சொல்லக் கேளு
பரமான நாதாக்கள் மறைத்தா ரையா
யாரப்பா வங்கமது பலந்தா னெட்டு
அப்பனே சுத்தசலந்தன்னைச் சேர்த்து
வாரப்பா வஞ்சுதர முருக்கிச்சாய்க்க
வளமான வங்கமது வெள்ளி வட்டாம்
நாரப்பா முன்சொன்ன சிவன்வேம்புத் தைலம்
நலமான வதில்முப்பூ போட்டுக் கொள்ளே. 147

கொள்ளப்பா வாட்டிவட்டாய் மெழுகுபோல
குறையாமல் மெழுகுதனைக் கவசம் போடு
வள்ளப்பா விந்ததனாற் கவசம் போடு
வளமாக மண்சீலை யேழும் போடு
நள்ளப்பா ரவியுலர்த்திக் காயப் போடு
நலமான முப்பத்திரண் டெருவிற்போடு
அள்ளப்பா வரனுதித்தாற் போலே வெள்ளை
அப்பனே போட்டெடுத்து மண்கவசம் வாங்கே. 148

வாங்கப்பா மெழுகதுவுங் கருகி நிற்கும்
வளமான வங்கமது வெண்ணீர் போலாம்
வாங்கப்பா வெண்ணிறத்தை யென்ன சொல்வேன்
அப்பனே வங்கபற்பந் தேனிற் கொள்ளு
வாங்கப்பா க்ஷயகாச மீளை ரெத்தம்
வகையாக க்ஷயமெட்டுஞ் சாந்தமாமே
வாங்கப்பா வெண்ணெயிற் பணவெடைதான் கொண்டால்
வந்தமே கங்களிருபத் தொன்றும் போமே. 149

8 பலம் வங்கத்துடன் சுத்த சலம் சேர்த்து 5 முறை உளுக்கிக் சாய்க்க வங்கம் வெள்ளி போல் நிறம் கொடுக்கும்.

சிவன் வேம்பு தைலத்தில் முப்பூ போட்டு மெழுகு போலரைத்து வங்கத்திற்கு கவசம் செய்து சீலைமண் செய்து சூரிய வெப்பத்தில் காய வைத்து 32 எருவில் புடம் போட்டு எடுக்கவும்.

வங்கம் தூய வெள்ளை நிறமாக சாம்பலாகி இருக்கும். இந்த வங்கப் பற்பத்தை பணவெடை தேனில் குழைத்து உட்கொள்ள க்ஷய; காச, ஈழை ரோகங்கள் யாவும் தீரும். வெண்ணெயில் குழைத்து உட்கொள்ள மேக ரோகங்கள் யாவும் தீரும்.

தாம்பிர பற்பம்

போமப்பா வனுபான மறிந்து கொண்டால்
புகழான சூலைபதி னெட்டும் போகும்
வாமப்பா பீனிசங்கள் கபாலச் சூடெல்லாம்
அப்பனே யகன்றுவிடும் நோய்கள் பாரு
தாமப்பா தாம்பிரத்தின் வெள்ளை கேளு
தனமான தாம்பிரந்தான் பலந்தா னஞ்சு
நாமப்பா காச்சியதை யுமி நீரிற்றான்
நலமான பன்னிரெண்டு தரந்தான் தோயே. 150

தோயப்பா செம்பதுவும் களிம்பு போச்சு
துய்யநிற மானதொரு வயச்செம் பைத்தான்
வோமப்பா முப்புச்சுண்ணங் காரங் கொண்டு
உத்தமனே கல்வத்திற் பலம்ரெண் டிட்டு
நோயப்பா வண்டநீர் தன்னா லாட்டி
நுணுக்கமாய் மெழுகதுபோ லாகும் பாரு
மோயப்பா வழித்தெடுத்துச் செம்பின்மேற் பூசு
மிதமாக ரவிதனிலே சாமம் வையே. 151

வையப்பா கிடுகிடென்று நடுங்கிச் சால
வளமான செம்பதிலே யேழு சீலை
கையப்பா பிலாமரத்தைத் தோண்டிக் கொண்டு
கனமான செம்பைவைத் தாப் படித்து
நையப்பா வதின்மேலே மண்ணுஞ் செய்து
நலமான புடம்போட் டெடுத்துப் பாரு
மையப்பா வெள்ளைநிற மென்ன சொல்வேன்
மேலான தாம்பிரவெள்ளை பதனம் பண்ணே. 152

பண்ணப்பா பாவகர்மம் பாவி கட்கும்
பண்பான வபானனுடன் வியானன் கூடி
வண்ணப்பா யானைக்கால் வியாதி பாரு
அப்பனே யவரவர்செய் தபாவ ரோகம்
கண்ணப்பா நாற்பதுநாள் பற்பங் கொள்ளு
கனமான வனுபான மாகக் கொள்ளு
விண்ணப்பா மண்ணைவிட் டோடிப் போகும்
வேதாந்த பற்பத்தின் மகுத்துவங் காணே. 153

கர்ம வியாதி

காணப்பா வுதானனுடன் சமானன் கூடி
கனமான கருமிகட்கு வாத ரோகம்
வீணப்பா மகாகோடி பாவஞ் செய்தால்
வினையான விரைவாதம் வந்து சேரும்

வாணப்பா வனுபானஞ் சூரணத்திற் கொள்ளு
அப்பனே வாய்வெல்லாம் நிலைவிட் டோடும்
மாணப்பா சடத்திலுள்ள வெண்பத்து நாலும்
மதிகெட்டே யோடிவிடும் மகுத்துவம் பாரே. 154

பித்தளைப் பற்பம்

பாரப்பா பற்பத்தைச் செய்தோர்க் கெல்லாம்
பண்பான நல்வினைகள் வந்து சேரும்
வாரப்பா வறிவார்கள் கர்மந் தீர்ந்தால்
அப்பனே தர்மமது இவர்க்கே யெய்தும்
வீரப்பா பித்தளையின் வெள்ளை கேளு
விதமான பித்தளையைக் காச்சு காச்சு
நாரப்பா மூன்றுதரம் விந்திற் றோய்க்க
நலமான பித்தளையின் களிம்பு போச்சே. 155

5 பலம் சுத்தமான தாமிரத்தை எடுத்துக் கொண்டு உலையில் காய வைத்து உமி நீரில் தோய்க்க வேண்டும். இவ்வாறு 12 முறை தோய்க்க செம்பின் களிம்பு நீங்கி பிரகாசிக்கும்.

முப்பூச் சுண்ணம் 2 பலம் கல்வத்தில் போட்டு முட்டை வெண் கருவால் ஆட்டி மொழுகு பதத்தில் வடித்து எடுத்து மேற் கூறிய செம்பின் மேல் பூசி சூரிய வெப்பத்தில் காய போடவும்.

முற்றிய பலாமரத்தில் ஒரு குழியுண்டாக்கி அதில் செம்பை வைத்து மேலே ஆப்படித்து அதற்கு சீலை மண் செய்து புடம் போட்டு எடுக்க தாமிரம் வெள்ளி போல் பிரகாசிக்கும். இந்த பஸ்பத்தை தக்க அனுபானத்துடன் உட்கொள்ள யானைக்கால் நோய் போன்ற கொடிய கர்ம ரோகங்கள் யாவும் நீங்கி விடும்.

போச்சப்பா வண்டமெழுகுக் குகைதான் பண்ணி
பொருளான பித்தளையைக் குகைக்குள்வைத்து
வாச்சப்பா முந்திரிவித்துத் தைலம் வாங்கி
அப்பனே குகைக்குள்ளே தைல மூற்றி
காச்சப்பா மேற்குகைதான் வலுவாய் மூடி
கனமான சந்துவாய் மண்சீலை செய்து
நாச்சப்பா புடம்போட் டெடுத்துப் பாரு
நலமான வெண்ணீறாம் நவிலக் கேளே. 156

கேளப்பா குகையை நன்றா யுடைத்துப் பாரு
கெடியான பற்பத்தைப் பதனம் பண்ணு
வாளப்பா பற்பத்தை வியாதிக் கீய
வளமான கன்மநோய் நாடா தப்பா
நாளப்பா நாட்செல்ல மாட்டா தையா
நலமான சடுதியிலே நோய்கள் தீரும்
மாளப்பா வைத்தியர்க்கே பற்பம் வேணும்
இல்லாட்டால் வைத்தியர்க்கோ தருமமில்லை. 157

பித்தளையை உலையில் வைத்து நன்றாகக் காய்ச்சி முட்டை வெண்கருவில் தோய்க்க வேண்டும். மூன்று முறை தோய்த்தெடுக்க அதன் களிம்பு நீங்கும்.

இந்த அண்டமெழுகை குகையாகச்செய்து அதற்குள் பித்தளையை வைத்து அதனுள் முந்திரி வித்து தைலம் ஊற்றி மேல் வாய் மூடி சீலைமண் செய்து புடம் போட்டு எடுக்க பித்தளை வெண் நீறு போன்ற பற்பமாக்கி விடும். இந்தப் பித்தளை பற்பமும் எல்லா விதமாக கர்ம நோய்களையும் தீர்க்கும்.

அயபற்பம்

இல்லையப்பா வயபற்பஞ் சொல்லக் கேளு
இதமான வயத்தைநன்றாய்த் தகடாய்த்தட்டி
வல்லையப்பா பனிநீரிற் காய்ச்சிக் காய்ச்சி
வளமான வேமுதரங் தோய்த்தா யானால்
மல்லையப்பா வருணனிறம்போ லயந்தா னாகும்
அப்பனே யயத்தகடு வெட்டை யாச்சு
கல்லையப்பா முப்பூவு முப்பூச் சுண்ணங்
கனமான வாய்நீரால் குழைத்துக் கொள்ளே. 158

கொள்ளப்பா தகட்டின்மேற் றளமாய்ப் பூசி
கெடியான மண்சீலை வலுவாய்ச் செய்து
வள்ளப்பா ரவியுலர்த்திப் புடத்தைப் போடு
அப்பனே நீறியது வெண்ணீ றாகும்
மள்ளப்பா வெண்ணீற்றை யெடுத்துக் கொண்டு
வளமான பணவெடைதான் வியாதிக் கீய
நள்ளபபா வற்றிவிடும் பாண்டு வெல்லாம்
நலமான பற்பமடா நலம தாமே. 159

இரும்பை லேசான தகடாகத் தட்டிக் கொண்டு உலையில் பழுக்கக் காய்த்து பனிநீரில் தோய்க்க வேண்டும். இவ்வாறு ஏழுதரம் தோய்த்தால் இரும்புத்தகடு சிவந்த நிறமுடைய வெட்டையாகும்.

முப்பூச் சுன்னமும் வாய் நீரால் குழைத்து தகட்டின் மேல் பூசி சீலை மண் செய்து சூரிய வெப்பத்தில் உலர்த்தி புடம் போட வெண்ணிறமான பற்பம் கிடைக்கும் இந்த பற்பம் பாண்டு ரோகங்கள் அனைத்தும் தீர்க்கும்.

வெண்கலப் பற்பம்

ஆமப்பா வெங்கலத்தின் பற்பஞ் சொல்வேன்
அப்பனே புளியிலைச்சாறு பிழிந்து கொண்டு
வாமப்பா முப்பூச்சுண்ணங் களஞ்சி போட்டு
வளமான வெண்கலத்தைக் காய்ச்சித் தோய்க்க
நாமப்பா வெண்கலத்தின் களிம்பு போச்சு
நலமான வெண்கலத்தையெடுத்துக்கொண்டு
காமப்பா புளியைநன்றாய்க் குகையாய்ப் பண்ணி
கனமான வெண்கலத்தை யதனில் வையே. 160

வையப்பா மேற்குகையை நன்றாய் மூடி
வளமான மண்சீலை யேழுஞ் செய்து
பையப்பா ரவியுலர்த்திப் புடத்தைப் போடு
பாகமாய் நீறியது வெண்மை யாகும்
கையப்பா குகைதட்டி யெடுத்துப் பாரு
கனமான பற்பமடா விடைபோ காது
நையப்பா நோய்களுக்குக் கொடுத்துப் பாரு
நசையாத நோய்களெல்லா மகன்று போமே. 161

புளியிலை சாறு பிழிந்து அதில் 1 கழஞ்சு முப்பூச்சுண்ணம் போட்டு வைத்துக் கொண்டு வெங்கலத்தைப் பழுக்கக் காய்ச்சி தோய்க்கவும். இதனால் வெங்கலத்தின் களிம்பு நீங்கி விடும்.

பிறகு புளியை குகை போல் பிடித்து அதற்குள் வெங்கலத்தை வைத்து மேலே மூடி ஏழு முறை சீலை மண் செய்து சூரிய வெப்பத்தில் உலர்த்தி புடம் போட வெண்கலம் நீராக மாறி விடும்.

இந்தப் பற்பம் எல்லா வகை நோய்களையும் தீர்க்கும்.

திரா பற்பம்

போமப்பா திறாயினுட பற்பங் கேளு
பொருளான பற்பத்தை யாருஞ் சொல்லார்
வாமப்பா திறாய்தன்னைக் காய்ச்சிக் கொண்டு
வளமான துராயிலையின் சாறு பிழிந்து
காமப்பா முப்பதுவி ராகன் போட்டு
கனமான வேமுதரந் திறாயிற் றோய்க்க
யாமப்பா திறாயதுவுங் கண்விட் டாடும்
பதமாக பற்பமது வாகுங் கேளே. 162

கேளப்பா வழலையுட மெழுகு தன்னைக்
கெடியான விந்ததிலே சீலை செய்து
வாளப்பா புடத்தைப்போட் டெடுத்துப் பாரு
அப்பனே நீறியது வெண்ணீ றாய்ப் போம்
மாளப்பா மேகநோய்க் கெல்லா மீய
மன்பாக நோயெல்லாம் பறந்து போகும்
நாளப்பா வுன்றனுக்குத் துன்பந் தானும்
நாடாது ஒருநாளும் நன்மை பாரே. 163

பாரப்பா பரீட்சித்துச் சிகிச்சை செய்தாற்
பண்பான வைத்தியனென்ற பேருண்டாகும்
வாரப்பா வுடம்பதுவும் வளையா மூடர்
அப்பனே முப்பூவைச் செய்யா மற்றான்
நாரப்பா நாடதிலே பொய்கள் சொல்லி
நளினமென்ற தழைச்சாற்றில் வைத்தியஞ் செய்வார்
காரப்பா கன்மிகட்குக் கன்மம் வந்து
கடுகளவுஞ் சித்திக்கா கண்டு கொள்ளே. 164

முப்பூவின் பெருமை

கொள்ளவே வாதமப்பா முப்பூ வாலே
கொடிதான ஞானப்பா முப்பூ வாலே
வள்ளலே தந்திரமோ டிந்திர சாலம்
அப்பனே முப்பூவா லாச்சு தையா
நள்ளவே யாதமுடன் வைத்தியப் போக்கு
நலமான முப்பூவா லான தப்பா
விள்ளவே நான்விண்டேன் யார்தான் விண்டார்
வேதாந்த நாதாந்த மகுத்துவங் கேளே. 165

அகஸ்தியர் வாதகாவியப் பெருமை
நூற்றொகுப்பு

கேளப்பா முதல்மொழி தான் தெக்ஷணத்தில்
கெடியான காவிய நூற் றன்னைச் சொன்னான்
வாளப்பா சகலகலை யதனிற் சொன்னான்
அப்பனே யம்மொழி போலார்சொல் வார்கள்
தேளப்பா கொட்டுதல் போற் சீக்கிரத்தில் தேர்வார்
தேராம லிருந்தவர்க ளிதிலே தேர்வார்
நாளப்பா வாதமெனக் காவியம் பார்
நலமான நூலதுதா முற்றும் பாரே. 166

பாரப்பா கற்பங்கள் நன்றாய்ச் சொன்னான்
பண்போன்ற சத்தினுட கண்ணாடி சொன்னான்
வாரப்பா வறிவார்கள் கற்பப் போக்கு
வப்பனே நிவர்த்தியுட மருந்து சொன்னான்
காரப்பா விதற்குமுன்நி கண்டைப் பாரு
கனமான நிகண்டப்பா யார்தான் காண்பார்
நாரப்பா வென்னிகண்டைப் போலே யுண்டோ
நன்மகனே நிகண்டைத்தான் பதனம் பண்ணே .167

பண்ணுவது என்னைப்போல் காவி யத்தைப்
பண்பான குகையில்வைத்துப் பூசை பண்ணு
நண்ணுவது என்னுடைய சாஸ்திர மெல்லாம்
நலமான வடக்கமதாய்ப் பூசை பண்ணு
வெண்ணுவது வழிதுறையைச் சொல்லி விட்டோம்
விரைவான வறிவுள்ளோர் தேர்ந்து கொள்வார்
கண்ணுறது கைபாகம் செய்பாக மெல்லாம்
கருத்தாகச் சொல்லிவிட்டோங் கண்டு கொள்ளே.168

துரா இலையைப் பிழிந்து சாறு எடுத்து வைத்துக் கொண்டு திறா என்ற உலோகத்தை பழுக்கக் காய வைத்து தோய்க்க வேண்டும். இவ்வாறு ஏழு முறை தோய்த்தெடுத்த உலோகத்தை வழலை என்ற மெழுகு குகையில் வைத்து சீலை மண் செய்து புடம் போட அது வெண்ணீராக நீறிவிடும். இதுவும் சகல ரோகங்களையும் தீர்க்கும் பற்பமாகும்.

இரச செந்தூரம்

கொள்ளப்பா செந்தூர மகிமை கேளு
கொடிதான ரசத்தினுட செந்தூ ரங்கேள்
விள்ளப்பா வாலரசம் பலந்தா னெட்டு
வேதாந்தக் கல்வத்தில் விட்டுக் கொண்டு

மெள்ளப்பா பஞ்சமலங் கொஞ்சம் போட்டு
மேலான விந்துநீர் சாம மாட்டு
வள்ளப்பா மெழுகதுபோ லாகும் பாரு
அப்பனே வழித்தெடுத்து வில்லை பண்ணே. 169

பண்ணப்பா குகையதுவும் புளியாற் பண்ணி
பண்பான வில்லையைத்தா னதனில் வைத்து
நண்ணப்பா மேற்குகைதான் கொண்டு மூடி
நலமான மண்சீலை யேழுஞ் செய்து
கண்ணப்பா கனிரவியில் வைத்திட் டாக்கால்
கண்மணியே வெங் கலம் போற் கரிந்து போகும்
வண்ணப்பா பத்தெருவிற் புடத்தைப் போடு
வளமான வருணனைப்போற் சிந்தூர மாமே. 170

ஆமப்பா செந்தூரம் பதனம் பண்ணு
அப்பனே பணவெடைதா னிருபோ துண்ணு
வாமப்பா பித்தசூலை வாத சூலை
வளமான கர்மசி லேஷ்ம சூலை
நாமப்பா நாட்செல்லாது சிலேஷ்ம சூலை
நலமான சூலையப்பா கன்ம வியாதி
காமப்பா கர்மநோய் யெல்லாந் தீரும்
கனமான செந்தூரம் பட்டாற் போமே. 171

8 பலம் வாலை இரசமெடுத்து கல்வத்தில் இட்டுக் கொண்டு சிறிது பஞ்ச மலம் போட்டு அரைக்கவும். தேவைப் பட்டால் முட்டையின் வெண் கரு சேர்த்துக் கொள்ளவும். நன்றாக அரைத்து மெழுகு பதத்தில் எடுத்து வில்லை செய்து நிழலில் உலர்த்தவும்.

புளியால் குகை செய்து அதற்குள் வில்லையை வைத்து சீலைமண் செய்து சூரிய வெப்பத்தில் வைத்தால் பொரிந்து போகும். பிறகு அதை பத்து எருவில் புடம் போட அற்புதமான செந்தூரமாகும். இந்த செந்தூரம் பண வெடை வீதம் ஒரு நாள் இரு வேளை உட்கொள்ள பித்த சூலை, வாத சூலை, சிலேத்தும சூலை என்னும் சகல விதமான சூலை நோய்களும் தீரும்.

காந்த செந்தூரம்

போமப்பா காந்தசெந் தூரங் கேளு
புகழான காந்தமது பலந்தான் ரெண்டு
நாமப்பா கந்தியது பலந்தா னொன்று
நலமான வீரமது பலந்தா னொன்று

வாமப்பா இதுமூன்றுங் கல்வத் திட்டு
வளமான முப்பூவுங் கழஞ்சி போடு
காமப்பா முருங்கப்பூச் சாற்றாற் சாமம்
கனமான கையான்சாறு சாமம் ரெண்டே. 172

ரெண்டான சாமமது மூன்று மாட்டி
ரேசகபூ ரகமுடனே வில்லை செய்து
வண்டான சீலையது மூன்று போட்டு
வளமான கெஜபுடத்திற் போட்டுத் தீரு
பண்டான சிந்தூர மென்ன சொல்வேன்
பண்பான நிறமென்றாற் சிவந்து காணும்
கண்டான சிந்தூரம் பணவெடைதான் கொள்ள
கனமான கர்மத்தால் வந்த பாண்டே. 173

காந்தம் 2 பலம், கந்தகம் 1 பலம், வீரம், பலம் இவற்றைக் கல்வத்தில் போட்டு 1 கழஞ்சு முப்பூ சேர்த்து முருங்கைப்பூ சாற்றால் 1 சாம நேரம், கரிசாலைச் சாற்றல் 2 சாம நேரம் அரைத்து வில்லைகளாகச் செய்து சீலைமண் செய்து கெறு புடத்தில் போட்டு எடுக்க செந்தூரம் ஆகும்.

கெந்தி செந்தூரம்

பாண்டான பாண்டெல்லா மோடிப் போகும்
பண்பான பாண்டுவடா எல்லாம் போகும்
வாண்டான கந்தியட சிந்தூரங் கேள்
அப்பனே கெந்தியது பலந்தா னைந்து
காண்டான வீரமுடன் பூரம் லிங்கம்
கனமான விதுமூன்றும் பலந்தான் வீதம்
மாண்டான கல்வத்தி லிதுவெல்லாம் போட்டு
அப்பனே முப்பூவுங் கழஞ்சிபோடேன். 174

போட்டப்பா பொற்கையான் சாற்றா லாட்டி
புகழான வாவின்பால் சாம மாட்டு
வாட்டப்பா முருக்கம்பூச் சாற்றாற் சாமம்
வளமாக வாட்டிடுவாய் மெழுகுபோ லாகும்
காட்டப்பா கையாலே குகைதான் பண்ணி
கனமான குகையதனை யுலர வைத்து
நாட்டப்பா கந்தியது வில்லை தன்னை
நலமாக வுலரவைத்துக் குகைக்குள் வையே. 175

லவயப்பா மேற்குகைதான் கொண்டு மூடி
வளமான சீலைமண் ணேழுஞ் செய்து
கையப்பா காடைபுடந் தன்னிற் போடு
கனமான சிந்தூர மென்ன சொல்வேன்
நையப்பா காந்தசெந் தூரம் போல
நாடதிலே சித்தர்கள்தான் சொல்லவில்லை
மையப்பா சொல்லிவிட்டேன் விதியே மக்காள்
மேதினியில் மாந்தர்களே சொல்லக் கொள்ளே. 176

கட்டுவகை ஜெயநீர்

கொள்ளப்பா மண்டலந்தான் கொண்டா யானால்
குலைநோவுங் குட்டமுடன் சூலை போகும்
விள்ளப்பா நரைதிரைக ளெல்லாம் போகும்
விதமான காயத்துக் குறுதி கற்பம்
துள்ளப்பா கட்டுவகைச் செயநீர் கேளு
தொகையாகச் சொல்லுகிறே னறிவாய்க் கேளு
நள்ளப்பா தலைப்பிண்டந் தன்னை வாங்கி
நலமான கோரையுடன் வீரப் போக்கே. 177

போக்கப்பா மூளையைநீ வாங்கிக் கொண்டு
புகழான பீங்கானிற் கலக்கிப் போட்டு
வாக்கப்பா சுத்தசல முப்பூ போட்டு
அப்பனே ரவிதனிலே சதிர்நாள் வைக்க
நாக்கப்பா நல்லதண்ணீ ரமுர்தம் போலாம்
நாதாந்த ஜெயநீரைப் பதனம் பண்ணு
மாக்கப்பா வென்வாக்கு அமுர்த வாக்கு
வளமான சத்தியமாய்ச் சொல்லி னேனே. 178

தாளகக்கட்டு

சொல்லப்பா லிங்கத்தைத் தோய்த்து வாட்ட
சொற்பெரிய லிங்கமது முழுக்கட் டாகும்
வல்லப்பா மனிதருக்குச் சண்டாள தோஷம்
அப்பனே சன்னியுட னறுபத்து நான்கும்
மல்லப்பா தாளகத்தைக் கட்டக் கேளு
மகத்தான செயநீரிற் றோய்த்து வாட்டி
நல்லப்பா வெடியுப்பைச் செயநீரா லரைத்துப் பூசி
நலமாகப் புடம்போட உப்பாம் பாரே. 179

பாரப்பா தாளகத்தி னுப்பினாலே
பண்பான மேகமது இருபத் தொன்றும்
ஆரப்பா அறிவார்கள் மேகமெல்லாம்
அப்பனே யோடிவிடு மறிந்து பாரு

நேரப்பா தாளகத்தி னுப்பார். சொல்வார்
நேரான வுப்பதுதான் செய்து கொள்ளு
வீரப்பா வீரத்தின் கட்டுக் கேளு
விதமான ஜெயநீரிற் றோய்த்துக் கொள்ளே. 180

5 பலம் கந்தகம், வீரம் 1 பலம், பூரம் 1 பலம், லிங்கம் 1 பலம் இவற்றைக் கல்வத்தில் போட்டு 1 கழஞ்சு உப்புப் போட்டு மஞ்சள் கரிசலாங்கண்ணி சாற்றால் ஆட்டவும். பிறகு பசுவின் பாலால் 1 சாம நேரம் எருக்கம்பூச்சாற்றால் 1 சாம நேரம் ஆட்டவும்.

இவை மெழுகு பதத்தில் எடுத்து நிழலில் உலர்த்தி வில்லை செய்து குகைக்குள் வைத்து சீலை மண் செய்து காடைப்புழம் போட செந்தூரமாகும்.

வீரக்கட்டு

கொள்ளப்பா கொடிவேலி யிலைய ரைத்துக்
கொடிதான சரக்கின்மேற் கவசஞ் செய்து
வள்ளப்பா மண்குகையில் வைத்துக் கொண்டு
அப்பனே துருத்திகொண் டூதி னாக்கால்
கள்ளப்பா வீரமது உருகிக் கட்டும்
கனமான கட்டதனைப் பூசை பண்ணு
விள்ளப்பா கட்டெடுத்துத் தோட சன்னி
விளம்பினேன் ஒருரைப்பு உரைக்கக் கேளே. 181

கொடி வேலி இலை அரைத்து வீரத்துக்கு கவசம் செய்து மண் குகையில் வைத்து உலையில் வைத்து ஊதினால் வீரம் உருகிக் கட்டும். இந்தக் கட்டுக்கு பூஜை செய்து எடுத்து வைத்துக் கொண்டு சன்னி முதலான கொடிய நோய்களுக்கு ஒரே ஒரு உறைப்பு உரைத்துக் கொடுக்க நோய் தீரும்.

பூரக்கட்டு

கேளப்பா குளுமையுடன் விடசன்னி போகும்
கெடியான வீரத்தின் பெருமை மெத்த
வாளப்பா பூரத்தின் கட்டைக் கேளு
அப்பனே பூரத்தின் கட்டி வாங்கி
நாளப்பா ஜெயநீராற் சுருக்குத்தாக்க
நலமான பூரமது உருகிக் கட்டும்
பாளப்பா சுரமுடனே குளிருங் காய்ச்சல்
பண்பான பூர்த்தாற் றீரும் பாரே. 18

பூரத்தைக் கட்டியாக வாங்கிக் கொண்டு அடுப்பில் வைத்து எரிக்கும் போது ஜெயநீரால் சுருக்கு கொடுக்க பூரம் உருகிக் கட்டும். குளிர் காய்ச்சல் போன்ற நோய்கள் பூரக் கட்டால் தீரும்.

பாஷாணக் கட்டு

பாரப்பா வெள்ளையுட கட்டுக் கேளு
பண்பான ஜெயநீரும் நாகச் சாறும்
மாரப்பா நாட்டில்வைத்துச் சுருக்குத் தாக்க
அப்பனே க்ஷணத்திலே யுருகிக் கட்டும்
நாரப்பா குருகட்டு விதுக ளெல்லாம்
நலமான கட்டதனை யெடுத்துக் கொண்டு
வாரப்பா மனிதருக்குக் கொடுத்திட் டாக் கால்
வளமான வறுபத்துநால் சுரமும் போமே. 183

வெள்ளைப் பாஷாணம் கட்டியாக எடுத்துக் கொண்டு ஜெயநீரும், நாவல் சாறும் கலந்த சாற்றில் சுருக்குக் கொடுக்க உருகிக் கட்டும். இது சகல விதமான சுர நோய்களுக்கும் மருந்தாகும்.

அப்பிரேக செந்தூரம்

போமப்பா வப்பிரேக செந்தூ ரங்கேள்
பேரான கிருஷ்ணவப்பி ரேகம் வாங்கி
வாமப்பா சுத்திபண்ணி மண்ணைப் போக்கி
வளமான கல்வத்திற் பலமஞ் சிட்டு
காமப்பா கெந்தியது பலம்ரெண் டிட்டு
கனமான கட்டுவகை நீரா லாட்டு
நாமப்பா சொல்லுகிறேன் கையான் சாற்றால்
நலமான சாமமது ரெண்டு மாட்டே. 184

ஆட்டவே நாகசச்சாறு சாமம் ரெண்டு
அப்பனே பொற்கையான் சாற்றாற் சாமம்
வாட்டவே பழச்சாற்றால் சாமம் மூன்று
வளமான முலைப் பாலால் சாம மூன்று
காட்டவே முப்பூச்சுண்ணம் பலந்தான் போடு
கனமான வல்லிச்சாறு சாம மூன்று
நாட்டவே யாடடியதை வில்லை செய்து
நலமான ரவிதனிலே யுலர்த்தி டாயே. 185

ஆயப்பா வாண்பிரண்டை தூளாய்ப் பண்ணி
அப்பனே தெள்ளியதை மாவ தாக்கி
வாயப்பா சுத்தஜலந் தன்னி லிட்டே
வளமாகப் பிசைந்துமதைக் குகையாப் பண்ணி
நாயப்பா மேற்குகைதான் செய்து வைத்து
நவமாக ரவிதனிலே யுலர்த்திக் கொண்டு
காமப்பா வில்லைதனைக் குகையில் வைத்து
கனமான மேலுமந்தக் குகையான் மூடே. 186

மூடப்பா சீலைமண் ணேழுஞ் செய்து
முக்கிய முடன் புடமதுதான் இடுப்பளவு போடு
காடப்பா காடாக்கினி யாக வேகும்
கனமான செந்தூரம் பணவெடைதான் கொள்ள
தேடப்பா வனுபான மிதற்கு நெய்தேன்
தெளிவாக நோய்கண்டு கொடுப்பா யானால்
மாடப்பா மதிகெட்ட மேக நோய்கள்
மகத்தான நீரிழிவு தித்திப்பு நீரே. 187

வசியத்திலதம்

நீரான மேகரத்தப் பிரமி யங்கள்
நிலைகெட்டே யோடிவிடும் நிகழ்த்தி னேன்பார்
வாரான வசியத்தின் திலதஞ் சொல்வேன்
வளமான விந்திரகோ பம் குளியானையோடு
காரான சுழல்வண்டு ஈப்புலியோ டைந்தும்
கனமான பொடிசெய்து முத்தூ சிட்டி
யாரான தலையண்டம் நெய்யும் வாங்கி
யப்பனே கபாலத்தில் வார்த்துக் கொள்ளே. 188

கொள்ளப்பா திரியைத்தான் கொளுத்தி வைத்துக்
குணமான தலைப்பிண்ட வோடு கவிழ்த்து
வள்ளப்பா வெரித்திடவே மைதான் பற்றும்
வளமான மையதனைச் சுரண்டி வைத்து
நள்ளப்பா புனுகுடனே கஸ்தூரி கூட்டி
நலமான முப்புவது கழஞ்சு போட்டு
மெள்ளப்பா மத்தித்துச் சிமிழில் வைத்து
மேலான லாடமதிற் பணவெடைதான் போடே. 189

போடப்பா திலதத்தால் வசியஞ் சொல்வேன்
பொருளான ஸ்திரீகளுக்குச் சிம்மென்றே சொல்
வாடப்பா புருடனுக்கு நங்கென் றே சொல்
அப்பனே ராஜருக்கு மங்சிங் கென்று

நாடப்பா ஜனங்களுககு வங்கென் றே சொல்
நலமான மிருகமது மாமா வென்று
காடப்பா வசியம தஞ்சுஞ் சொன்னேன்
கனமான வைத்தியர்க்கு வேணும் பாரே. 190

வாதப் போக்கு

பாரப்பா கருக்கிடைதா னின்னூ லப்பா
பண்பான வாதமது செய்யக் கேளு
வாரப்பா வறிவார்கள் முறைசெந் தூரம்
அப்பனே செம்பிலே பத்துக்கொன் றீய
நாரப்பா நல்லசொக்கத் தங்க மாகும்
நலமான சொர்க்கமடா சொர்க்கந் தங்கம்
காரப்பா சிந்தூரம் பட்ட போது
கனமான செம்பதுவும் பொன்னாப்ப போமே. 191

பொன்னான லிங்கத்தின் கட்டை வாங்கிப்
பொருளான லோகத்தில் கடுகீயத்தான்
மண்ணான பொன்னைவிட வேறே யுண்டோ
வளமான தங்கமடா பத்தரைதா னாகும்
வண்ணான ராசியுள்ளோ ரத்தைக் காண்பார்
அப்பனே மற்றோர்கள் காணா ரையா
கண்ணான வுலகத்தில் வாத சித்தர்
கனமாகச் செய்துகொண் டலைவார் பாரே. 192

வாதத்திற்குச் சாபம்

பாரப்பா வலைவதுதான் ஏதென் றாக்கால்
பண்பான கனத்தகர்மப் பீடையாலே
வாரப்பா வலைந்துகொண்டு கெட்டுப் போவார்
அப்பனே கர்மத்தா லாகா தையா
நாரப்பா நல்லோர்கள் சிவயோ கத்தால்
நலமான வாதமது காண்பா ரையா
காரப்பா வவர்செய்த கர்மத் தாலே
கனமாகப் பலியாது சாபந் தானே. 193

தானான மனையாளும் பெண்கள் பிள்ளை
தனதாகப் பிழைக்கவோ சாஸ்திரஞ் சொல்வார்
வானான மாளிமெத்தை பிலக்கக் கூட்ட
வளமான காசுஈய்ந்து வட்டி வாங்கக்

கானான பெண்டீர்க்கு நகைகள் பண்ண
கனத்ததொரு வாதமது சொன்னா ரோசொல்
மானான மாயஹத்தி பிடித்த மாந்தர்
மாண்பருக்குப் பலிக்காது மயக்கத் தாலே. 194

மயக்கமது பிடித்தலைவார் மாயப் பொன்னால்
மதிகெட்ட மாந்தருக்குப் பலித மாமோ
நயக்கமது வயிர்பிழைக்க வலைவா ரப்பா
நலமான சண்டாளர் நாச மாவார்
வணக்கமது புத்தியுள்ள சிவயோ கிக்கு
அப்பனே கன்னிபது ராசி கண்டம்
வியக்கமது ராசியப்பா கண்டம் புக்கும்
விளக்கான மனக்கண்ணா லெல்லாங் காணே. 195

காணப்பா வறிவுகுரு வாசான் சாஸ்திரம்
கண்மணி யிவரைவிட்டாற் குருவங் கேது
மாணப்பா சன்னாசி சித்த ரெல்லாம்
அப்பனே யவர்சொல்லா ரறிந்து பாரு
வாணப்பா விதியாளி சாஸ்திரத்தைப் பாரு
வளமில்லா மற்றோர்க்கு சாஸ்திர மாமோ
நாணப்பா திறந்துவிட்டே னிருநூற் றிற்றான்
நலமான சகலகல்வி தோயச் சொன்னேன். 196

நூலின் பெருமை

சொன்ன தொரு வென்மொழிதான் மூன்று லட்சம்
சொற்பெரிய காவியந்தான் முதல்மொழி யப்பா
நன்னதொரு வைந்நூற்றிற் கலைக்கியா னந்தான்
நலமான கலைக்கியானஞ் சித்தெல்லாஞ் சொல்வேன்
வன்னதொரு வாதமொடு ஞானப் போக்கு
வளமான கிரியையொடு இந்திர சாலம்
கன்னதொரு காரடத்தி லந்தப் போக்கு
கனமான மோடியிலே வனந்தம்போக்கே 197

போக்கான வென்னந்தி யருளி னாலே
பொருளான சகலமுந்தா னிதிலே சொன்னேன்
வாக்கான தன்வந்திரி வாக்கி னாலே
வளமான சொல்லெல்லாந் தவறே யில்லை

நாக்கான நந்தீச ராமுர்தத் தாலே
நலமாக வவரமூர்த மெனக்கே யீய்ந்தார்
சேக்கான வசுவனியெ யுன்ற னுக்கு
சொற்பெரிய வாக்கதுவே யமுர்தந் தானே. 198

சித்தர் பெருமை

தானான நாதாக்கள் மறந்த தெல்லாம்
தனதாக மாட்டிவிட்டே னூல்க டோறும்
வேனான வேதவி யாசர் தானும்
விளங்கியதோ ரென்தகப்பன் ஸ்திரியென் னாற்றான்
வானான வவர்மொழிபோலார்தான் சொல்வார்
அப்பனே யவரவருக் கெதிர்வாக் குண்டோ
கானான வடசித்தன் மொழியைப் பார்த்து
கனமான பதினெண்பேர் தேர்ந்தார் பாரே. 199

பாரென்ற வெண்சித்தர் பதினெண் பேரில்
பண்பான வசுவினியு மகத்தியர் தானும்
வாரென்ற புலஸ்தியனும் ராம தேவர்
அப்பனே வூசிசித்தன் விவர்பஞ்சு சித்தர்தானும்
காரென்ற புலஸ்தியன்றான் சிறந்து விட்டான்
கனமான ராமனவன் மறைத்து வைத்தான்
மாரென்ற சித்தரெலாம் நூல்க டோறும்
மகத்தான கனகமதாய் மொழிந்தார் நூலே. 200

நூற்றொகை

நூலான நூலப்பா வசுவனி தேவன்
நூணுக்கமாய் நுணுக்கிவைத்தான் நூல்க டோறும்
வாலான வகஸ்தியன்றன் நூலைப்பாரு
வளமான காவியநூல் கடைக்காண்டம் பாரு
சாலான சவுமியசா கரத்திற் றானும்
சடாட்சரத்தின் பொருளெல்லா மதிலே சொன்னார்
நாலான வென்னுடைய நாலாங்காண்டம்
நலமான சகலமுந்தா னயந்து சொன்னேன். 201

சொன்னனடா கலைக்கியானந் தன்னைப் பாரு
சொற்பெரிய நாதாக்கள் மறைத்த சூட்சம்
சொன்னனடா வழிதுறைகளறிந்து பாரு
சொச்சமா யென்னைப் போற் சொன்னா ரையா

சொன்னனடா கர்மத்தைச் செய்ய வேண்டாம்
செம்மையாய்த் தருமத்தைக் கருத்தி லெண்ணு
சொன்னனடா வாதைகள்தான் செய்ய வேண்டாம்
சொல்பெரிய மனிதர்களை வையா மெண்ணே.202

வையவே ஸ்திரீகளின் மோகம் வேண்டாம்
வளமான பெரியோரை நோக வேண்டாம்
கையாலே தர்மமது மிகவே பண்ணு
கனமான ஸ்தன வாசம் பழிக்க வேண்டாம்
நையவே கர்மங்கள் செய்ய வேண்டாம்
நலமான பொய்கொலை பாவம் வேண்டாம்
அய்யவே சன்னாசி பொய் குருக்கள்
அப்பனே யிவர்களையும் பழிக்கொண்ணாதே. 203

பழிச்சாக்கா லவர்பிழைப் பெல்லாம் போகும்
பரிவாகவன்ன மிட்டு மோசஞ் செய்தால்
வழிச்சாக்கா லென்னவெடா மோசம் வேண்டாம்
அப்பனே நெட்டுடைத்தால் சாபமெய்தும்
நழிச்சாக்காற் பெரியோரைப் பழித்த கர்மம்
நலமாக வெத்தேசம் போனாற் றீரும்
கிழிச்சாக்கால் வல்வினைகள் வந்துசேரும்
கிளமான சாபமடா வருத்தும் பாரே. 204

பாரப்பா நால்வேதத் தொகுப்பைப் பாரு
பண்பான வேதந்தான் குறியைக் காணும்
வாரப்பா வாசியுட மறப்பைக் காணும்
வளமான நாதாந்த வைத்தி யந்தான்
காரப்பா விந்நூலி னுணுக்கந்தானும்
கருவாகக் கார்த்தாக் கால் மெத்த நன்று
நாரப்பா வாதமென்ற முடிவைக் காணும்
நலமான கருக்கிடைதான் இருநூறு முற்றே. 205

5 பலம் கருப்பு அப்பிரகம் (கிருஷ்ண அப்பிரகம்) ஒரே கட்டியாக வாங்கி சுத்தம் செய்து கல்வத்தில் போட்டுக் கொண்டு கந்தகம் 2 பலம் சேர்த்து ஏதாவதொரு கட்டுவகை நீரால் 1 சாமம் கரிசாலைச் சாற்றால் 2 சாமம், நாவல் சாற்றால் 2 சாமம், புர்க்கையான் சாற்றால் 1 சாமம், பழச்சாற்றால் 3 சாமம், தாய்ப்பாலால் 3 சாமம் ஆட்டிக் கொணடு முப்பூச் சுண்ணம் 1 பலம் போட்டு பிறகு

கற்பூரவல்லிச் சாற்றால 3 சாமம் அரைத்து வில்லை செய்து சூரிய வெப்பத்தில் உலர்த்தவும்.

ஆண் பிரண்டையை இடித்துத் தூளாக்கி மாவு போல் செய்து கொண்டு சுத்த ஜலம் விட்டு பிசைந்து குகையாய் செய்து அந்த குகையில் வில்லைகளை வைத்து மேல் குகையால் மூடி ஏழு தரம் சீலைமண் செய்து காடாக்கினியாக தீயை எரித்து பெரிய புடம் போட வேண்டும். இந்த அப்பிரக செந்தூரத்திற்கு அனுபானம் நெய்யும் தேனும் ஆகும். இது எல்லா விதமான மேக ரோகங்களையும் தீர்க்கக் கூடியதாகும்.

தன்வந்திரி சூக்ஷூம வைத்தியம் 200
முற்றிற்று.

ஹகீம். பா.மு. அப்துல்லா சாயபு

அவர்கள் எழுதிய

விஷபேதி நிவாரணி

கடவுள் வணக்கம்

அரபு வாக்கியம்

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்
அஸ்ஸலாது வஸ்ஸலாமு அலா ஸய்யிதில்
முர்ஸலீன்; வ ஆலிஹி, வ அஸ்காபிஹி
அஜ்ம ஈன்.

காப்பு

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிவிருத்தம்

மேதினியிற் றெருளடைந்த மனம்பொருத்தித்
தொழுமடியார் மிடிமிக் கான
பேதிமன் வகுரிகொள்ளைப் பெருஞ்சுரங்க
ளடையாது பேணு மெங்க
ளாதிமிகு சோதியென்று மழியாத
செழுமணியி னடியைச் சென்னி
மீதில்வைத்து விடபேதி நிவராணியா
மோர் நூலை விளம்பு வாமே.

நூல்

இவ்விந்தியாவில் விஷபேதி யென்னும் கொடிய வியாதியானது அடிக்கடி பரவி அதிக சீக்கிரம் தீங்கை விளைவிக்கக்கூடிய தென்பதும், ஜனங்கள் இதன் நாமத்தைக் கேட்டவுடன் திகிலையடையக்கூடிய தென்பதும் உலகறிந்த விஷயம். ஆகையால், இது உண்டாகிறவிதம், இதன்காரணம், இதன்லக்ஷணம், இது உண்டாகாது தடுக்கும் விதிகள், இது

அதிகம் பரவாமற்றடுக்கும் வழிகள், இதன்சிகிச்சைகள் முதலியவற்றைத் தெரிந்துகொண்டால், இவ்வித திகிலையடையாமலிருக்கவும், அது பரவியிருக்கும் காலங்களில் அது அதிகம் பரவாமல் தடுக்கவும், அது தொற்றினாலும் உடனே அதற்குத் தகுந்த சிகிச்சைசெய்து தப்பித்துக்கொள்ளவும். ஏதுவாக இருக்கும். ஆகையால் மேற்கண்ட விஷயங்களை யெல்லாம் மிகவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதுவாம். இந்த விதிகளை யனுசரித்துக் கடவுளின் மீது பயபக்தியுள்ளவர்களாக உண்மையாக நடந்து கொண்டால் அவருடைய கிருபா கடாக்ஷத்தினால், மேற்கண்ட துஷ்டவியாதிக் குட்பட்டு கஷ்டப்பட்டு நஷ்டத்திற்காளாமல் தப்பித்துக் கொள்ள ஏதுவாகும்.

விஷபேதி யுண்டாம் காரணம்

இது எவ்விதம் உண்டாகிற தென்பதும், என்ன காரணத்தினால் உண்டாகிற தென்பதும் இதுவரையில் தெள்ளிதாய் நிச்சயிக்கப்படவில்லை. சிலர் இதற்கு அசுத்தமே காரணமென்கிறார்கள். சிலர் தண்ணீர் முதலிய பானவகைகளினாலுண்டாகிற தென்கிறார்கள். சிலர்காற்றானது விஷமித்து அதனாலுண்டாகிறதென்கிறார்கள். சிலர் சூரியனுடைய சில கிரணங்கள் விஷமித்து அவை யெந்தெந்தத் தேசங்களிற் செல்கின்றனவோ அங்கங்கு இவ்வியாதி யுண்டாகின்றதெனச் சொல்கின்றார்கள். இவ்விதம் ஒவ்வொரு தரத்தவரும் தம் தம் கட்சிக்கு வேண்டிய உதாரணங்களை யாதாரமாகக் காட்டித் தம்முடைய கொள்கையை ஸ்தாபிக்கின்றார்கள். ஒவ்வொரு கட்சியிலும் அனேக அத்தாட்சிகளும் உண்மைகளும் இருக்கின்றபடியால், நாம் ஒவ்வொன்றையும் நம்ப வேண்டியதாகவே யிருக்கிறது.

இத்துஷ்ட ரோகமானது மற்ற வியாதிகளைப் பார்க்கிலும் நஷ்டத்தை யுண்டாக்குங் காரணங்களில்.

பயம், பீதி

ஆகியவைகளும் பிரதானமான ஒன்றென எல்லாவகைப் பண்டிதர்களாலும் நிச்சயிக்கப் பட்டிருக்கின்றது. ஏனெனில், இரத்த ஓட்டமானது இருதய சம்பந்தமானது. இச்சமயங்களில் திடச் சித்தமாயிருப்பது இந்த வியாதியினின்று தப்பித்துக்கொள்ள ஏதுவாகும். மனமானது மேற்கண்டபடி பயம், பீதி முதலியவைகளால் துர்ப்பலப் பட்டவுடன் இரத்த ஓட்டமுந்

துர்ப்பலப்பட்டுப்போகும். அச்சமயம் எந்த வியாதியும் பற்றிக்கொள்ள ஏதுவாம். மேலும் சந்தேக மென்னும் சக்திக்குமுன் கைவல்லியமான எவ்வகை அவுடதமும் குணஞ்செய்யாது. சந்தேக வியாதியானது மஹாபலமான அவுடதத்தையும் எள்ளளவும் சட்டை பண்ணாது. விஷபேதி பரவியிருக்குங் காலங்களில் அதிகம் பயந்திருப்பவர்களே அந்த வியாதிக்கு அதிசீக்கிரமாகவும் அதிகமாகவும் இலக்காவார்கள். இந்த வியாதியால் மாண்டவர்களுள் அனேகரைப் பிரதி தினமும் எடுத்தடக்கஞ் செய்தவர்கள் அனேகர் இந்த வியாதிக்கு ஆளாகவே யில்லை. இப்படித் தப்பித்துக் கொள்வதற்கு அவர்களின் மனவலிமையே பிரதான காரண மென்னலாம்.

சினேகிதருள் ஒருவர் தான் வியாதியுற்ற காரணத்தைப் பின் வருமாறு சொன்னார். அதாவது ' இந்த வியாதி பரவியிருந்த நாட்களில் ஒருநாள் மாலையில் ஆபிஸிலிருந்து வரும்போது என் மனங்கெட்டு, இந்தவியாதி யெனக்குக் கண்டு விட்டதாகத் தோற்றி இனி இதன்பிடிக்குத் தப்பமுடியாதென்னும் எண்ணத்துடன் வீடுவந்து சேர்ந்து கட்டிலின் மீது படுத்துக்கொண்டேன். வீட்டிலுள்ளவர்கள் எனக்கெவ்வளவோ தேறுதல் சொல்லியும் ஒவ்வொரு நிமிஷமும் என்குணமாறி முடிவாய் என் சுாதீனம் எனக்கில்லாமற் போயிற்று. வீட்டிலுள்ளவர்களுடனே டாக்டரை வரவழைத்து அவரும் ஏதோதோ சிகிச்சை செய்தார். செய்தாலுமென்ன? என்மனப்பேய் வசபடவுமில்லை. என் சந்தேகமும் என்மனதை விட்டகலவுமில்லை. இவ்விதமே சிலநாட் சென்றன. முடிவாய் ஆறுமாதங்கள் இச்சந்தேக நோயால் அதிகத் தொந்திர வடைந்தேன்" என்பதே.

அதுபு பாஷையில் பிரபலமான ஒரு கதையுமுண்டு. அதை யிங்கெழு வதும் உசிதமே. ஒரு நாள் ஒரு பிராயாணி மிஸ்று தேசத்திலிருந்து வேறொரு நகரத்திற்கு போகையில் வழியிலெதிரில் ஒருவனைக்கண்டான். அவன் உடை முதலியவைகளின் விகற்பத்தாலும் அவன் நடை முதலியவைகளின்விகற்பத்தாலும் அவன் அன்னிய தேசத்தானென நிதானித்து, ஐயா, தாங்களெவ்வூர், எவ்வூருக்குப் போகின்றீரெனக் கேட்டான். அதற்கவன், ஐயனே நானுதான் "காலரா" உம்மூராகிய மிஸ்றுக்குப் போகிறேன். அங்கு மூவாயிரம் பெயர்களை, வேலை தீர்க்கவேண்டி யதிருக்கிறதென்றான். அதறகவன் அப்படியா! மூவாயிரத்திற் கதிகம் வேலைதீர்ப்பீரோ வென்றான். அது என் காரியமல்ல, என்வேலை அவ்வளவுதா னென்றான். பின் சில

மாதங்கள் சென்று அப்பிரயாணி தன்னூருக்கு வரும்போது முன்சந்தித்தவனைக் கண்டான் ஐயா, போனகாரியம் எப்படி முடிந்தது எனக்கேட்டான். அதற்கவன் " நான் வேலைதீர்த்தது மூவாயிரம்பேர்தான். ஆனால் முப்பதினாயிரம் பெயரெனமுன்ஸிபாலிடி கணக்கேற்பட்டதெனச்" சொன்னான் "ஐயா! அதெப்படி? நீர் சொன்ன சொல் தவறமாட்டீரே" என்றான். அதற்கவன் " ஆம் அது நிஜமே நான் வேலை முடித்தது மூவாயிரம் பெயர்கள்தான். ஆனால், மற்றவர்களை வேலைமுடித்தது அவரவர்களடைந்த ''பயம்'' என்றானாம். இது ஒரு கட்டுக்கதையாயினும் சரியே அல்லது ஒட்டுக் கதையாயினும்சரியே. இது ஆழ்ந்தகருத்துள்ள தென்பது விளங்கும். ஆகையால் இக்காலங்களில் பயம் திகில் முதலியவைகளை நீக்கித் தைரியமாகவும். திடமாகவும், சந்தேகமற்றவிதமாகவும் இருக்கவேண்டும் என்பது பிரமாண மெனவிளங்கும்.

இங்கிலீஷ் வைத்திய சாஸ்திரப்படி இவ்வியாதியின் காரணம் இருவகையாம் (1) Exciting Cause வெளிக்காரணம்:- இதிலும் விகற்ப அபிப்பிராயமுண்டு. ஒருவித விஷமானது இரத்தத்திற் சேர்ந்து இரத்த ஓட்டத்தின் வழியாய்த் தேக முழுவதும் பரவிவிடுகிறது. இந்த விஷம் மலாசயத்திற் காணப்படுகிறது, அதாவது தூரதிருஷ்டிக் கண்ணாடியாற் பார்த்தால் அதில் எறும்பைப் போலவும், ஈயைப்போலவும் சில ஜந்துக்கள் காணப்படுகின்றன. இந்த ஜந்துக்களாலேயே இவ்வியாதி யுண்டாகிறது. இவ்வியாதிக்காரன் மலத்தைக் காற்றில் பரவவிட்டால், இதன் விஷம் காற்றுடன்கலந்து இவ்வியாதி பரவிவிடுகிறது. அல்லது இம்மலம் கிணறு, ஏரி, குளம் ஆகியவைகளிற்குச் சமீபத்திற் புதைக்கப்பட்டு அதன்மூலம் ஊறும் ஜலம் ஜலத்துடன் கலந்துவிடுகிறது. ஆகையால் அந்த ஜலத்தைச் சாப்பிடுகிறவர்களுக்கு இவ்வியாதியுண்டாய்விடுகிறது.

வேறு சிலர் கருத்தாவது:- புற்பூண்டுகள் அழுகிப்போவதால் ஒரு வகை விஷக்காற் றுண்டாகிறது. அதனால் இந்தவியாதி யுண்டாகிறது என்பதாம்.

வீடு முதலியவைகளின் அசுத்தத்தால் இந்தவியாதி யுண்டாகிறதென வேறு சிலர் அபிப்பிராயப் படுகின்றார்கள்.

b) Predisposing Cause அகக் காரணங்களாவன: கெட்ட மச்சம், மாம்சம், அழுகின காய் கனிகள், நன்றாய்ப் பழுக்காதவைகள் ஆகியவைகளைப் புசித்தல், அசுத்த ஜலபானம், சாக்கடை நாற்றம்,

கெட்ட வஸ்துக்கள், குப்பை முதலியவைகளின் துர்க்கந்தம், மதுபானம், அசுசி, கெட்ட ஈரக்காற்று, தேகபலத்தைக் குறைத்து அதிக ஆயாசத்தைப் பிறப்பிக்கிற வேலைகள் (அவையானவன, மிதமிஞ்சின சம்போகம், இரவிற் கண்விழித்தல் முதலியவை போன்றவைகள்,) நேரப்படப்போசனஞ் செய்யாதிருத்தல், முதல் நாளிற் சமைத்த பதார்த்தங்களைச் சாப்பிடுதல், சூரிய உஷ்ணமதிகரித்தல், வெயிற்காலம், இலையுதிர்கலமாகியவை யுண்டாகிக் காலமாறுதல், அதிக விசனப்படல், அதிகத் துக்கப்படல், இக்காலங்களில் நேர்வாள முதலியவை சேர்ந்த கடின பேதிக்குச் சாப்பிடல், முதலிய இக்காரணங்க ளெல்லாம் வாந்திபேதி ரோகத்திற்கு ஆளைக் காட்டிக் கொடுக்கின்றன என்பதாம்.

ஆயினும் இந்த வியாதி யுண்டாவதற்குக் காரணமும் ஒவ்வொரு காலத்திற் பிறந்து வியாபித்துச் சில வருஷம் இல்லாதிருப்பதற்குக் காரணமும் நிச்சயமாய் ஒரு வருக்கும் இன்னும் தெரியவில்லை. அவரவர்கள் மனதிற் கேற்றபடி சொல்லிக் கொள்கிறார்கள். இந்தரோகம் ஒருவித விஷக்காற்றென்று சகலரும் ஒப்புக்கொள்ள இடமுண்டு, அவ்விதமே, குப்பை மலஞ்சலம், அசுத்தம், ஜன நெருக்கம் முதலியவைகளால் இவ்வியாதியின்னும் உக்கிரப்படுவதும், அதிகப் படுவதும், அவைகளை நீக்கிச் சுத்தத்தை யனுசரித்தால் இதன் உக்கிரம் போய்விடுவதும் அநுபவசித்தமாய் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இந்த வியாதியானது ஒரு வித விஷப் பதார்த்தத்தால் உண்டாகின்ற தென்றும், இவ்விஷப் பதார்த்தத்தின் இருப்புக்கும். அதிக் கிரமத்திற்கும், சக்திக்கும், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போகும்படி செய்வதற்குங் காரணம் காற்றின் ஒருவித ஸ்திதியேயாம். அதிக உஷ்ணமும் ஒரு வேளை இதனோடு சம்பந்தப்படுவது முண்டு. இவ்விஷத்தினுடைய செய்கையை சகலவித அசுசிகள் பலப்படுத்துகிறதென சந்தேகமறச் சொல்லலாம். தொத்துவியாதிகள் எல்லாத் தேகத்திலும் அநுசரிக்கா தென்பது நிச்சயம். தகுந்த தேகத்தில் மாத்திரந்தான் அநுசரிக்கும் அவ்விதமே இந்த ரோகமும் தகுதியான தேகத்தில் மாத்திரம் அநுசரிக்கும். விதையானது தகுந்த விடத்தில் முளைத்து வேரூன்றுமே யொழிய தகாதவிடத்தில் முளைக்காது. இந்த வியாதிக்கு ஒட்டிக்கொள்கிற குணம் இருக்கிற தென்றாவது அல்லது இல்லை யென்றாவது வல்லபண்டிதர் களாலும் தீர்க்கமாய்ச் சொல்லமுடிய வில்லை. இது மாத்திரமல்ல, இந்த வியாதியின் விஷமானது சருமத்தின் வழியாகவா? அல்லது குடலின் வழியாகவா? சென்று இரத்தத்திற் கலந்து விடுகிறது. இது எவ்விதம் உள்ளுக்குப் போகிறதென

திருப்திகரமாய் வல்ல பண்டிதர்களாலும் சொல்லக்கூட வில்லை. சுவாசத்தால் உள்ளுக்குப் போகிறதென வெகுவாய் நம்பப் படுகிறது.

இந்த வியாதியைப் பற்றி யிவ்வளவு சந்தேகங்களிருப்பினும், என்னென்ன காரியங்கள் கூடாவெனச் சொல்லப் பட்டிருக்கின்றனவோ அக்காரியங்களை நீக்கி, என்னென்ன காரியங்களை யனுசரிக்கச் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அக் காரியங்களை யனுசரிப்பதால், பல வகையாலும் நன்மையேயுண்டா மென்பது நிச்சயம். அவற்றுள்ளும் பிரதானமான வைகளையும் பல கைவல்லிய முறைகளையும் சகோதரர்களின் பொருட்டு லோகோ பகாரமாயிங் கெழுதுலாம்.

பேதிகாலத்தில் அனுசரிக்க வேண்டிய விதிகள்

வெண்பா

சீரணிக்கத் தக்கவைகள் தேடியுணு மந்தஞ்செய்
காரணமா முண்டி கழித்துவிடு - நேரமுற
வாறிய பதார்த்த மகற்றிவைக்க வல்லலெனக்
கூறியமா பேதியொடுங் கும்.

பழுக்காப் பழமும் பதங்கெட் டழுகி
யிழுக்காம் பழமு மிடராம்- முழுக்கவே
யூசினவு ரொட்டியுட னோதும் பழஞ்சோறுங்
காசினியி லாகாதாங் காண்.

பறித்துநாட் பட்டுநீர் பட்டபல காய்கள்
குறித்தபுழுவுள்ளவைகள் கொள்ளேல் - மறுத்திடுவாய்
நீண்டவுண வும்பான நேர்ந்தபல காரமொடு
வேண்டாதே விட்டு விடு.

சுத்தச் சலம்பருகிச் சொற்பவுண வுண்டுவெப்ப
மெத்தவனுட் டிக்க வேண்டுமே- நித்தமும்பால்
காய்ச்சிக் குடித்துமுயர் காப்பிகளித் துட்கொண்டும்
நோய்க்காஞ் சுகந்த நுகர்.

சிரத்திற் குளிர்ச்சிதனைச் சேர்த்துக்கால் தேகங்
கரத்திற் சூடேற்றிமிகக் காயுந்- தரத்துணிகள்
மேலிட்டு வன்மை விளங்கு முறைகள்தமைக்
காலிட்டுக் கொள்ளக் கருது.

வீட்டில்நல்ல காற்றுமிக வீசும்ப டிக்காமேற்
பாட்டுடனே நித்தம் பயிலுவாய் - கூட்டத்தி
னூடிருக்க லாகா வொடுக்கமுள வறையாம்
வீடிருக்க லாகா மிடி.

சுண்ணாம் படித்தில்லஞ் சுத்தித்த சுத்தங்கள்
நண்ணா திருக்கும்வகை நாடுவாய்- பெண்ணால்
வருஞ்சுகத்தை நீக்குனது வத்திரத்தை வெள்ளை
தருஞ்சிறப்புச் செய்தே தரி.

கடிமண முண்டாகிற் காரணத்தைத் தேடி
மடியவிலக்க மனங் கொண் - டுடன்காயத்
தைக்காடி யிற்கரைத்துச் சார்ந்திடுதுர்க் கந்தமுள
திக்கறிந்து கொண்டே தெளி.

1) சீக்கிரஞ் சீரணிக்கத் தக்கதும் சத்துள்ளதுமான ஆகாரத்தைப் புசிக்கவேண்டியது. பழையது, ஊசின ரொட்டி, குளிர ஆறின சாதம், குளிர ஆறினபதார்த்தம் முதலியவைகள் தேகசுகத்திற்கு விரோதஞ் செய்யுமாகையால் இவ்வகைப் பதார்த்தங்களை நீக்கவேண்டியது.

2) நன்றாய்ப் பழுக்காத பழம், அழுகிப்போன பழம் முதலியவைகளைச் சாப்பிடலாகாது.

3) பத்தியத்துக் குதவிய காய்கறிகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டியது. ஆனால் பறித்து நாட்பட்ட காய்கறிகள் அழுகிப்போன காய்கறிகள், முதலியவைகளை நீக்கவேண்டியது.

4) அதிகமா யுண்பதும் அதிகமாய்ப் பானஞ் செய்வதுங் கூடாது. எப்போதும் கொஞ்சம் பசியானது பாக்கியிருக்கும்போதே சாப்பிடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

5) சுத்தமான ஜலத்தை அல்லது சுத்திசெய்த ஜலத்தைப் பானஞ்செய்யவேண்டும். ஜலத்தைக்காய்ச்சிக் குளிர ஆறவைத்துப் பானஞ்செய்வதால் மேற்படி வியாதியின் சந்தேகம் நிவராணமாகிவிடும்.

தேபானம், காபிபானம் முதலியவைகளையும் மிகவும் மிதமாகப் பானஞ்செய்ய வேண்டும்.

பாலையும் காய்ச்சியே உபயோகிக்க வேண்டும். பாலைக் காய்ச்சாமல் உபயோகிப்பது உசிதமாகாது.

7) தேகத்தின்சூடு வெளிப்போகாமற் தகுந்த வஸ்திரந் தரித்துக்கொள்ள வேண்டும். உஷ்ணகாலங்களிலும் பிளானெல் முதலியவை தரித்துக்கொள்ளலாம். கால்கள் சூடாகவும் ஈரமில்லாதிருக்கவும் காலுறை போட்டிருப்பதும் உத்தமம். தலையைக் குளிர்ச்சியாகவும். காலைச் சூடாகவும் வைக்கவேண்டும்.

8) வீட்டில் நல்லகாற்று அதிகமாய் வீசும்படியான ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது. ஒரு அரையில் பலர்கூடி யுட்கார்ந்திருப்பது நல்லதல்ல. கூட்டங்களிற் போகலாகாது.

9) வீட்டைச் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும், வீட்டிலுள்ள கூழங் குப்பைகளை அடிக்கடி பெறுக்கி வீட்டிற்குத் தூரத்தில் எறிந்துவிடவேண்டும். அல்லது எரித்துவிடவேண்டும்.

10) வீட்டுச் சுவர்களுக்குச் சுண்ணாம்பு அடித்துத் தரைக்குஞ் சுண்ணாம்பு தெளித்து அசுசி யாகாமல் எப்போதும் சுசியாக வைக்கவேண்டியது.

அவரவர்களுக்கு, தேகம் வஸ்திரம் ஆகியவைகளைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும்.

11) தாமிருக்கு மிடத்தில் துர்நாற்றம் ஏதேலும் உண்டானால் உடனே காரணத்தைக் கண்டு பிடித்து அதை நீக்கிச் சுத்தி செய்விக்க வேண்டும். காடியிற் பெருங்காயத்தைக் கரைத்து அங்கு தெளித்துவிட வேண்டும்.

12) வீட்டறைகளில் நெருப்பைமூட்டி யெரிப்பதுநல்லது. அதிலும் இவ்விஷத்தை நீக்கும் சரக்குகளையும் போட்டுப் புகைக்கின் அதிக விசேஷமாம். இப்படிச் செய்வதால் வியாதியுண்டாக அதிக ஏதுவிராதெனச் சந்தேகமறச் சொல்லலாம்.

விஷபேதியைத் தடுக்கும் நறுமணப்புகை.

விருத்தம்

சநதனம் சூடன்வேம்பு சாதிப்பத்திரி சாதிக்காய்
கந்தமாம் [illegible] வெள்ளைக் கடுகு குங் குலியத்தோடு

சிந்தைகொள் சாம்பிராணி திகழ்வெட்டிவேரேலக்காய்
முந்துமி லவங்கப்பட்டை முதலிய சரக்குஞ்சேர்த்தே.

பதமுற விடித்து நல்ல பக்குவஞ்செய்து தூளை
நிதமுறு நெருப்பிற் போட்டு நோமாப்புகையச் செய்ய
மிதமுற வில்லமெல்லா மேவியே சுகந்தமாகி
விதம் வித மானபேதி விடத்தினைப் போக்கும்பாரே.

இவ்விஷத்தை நீக்கப் புகைக்கக்கூடிய சரக்குகளாவன்:- இலவங்கப்பட்டை, ஏலரிசி, ஏலக்காய், சாதிக்காய், லவங்கம், சாதிப்பத்திரி, வெள்ளைக்கடுகு, குங்குலியம், சாம்பிறாணி, சூடன், வேம்பு, வெட்டிவேர், சந்தனம் முதலியவைகளே யாம். இவைகளை யெல்லாம் அல்லது இவற்றுள் அகப்பட்ட வைகளையிடித்துத் தூள்செய்து வைத்துக்கொண்டு, நெருப்பிலிட்டுப் புகைக்கின் வீடெங்கும் சுகந்தம்பரவி இவ்விஷம் நாசமாகி விடும்.

வெண்பா

சலங்கழிக்குந் தாரைகளைச் சந்ததமுஞ் சுத்தி
நலம்படச்செய் தேகழுவு நன்றாய்- மலங்கழிக்குந்
தானவசுத் தம்மொழியத் தக்கவடுப்பு புக்கரியை
மானத் துடன் கொட் டிவை.

13) வீட்டிலும் வீட்டைச் சுற்றிலுமுள்ள சாலகம் முதலியவைகளை அடிக்கடி கழுவிச் சுத்திசெய்து அதிகப் பரிசுத்தமாய் வைக்கவேண்டும்.

படுக்கை தலையணை முதலியவைகளை அடிக்கடி வெயிலில் வைத்தும் சுத்தமாகவும் வைத்திருக்க வேண்டும்.

14) மலவிசர்க்க அறையைக் குறைந்தபக்ஷம் பிரதிதினமும் இரண்டு தடவைக்குக் குறையாமற் சுத்திசெய்விக்க வேண்டும். அங்கு கட்டிக் கரிகளை ஒருபாத்திரத்திற்போட்டு வைத்திருப்பதால் அவ்விடத்துண்டாம் துர்நாற்றம் முதலிய அசுத்தங்களை யிழுத்துக்கொள்ளும். ஆனால் வாரத்திற்கொருதரம் அவை முன்னுள்ள கரியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் புதிய கரியை வைக்கவேண்டும். முன்வைத்த கரியை எரித்துவிட வேண்டும். அல்லது குழிதோண்டிப் புதைந்து விடவேண்டும். Mari Amman நோய்களுக்குத்தாய்" என

அருத்தமுள்ள ஒரு சுலோகமும் இங்கிலீஷிலுண்டு. ஆகையால் கூடின வரையில் சுத்தத்தைக் கவனிக்க வேண்டியதே பிரதானம்.

விஷபேதி பரவியிருக்குங் காலங்களில் அவ்வியாதி வராது தடுக்கத் தகுந்த முறைகள்

மாத்திரை

விருத்தம்

பாகமாஞ்சுக்கு மிளகிலவங்கம் பகர்கறுப் புப்பு டனேசி
நேகமா மரிசித் திப்பிலி யிவற்றி னோ்ந்தசூரணமது பலந்தான்
ஏகமாமரவுப் பொடுசச்சிக்கார மேலக்காய்தாளிசப் பத்ரி
வாகமர்கருஞ்சி ரகமிவை பலந்தான் வகைக்கரையாகிட
வாங்கே.

வாங்கியேமுழுதுங் கல்வத்திற்சேர்த்து
வளர்பழச்சாற்றைநீ வார்த்து
ஓங்கியேநான்கு சாமங்களரைத்து
முடன்கன்னிச்சாற்றினி லிரண்டு
பாங்குறவரைத்துச் சண்டையின்காய்போற்
பரிவுடன்மாத்திரையியற்றித்
தாங்கியொவ்வோர்நாட் கொவ்வொன்றாயுண்ணச்
சார்ந்திடாபேதியுந்தானே.

மேல்தோல் சீவின சுக்கு, மிளகு, லவங்கம், அரிசித்திப்பிலி, கறுப்புப்பு இவற்றின் சூரணம் வகை. 1-க்கு பலம்-1 மரவுப்பு (Carbonate of Potash) சச்சிக்காரம் அல்லது கடப்பைக்காரம், கருஞ்சீரகம் ஏலக்காய், தாளிசப்பத்திரி இவற்றின் சூரணம் வகை - 1- க்குப் பலம் - அரை, இவற்றைத் கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாமமரைக்கவேண்டும். பின்பு சோற்றுக் கற்றாழைச் சாற்றால் இரண்டு சாமமரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து வைத்துக் கொள்க.

போஜனத்திற்குப் பிறகு அல்லது காலையில் ஒரு மாத்திரையை யுட்கொண்டு கொஞ்சம் வெந்நீர் பானஞ் செய்யவும்.

இவவிதம் செய்து வருவதால் ஜீரண சக்தியைக் கிரமப்படுத்தி ஜீவாக்கினியை விர்த்தி செய்யும். இதனால் இவ்வியாதி யுண்டாக இடம் பெறாது.

வேறு

அரிசித்திப்பி பலம் - 3, இந்துப்பு, மஞ்சட் கடுக்காய்த்தோல், ஏலக்காயரிசி, முன்மூன்றும் வகை -1-க்கு வராகனெடை-2, வாய்விளங்கம், அஜ்மூதா ஒமம், முள்ளங்கி யுப்பு, கடல்நுரை, மரவுப்பு, சச்சிக்காரம் இவ்வாறும் வகை -1-க்கு வராகனெடை-ஒன்றரை, மிளகு, சுத்திசெய்த கெந்தகம், உலர்ந்த பொதினா இலை, ஏலரிசி, நற்சீரகம், கருஞ்சீரகம், இவ்வேழும் வகை 1-க்கு வராகனெடை-1, இவற்றுள் அரைக்க வேண்டியவைகளை அரைத்துப் பொடித்தும் இடிக்கவேண்டியவைகளை யிடித்துச் சூரணித்தும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு, இஞ்சி ரசத்தைவிட்டு மூன்று நாளரைத்துக்கொண்டு, போஜனத்திற்குப் பிறகு அரை விராகனெடை சூரணத்தைச்சாப்பிட்டுவர, ஜீரணசக்தி விர்த்தியாகும், இரைப்பையிலுண்டாம் கெடுதிகள், அக்கிரமங்கள் ஆகியவை நீங்கும். மேற்கண்ட வியாதிக்கு இட முண்டாகாது. பேதி முதலிய வியாதிகளிலும் இதை உபயோகிப்பதனால் பல பிரயோஜனங்களுண்டாம்.

இடிக்குமனைத் தையுமிடித்து மற்றவையெல்லா
மொன்றா யிசைந்து சேர்த்துப்
பிடிக்குமொரு கல்வத்திற் சம்பீரச் சாற்றை
யிட்டுப் பெருமை யாகப்
படிக்குமொரு நாற்சாம மரைத்துவெயி
றனில்வைத்துப்பண்ப தாகப்
பொடித்துவிராகன் முக்கால்
வெந்நீரிலுணப் பேதி பொருந்திடாதே.

கறியுப்பு, கறுப்புப்பு வகை 1-க்கு வராகனெடை -ஆறரை இந்துப்பு, கண்டத்திப்பிலி, நற்சீரகம், அரிசித்திப்பிலி, கறிமிளகு, செவியம், வாய்விளங்கம், ஏலரிசி, மாதுளைவிதை, கொத்துமல்லி விதை, இவை வகை 1-க்கு வராகனெடை 4, ஏலக்காய், மேல்தோல் நீக்கின சுக்கு, பெருலவங்கப்பட்டை இவை வகை 1-க்கு வராகனெடை -ஒன்றரை,

இவற்றுள் இடிக்க வேண்டியவைகளையிடித்துச் சூரணித்து, மற்றவைகளையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமமரைத்து வெயிலில் வைத்து உலர்த்தி மறுபடியும் பொடித்துச் சூரணமாகச் செய்துகொள்ள வேண்டும்.

பிரமாணம்:- வராகனெடை அரை உட்கொண்டு அதன்மேல் கொஞ்சம் வெந்நீர் பானம் செய்யவேண்டும். இவ்விதஞ் செய்து வருவதால், இக்கொடிய வியாதியானது அண்டாது, ஜீரண சக்தியைக்கிரமப்படுத்தி, இரைப்பை, குடல்கள் முதலிய ஸ்தானங்களிலுள்ள கெடுதிகள், விஷங்கள் முதலியவைகளை நீக்கிச் சுத்திசெய்யும். அஜீரணம், பலவகைப்பேதிகள், பலவகை வாயுகள், வயிற்றிலுள்ள கட்டிகள் முதலிய பல நோய்கள் போம்.

வியாதிகண்டு அவுடதம் உபயோகிப்பதைப் பார்க்கிலும் அது வந்தணுகாமல் தடுத்துக் கொள்வதே பிரதானமாகையால், மேற்கண்ட விதிகளை யனுசரிப்பதுடன் சாலகம், மலவிசர்க்க அறைகள் முதலிய விடங்களில் உண்டாகும் துர்க்கந்தத்தை யெடுக்க, கந்தகம், குங்குலியம் முதலியவைகளைப் புகைக்க வேண்டும். அல்லது இங்கிலீஷ் ஷாப்பில் விற்கப்படும். Phenle பெனைல் என்னும் திராவகத்தைத் தண்ணீரிற் கறைத்துத் தெளித்துவர வேண்டும். முன்சொன்னபடி சுகந்தங்களையும் வீட்டிற் புகைப்பதினாலும் சுகுணமேயுண்டாகும்.

விஷபேதிச் சிகிச்சை

விஷபேதிக்குக் கொடுத்துப் பரீட்சித்த மருந்துகள் அநேகம். ஒவ்வொருவரும் தத்தமக்கு அனுபவப்பட்டவைகளை விசேஷித்துச் சொல்லிக் கொண்ட போதிலும் நிச்சயமானது இன்னதுதா னென்று இன்னுஞ்சொல்ல முடியவில்லை.

ஒருவருக் குதவியது மற்றொருவர்க் குதவாமற்போகின்றது. ஆயினும் ரோக ஆரம்பத்தில் தகுதியான மருந்தைச் சாப்பிட்டால் சுகுணம் பிறக்கும். காலதாமதப் பட்டால் அபாயத்திற் கேதுவாகும்.

இந்தக்கொடியரோகத்துக்கு இந்தமருந்துதான் நிச்சயமாய்ச் சவுக்கியப்படுத்தக் கூடியதென தீர்மானமாய்ச் சொல்லமுடியா தெனினும் பலரால் பல தடவைகள் பலருக்குக் கொடுத்துப் பிரயோசனப்பட்ட சில மருந்துகளை யிங்கு விவரிப்போம். அவைகளில் சிகிச்சைக் கிஷ்டமான தெதுவோ அதை உபயோகித்துக் கொள்ளலாம்.

சுண்ணத் திராவகம்

விருத்தம்

வெந்தசுண்ணம் படியொன்று சுத்தநீராறுபடி விளங்கச்சேர்த்து
முந்துசலந்தனிற்சிறிது விடப்பொங்கி முடிந்தவுடன் முழுவதும்
வார்த்தே

கநதமுறக்கலக்கியொருநாட்சென்று தெளிவிறுத்துக்
கருஞ்சீஷாவிற்
பந்தகஞ் செய்திரண்டுபல மருத்திவிடப் பேதியெல்லாம்
பறக்கும்பாரே.

1) நன்றாய் வெந்த கற்சுண்ணாம்பு, அல்லது கிளிஞ்சிற் சுண்ணாம்பு படி -1, சுத்தஜலம் படி-6, சுண்ணாம்பை யொரு பாத்திரத்திலிட்டு, ஆரம்பத்திற் கொஞ்சம் ஜலத்தை விட்டு அப்பாத்திரத்தின் வாயை மூடிவைக்கவேண்டும். ஒருவித சப்த முண்டாகும். அந்தச் சத்தம் அடங்கினபின் மற்றஜலத்தையும் விட்டுக் கரைத்து நன்றாய்க் கலக்கிவிட்டு- 12-மணிநேரம் வைத்துத் தெளிவை யிறுத்துச் கறுப்பு சீஷாவில் வைத்துக்கொள்ள வேண்டும். கறுப்பு சீஷா அகப்படா விட்டால் வெள்ளைச் சீஷாவின்மீது கறுப்புக் கடிதாசியை ஒட்டிவைக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அதன் குணம் கெட்டுப்போம். இம்மருந்து அதிக சுலபமான தெனத் தோனறினும் எல்லா விததத்திலும் குணத்தில் விசேஷமானது. பேதி காலங்களில் பேதியானால் அஜீரண பேதியா? உஷ்ண பேதியா? விஷபேதியா யென ஆரம்பத்தில் நிச்சயிக்க முடியாமல் சந்தேகமாகவே யிருக்கும். எந்தப் பேதியா யிருந்தாலும். மேற்கண்ட திராவகத்தைப் பயமின்றிக் கொடுக்கலாம். எந்தப் பேதியாயிருந்தாலும் குணத்தையே கொடுக்கும். வயிற்றிலுள்ள விஷப்பூச்சிகளைக் கொன்று விடும். பேதியாகும் போதெல்லாம் தேகத்திற்குத் தகுந்தபடி இரண்டு பலம் முதல் அஞ்சுபலம் வரையிற் கொடுக்கலாம். எல்லா விதத்திலும் குணமுள்ளதும் தேகத்திற்குக் கெடுதி செய்யாததுமாம். அநுபவ சாலிகள் இதன் குணத்தையுடனே அறிந்து கொள்வார்கள். வைத்தியர்கள். வைத்தியர்க ளல்லாதவர்கள் முதலிய யாவரும் இதனைக் கையாடளலாம். அவ்விதமே சிறுவர் முதல்விருத்தர் ஈறாகவுங்கொடுக்கலாம். இதைப்பற்றி வற்புறுத்தியெழுதுவதெல்லாம் ஒரு சிகிச்சகனுக்கு அனுபவசித்தமானதை மற்றொரு சிசிச்சகன் நம்புவது பிரயாசை யாகையால்., இதனையும் அவ்விதம் நம்பாமல் அலட்சியமாகவுங் அசட்டையாகவும் இராமல் இதனை நம்பிக்கையுடன் உபயோகித்து இதன் சிறந்த குணத்தைத் தெளிந்து கொள்ளவேண்டும் மென்பதேயாம்.

இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளில் விற்கப்படும் (Lime water) லைம்வாடர் என்னும் சுண்ணாம்புஜலத்திற் கவ்வளவு குணங்காணப்படவில்லை. இந்தச்சிறியமருந்தைச் சாக்கிரதையுடன்

வியாதியின் ஆரம்பத்தில் கொடுக்க ஆரம்பித்தால் கடவுளினதுகிருபையால் சுகுணமாகவே முடியும். இதனைச்சித்தப்படுத்தக் கஷ்டமுமில்லை. அகப்படாதசரக்குமல்ல. அதிகரூபாய் அவசியமுமில்லை. அதிகக் காலதாமதமுமில்லை. வியாதியின்காரணம் முதலியவைகளைக் கண்டு உபயோகிக்க வேண்டு மென்னும் அவசியமுமில்லை. இதனால் தேகத்திற்குக் கெடுதியுண்டா மென்னும் சந்தேகத்திற்கிடமுமில்லை. மருந்தைச் சாப்பிடுவதற்கும் கஷ்டம்அருவருப்பு முதலியவைகளு மில்லை. ஒரு தடவை சித்தப்படுத்தினாற் பல மாதங்கள் உபயோகப் படுத்தலாம். ஆகையால் நம்மபிமானிகள் இதனை நம்பிக்கை வைத்து கையாண்டு வருவார்களென எதிர்பார்க்கப் படுகிறது. " சுண்ணாம்பிலிருக்கிறது சூக்ஷம், என்னும் பழமொழிக்கிணங்க இது னவத்தியம்வாதம் என்னும் இருவகைகளிலும் உபயோகப் படுகிறது என்பது அநுபவத்தால் அறிவாளிகள் நிச்சயித்து உண்மையைக் கண்டு கொள்வார்களென்பது திண்ணம்.

(2) கருவேப்பிலை (பச்சை) பலம்-20, இதனைப் புதுச்சட்டியிலிட்டு வறுத்துக் கருக்கி, கொஞ்சமும் பசுநிற மின்றி யெல்லாங் கருகினபின், இரண்டுபடி ஜலம் விட்டு எட்டிலொரு பாகமாயச் சுண்டவைத்து அந்தக் கஷாயத்தை யடிக்கடி கொடுத்து வருவதாலும் நல்லகுண முண்டாகும். ஆனால் இது அவசரத்திற்குதவா தாகையாற் கீழ்க்காணும் விதமாகத்திராவக மிறக்கி வைத்துக் கொள்வது தான் உத்தமம்.

திராவகம்
வெண்பா

கருவேப் பிலைவீசை காணவே நான்கைக்
கருகவறுத் தைந்துபடி கார்சேர்த்- தொருவாலை
யிட்டே திரவ மிரக்கியிரண்டு பலம்
விட்டருந்தப் பேதிகள் போமே.

நான்கு வீசை பச்சை கருவேப்பிலையை ஒரு சட்டியிலிட்டு மேற்கண்டபடி பக்குவமாய் வறுத்து எடுத்து நன்றாய்க் குளிர ஆறினபின், வாலையிலிட்டு -5-படி ஜலத்தை விட்டு 5-புட்டி திராவகம் இறக்கிக் கொள்ளவேண்டும்.

பிரமாணம்:- தடவை 1-க்கு பலம் 2- முதல் 3-வரையிற் கொடுக்கலாம்.

இந்த முறையும் அதிக அருமையானதே இதனையும் பயமின்றி, வெந்துப் பேதிக்கும் உபயோகிக்கலாம். உஷ்ணபேதி, அஜீரண பேதி, விஷபேதி முதலியவைக ளெல்லாம் குணமாம்.

மாத்திரை
விருத்தம்

முற்றின முருங்கைப்பட்டை பலமொன்று முன்னுதோல்
கற்றின் வெள்ளைப் பூண்டிற் காலிரண்டரைத்துக் கொண்டு
உற்றகன் மிளகுத்தூளி லொன்றினிற் பாதிசேர்த்துப்
பற்றுதண்ணீர் தெளித்துப் பாங்குட னரைத்திடாயே.

திட்டமாச் சாமமொன்று
சேரவே யரைத்துக்கொண்டு
இட்டமாச் சுண்டைக்காய்போ
லிசைந்து மாத் திரைகள்செய்து
மட்டிலா வெயிலில்வைத்து
வறண்டபின் கொடுத்துச்சேர்த்துக்
கிட்டிய பேதிக்கீயக்
கெட்டுவிட் டோடுந்தானே.

முற்றின முருங்கைப்பட்டை பலம்-1, இதனை அம்மியில் வெண்ணெய்போல் அரைத்துக் கொள்ள வேண்டும். தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ் பலம் அரை, இதனையும் அம்மியல் வெண்ணெய்போல அரைத்துக்கொள்ள வேண்டும். மிளகை வறுத்திடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் பலம் - அரை, இம்மூன்றையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு, கொஞ்சம் தண்ணீர் தெளித்து -1- சாமமரைத்து சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திக் கொள்க முன்சரக்குகளை யரைக்கும்போது அவசியமானால் தண்ணீர் தெளித்துங் கொள்ளலாம்.

பேதிகண்டவுடனே இந்த மாத்திரையைக் கொடுத்தால் உடனே பேதி நிற்கும். அப்படி நிற்காவிட்டால் மறுதடவை கொடுக்க வேண்டும். இவ்விதம் பேதி கட்டுகிறவறையில் -1- மணிக் கொருதடவை கொடுத்துவர வேண்டும். பின் சொல்லப்பட்ட முக்காவேளை தும்பைவேர்க் கஷாயம் முதலிய வேறுதகுந்த கக்ஷாயம் ஆகியவைகளிலும் கொடுக்கலாம்.

இந்த மாத்திரையால் அஜீரணபேதி, மந்தபேதி, அக்கினிமந்தம், அஜீரணம் முதலியவைகளுந் தீரும்.

லேகியம்
விருத்தம்

சுத்திசெய்த கஞ்சாத்தூள் பலமொன்றேகால்
சுக்குமிள கோமஞ்சா திக்காயேலம்
நத்துநெல்லி வற்றல்கர்க் கடகசிங்கி
நல்லிலவங் கம்வகைக்கு பலமுங்காலாய்
ஒத்திடித்துச் சூரணித்து வத்திரகாய
முடன்செய்து தனித்தனிமுன் ளைவேகூட்டி
அத்தருணங் காய்ச்சுக்கட் டித்தூளைந்தா
மரையுடனே பழத்தின்சா றைந்துஞ்சேரே.

இன்னமுங்கேள் வெள்ளைச்சர்ச் கரைபத்துக்கால்
ஏற்றதண்ணீர் பலமைந்து மீட்டிக்கொண்டு
மன்னுபழ ரசஞ்சலத்தை விரவியந்த
வாகான சருக்கரையைக் கரைத்துக்காய்ச்சி
முன்னுகொதி வந்தவுடன் வடித்துமீண்டு
முன்னெருப்பி லிட்டுப்பா காம்பதத்தில்
நன்னயமா யிறக்கிச்சூ ரணத்தைக் கொட்டி
நண்புற்றுக் கிண்டி வெப்பு நலிந்தபின்னே.

கோதில்லா வபினிற்காற் பலமெடுத்துக்
கொஞ்சநீர் விட்டரைத்துக் கூட்டிக்கொண்டு
ஓதுகரத் தாற்பிசைந்து பதனஞ்செய்தே
யுன்னிடும் விராகனெடை யொன்றுபாதி
நீதியுடன் கொடுத்துவிட்டால் நிமிடந்தன்னில்
நிச்சயமாய்க் கொல்லுகின்ற வாந்தியோடு
பேதிமுதல் யாவும்விட்டு நீங்கிப்போகும்
பெருமையுடனிம்முறையைப் பேணு வாயே.

நான்கு பலம் கஞ்சாவைக் கையால் தூளாகச் செய்து ஜலத்தைவிட்டு - 4- மணி நேர மூறவைத்துப் பிறகு நன்றாய்க் கசக்கிப் பிழிந்து விடவேண்டும் மறுபடியும் தண்ணீரிலிட்டு நன்றாய்க் கசக்கிப்பிழிந்து விடவேண்டும். இவ்விதம் 7-தடகைள் செய்து முடிவாய் நிழலிலுலர்த்தி யெடுத்துக் கொள்வதே சுத்தியாம். இதனை யிடித்து வடிகட்டின சூரணம் பலம் கவ, ஓமம், மேல்தோல்போக்கின சுக்கு, மிளகு, ஏலரிசி, லவங்கம், நெல்லிவற்றல், சாதிக்காய், கர்க்கடசிங்கி இவைகளைத் தனித்தனி யிடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் வகை -1-க்குப் பலம்- ஒன்றேகால், காசுக்கட்டித் தூள் பலம்- இர்ண்டரை, எலுமிச்சம்

பழரசம் பலம்-5 வெள்ளைச் சர்க்கரை பலம் இரண்டரை தண்ணீர் பலம்-5.

செய்முறை:- பழரசத்திற் சலத்தைச் சேர்த்துச் சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சி ஒரு கொதிவந்தவுடன் மெல்லிய வஸ்திரத்தால் வடிகட்டித் திப்பி நீக்கி மறபடியும் காய்ச்சிப் பாகுபதத்தி லிறக்கிச் சூரணத்தைக் கொட்டிக் கிளறி நன்றா யாறின பின் -கால்- பலம் அபினியைக் கொஞ்சம் சலம் வார்த்தரைத்து முன் கலவையிற் சேர்த்துப் பிசைந்து கொள்ளவேண்டும்.

பிரமாணம்:- பெரியவர்களுக்கு - அரை- ஒன்று- விராகனெடை கொடுக்கலாம்.

பேதி கண்டவர்களுக்கு ஆலஸியஞ்செய்யாமல் ஆரம்பத்திலேயே யிந்த லேகியத்தைக் கொடுத்தால் வாந்தியும் பேதியும் தக்ஷணமே நின்று சவுக்கியமுண்டாகும். வயிற்றிரைச்சலுடன் காண்கிற பேதிக்கு இது சஞ்சீவி. குழந்தைகளுக்குக் காண்கிற கழிச்சலுக்குங் கொடுக்கலாம். வயிற்றிலுள்ள அஜீரணம் முதலியவைகளை நீச்சிச் சீரண சக்தியை யுண்டாக்குகிறது. இதனை அனேகர் கையாண்டு வரினும் நம்மபி மானிகளுட் சிலர்க்குக் தெரியாமலு மிருக்கலா மாகையால் இது இங்கெழுதப் பட்டது.

பேதிக் கபாடம்

விருத்தம்

வெந்தய மிளகு காயம் மேலதழ் விடுத்த சுக்கு
அந்தமா மோம மஞ்ச ளாங்கடுக் காயின் றோலும்
நந்திடா தகரு வேப்பி லையொடு நாடு மேழும்
தந்திரத் துடனிடித்துத் தனித்தனி வடித்துக் கொள்ளே.

வடித்தொவ்வோர் பலமெடுத்து
வளர்ந்ததோல் நீக்கும் பூண்டில்
நொடிக்குளே பலங்கால் போட்டு
நொறுக்கியே கல்வந் தன்னிற்
பிடித்தரை வெண்ணெய் போலே
பின்புநீ முன்னே சேர்த்துப்
பொடித்தசூரணங்க ளெல்லாம்
புத்திரீயாய்க் கொஞ்சம் கொஞ்சம்.

கொட்டியே சங்கின் சாற்றாற்
குறித்தரைத் திரண்டு சாமம்
பட்டது மைப்போலான
பக்குவம் பார்த்தெடுத்துத்
திட்டமாய்ச் சுண்டைக் காய்போற்
றிகழுமாத்திரைகள் செய்து
மட்டிலாத் தும்பைச் சாற்றில்
மாத்திரை யென்று தீட்டே.

மேல்தோல் சீவப்பட்ட சுக்கு, மிளகு, மஞ்சட்கடுக்காய்த்தோல், ஓமம், கருவேப்பிலை, வெந்தயம், பெருங்காயம், இந்த எட்டுச் சரக்குகளையும் தனித்தனி யிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை -1-க்கு பலம்-1, தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் பலம் -1 சங்கிலைச் சாறு, செல்லத்தக்க அளவு

செய்முறை:- சூரணங்களை யெல்லாம் ஒன்றாய்க் கலந்து கொள்க. பூண்டைக் கல்வத்திலிட்டு முதல் முதல் தனியாய் வெண்ணெய்போல அரைத்துப் பின்புமுன் சூரணங்களைச் சிறுகச் சிறுகச் சேர்த்தரைத்துச் சூரணங்களெல்லாஞ் சென்றபின்பு, முன்சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டே, 2-சாமமரைத்து மைப்போலான பின்பு, சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணமும்:- உபயோகமும்:- மாத்திரை -1- கொடுக்கலாம். முக்காவேளை தும்பைவேர் ஆகிய இரண்டும் சமனெடை. இவற்றைக் கஷாயம் செய்து அதில் இழைத்துக் கொடுக்க மூன்றுவகை விஷூசியும் தீரும். இதனை வெந்நீரிலும் கொடுக்கலாம். 1-மனிண்கொரு தடவையாக 6-மணி வரையிற் கொடுக்கலாம். அல்லது பேதிகட்டுகிற வரயிலும் கொடுக்கலாம்.

அபின் சேர்ந்த மாத்திரைகள் இந்த வியாதியில் சிலருக்குச் சில சமயங்களில் நன்மைக்குப் பதிலாக தீமையையே யுண்டாக்கும் ஆகையால் மேற்கண்ட பேதிக்கபாடத்தை எந்தப் பேதிக்கும் பயமில்லாமற் கொடுக்கலாம். எவருக்கும் இதனால் நன்மையுண்டாகுமே தவிரத் தீமையுண்டாக ஏது விராது.

விஷபேதி மாத்திரை
வெண்பா

காயமில வங்கங் கருதுவெந்த யஞ்சாதிக்
காயு மிளகுங் கருவேலி- லேயும்

பிசினும் வறுத்திடித்துப் பேணியொவ் வொன்றுக்கு
நசியாம லொன்றுடன்கால் நாடி.

எடுப்பாய்வி ராகனெடை யித்துடன் கர்ப் பூரம்
கடுத்தீர்ந்த கெந்தகம்பின் காணும்- வடுத்தீர்ந்த
நல்லிரத கர்ப்பூரம் நன்றாய்வி ராகனெடை
சொல்லும்வகைக் கொன்றேகால் சூழ்ந்து.

முன்னிருமூன் றுங்கலந்து முன்னு மபினைவிட்டுப்
பின்மூன்றை யுந்தனியாப் பேணித்தூள்- பண்ணி
யதிற்கலந்து கொள்வா யபினைக்கஞ் சாவின்
புதுத்திரவம் விட்டரைத்துப் போடு.

போட்டக்கலவையெல்லாம் போற்றுமுன் திராவகமே
கூட்டியொருச் சாமங் குறித்தரைத்து- நாட்டுங்
கடலை யெனவுருட்டிக் காயவைத்தாற் பேதி
யுடலையணு காதோடு மோர்.

(a) மிளகு, சாதிக்காய், கருவேலம்பிசின், வெந்தயம், லவங்கம், பெருங்காயம் இந்த ஆறு சரக்குகளையும் தனித்தனி வறுத்துத் தனித்தனி யிடித்துவஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை -1-க்கு விராகனெடை- ஒன்றேகால். (b) தீபகர்ப்பூரம், சுத்திசெய்த ரசகர்ப்பூரம், சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், அபின் இந்நான்கும் வகை-1-க்கு விராகனெடை - ஒன்றேகால், கஞ்சாவிலைச்சாறு அல்லது உலர்ந்த கஞ்சாக் கஷாயம் செல்லத்தக்க அளவு.

செய்முறை: (a) யிலுள்ள சூரணங்களை யெல்லாம் ஒன்றாகக்கலந்து கொள்ளவும். (b) யிலுள்ள முன் மூன்று சரக்குகளையும் தனித்தனி யிடித்துத் தூள்செய்து முன்சூரணக்கலவையுடன் கலந்து கொள்ளவேண்டும். அபினியைக்கல்வத்திலிட்டு மேற்படி சாற்றை அல்லது கஷாயத்தைக் கொஞ்சம் வார்த்து மைப்போலரைத்து முன் சித்தப்படுத்திவைத்திருக்கிற சூரணத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக முழுவதுஞ் சேர்த்து முன் திரவத்தையே சிறுகச் சிறுகவார்த்து ஒருஜாமமரைத்துக் கடலைப்பிரமாண மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:- ஒரு மாத்திரை உத்தமம் ஒன்றேகால் - மாத்திரை மத்திமம் ஒன்றரை, மாத்திரை அதமம் 2- மாத்திரைகள்

அதமாதமமாம் தேனில் அல்லது சாராயத்தில் அநுபானித்துக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள்:- விஷபேதியில் கொம்பன் என்னும் வகைதவிர மற்றெல்லாவகை விஷபேதிகளுந் தீரும். விஷபேதியால் உண்டான தோஷங்கள், ஜன்னிகள், சுரங்கள், அரட்டல், புரட்டல் முதலிய விஷபேதி சம்பந்தமான எல்லாத் துர்க்குணங்களும் நீங்கும்.

இன்னும் தமிழ் வைத்தியக் கிரந்தங்களில் இந்த வியாதி மூன்று வகைகளெனச் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன.

1) படுவன் என்னும் விஷூசி இதன்லக்ஷணம்:- குடலைப்பற்றித் தங்காமல் பேதியாதல், வாந்தியாதல், காதடைத்தல், மூர்ச்சையுண்டாதல், வயிற்றில் வலி, தேன்போன்ற கழிச்சல், சீதம் விழுதல், நரம்பிழுத்தல் முதலியவைகளாம்.

சிகிச்சை:- அரைப்பலம் விறலிமஞ்சளை நையச் சிதைத்துப், புதுச்சட்டியிற் போட்டெரித்து நன்றாய் நெருப்பானபின், கால்படி தண்ணீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடிகட்டின கஷாயத்தில் மேற்படி மாத்திரையை அநுபானித்துக் கொடுக்க மேற்கண்ட படுவன் தீரும். அல்லது.

நுண்மையாகப் பொடித்த - அரை- பலம் விறலிமஞ்சட் பொடியை இரண்டு ஆழாக்கு முழுக்கூறு காய்ந்த வெந்நீரில் போட்டு- அரை, மணிநேரம் வைத்துத் தெளிலா யிறுத்து சுமார் கால் ஆழாக்குக் கஷாயத்தில்முன் மாத்திரையை அனுபானித்துக் கொடுக்க மேற்படி படுவன் தீரும்.

2) அக்கரன் இதன் லக்ஷணம்:- சேறுபோல பேதியாதல், பேதியில் சோறுவிழுதல், தேகங்குளிர்தல், தாகமூண்டாதல், தேகம், கை, கால் முதலிய ஸ்தானங்களில் நோவு, தேகத்தில் விரைப்பு, மரத்தல் முதலியவைகளாம்.

சிகிச்சை:- மிளகு பலம்-அரை, இதனைப் புதுச்சட்டியிலிட்டு இளவறுப்பாக வறுத்து, இரண்டாழாக்கு ஜலத்தைவிட்டுக் காய்ச்சி- அரை- ஆழாக்காகச் சுண்ட வைத்திறக்கி, அதில் மேற்படி மாத்திரையை அநுபானித்துக் கொடுக்க, மேற்கண்ட அக்கரக் கழிச்சல்தீரும்.

3) கொம்பன் இதன் லக்ஷணம்:- ஒருதர வை பேதியானவுடன் கழுத்துச் சோர்ந்து போதல், தேகமெல்லாம் பிசுபிசுத்த வெயர்வையுண்டாதல், தேகங்குளிர்ந்து ஜில்லிடல்,

இரத்தமெல்லாம் முறிந்து நீராய்ப்பிழிதல் முதலியவைகளாம். இதனை யுடனே 1 கவனிக்கா விட்டால் 30-நாழிகைக்குள் சேதமுண்டாக்குமாகையால் இதற்குடனே அவுடதப் பிரயோகஞ் செய்யவேண்டியது.

இந்த வியாதியிற் சீதளம் ஜன்னி முதலியவைகள் காண்பது வழமையாகையால் அந்தச் சமயங்களிலும் மற்ற சமயங்களிலும் கீழ்க்காணும் சிந்தூரங்களை உபயோகிக்கலாம்.

லிங்கக் கட்டு
விருத்தம்

மணமான சாம்பிராணி கர்ப்பூரந்தான்
வகைக்கொரு விராகனெடை மகிழ்ந்தரைத்துக்
குணமாயோர் வத்திரத்திற் றடவிநான்கு
குறித்ததுண்டு செய்துமுன்சொ லளவேலிங்க
வணமான கட்டிதனிற் கவசித்தொன்றை
மதியாகக் கொளுத்திவெப்ப மடங்கக்கண்டு
தணலான கருக்கொழித்து மீண்டுமூன்று
தரமியற்றிப் பொடிக்கவந்நோய் தரித்திடாதே.

தீபகர்ப்பூரம்: சாம்பிராணி இவ்விரண்டும் வகை 1-க்கு விராகனெடை -1 இவ்விரண்டையும் சேர்த்து அரைக்க மெழுகைப்போலாம், அதனை யொரு துணித்துண்டில் தடவி - 4- துண்டுகளாகச் செய்து கொள்ளவேண்டும். இவற்றுள் ஒரு துண்டை, ஒரு வராகனெடை லிங்கக்கட்டிக்குக் கவசம் செய்து கொளுத்திவிடவேண்டும். ஆறினபின் கருக்கைநீக்கி, மறுதுண்டைச்சுற்றி முன்போலவே கொளுத்தி முன்போலவே செய்யவும். இவ்விதம் மடக்கி மடக்கி யின்னும் இரண்டு தடவைகளும் செய்து கருக்கை நீக்கிச் சுத்திசெய்து பொடித்து வைத்துக்கொள்ளவும், மூன்று குன்றிமணியெடை இத்தூளை முன் சொல்லப்பட்ட முக்காவேளை, தும்பைவேர்க்கஷாயத்திலும், இதற்கு முன் சொல்லப்பட்டிருக்கிற விறலிமஞ்சட் கஷாயம், மிளகுக் கஷாயம் முதலியகைளிலும் கொடுக்கமுறையே அந்தந்த ரோகம் தீரும். இம்மருந்தைச் சமயோசிதமாக ஒரு மணிக்கு அல்லது அரைமணிக்கு ஒருதடவை கொடுத்துக்கொண்டு வரவேண்டும்.

மேற்படி வேறு
விருத்தம்

ஒன்றரை விராகனெடை யுற்றவள வாக
ஒன்றிரத செந்தூர மோர்காடிக் காரம்

துன்றரை கலந்தரை தொடர்ந்துநாற் சாமம்
மன்றவிட பேதிக்கு மதுவினி லருத்தே.

கடையில் விற்கிற இரசசெந்தூரம் அல்லது கைமுறையாய்ச்செய்த இரசசெந்தூரம் விராகனெடை-1, காடிக்காரம் விராகனெடை- அரை, இவ்விரண்டையுஞ்சேர்த்துக் கல்வத்திலிட்டு -4-சாமமரைத்துக் கற்காரக்குள்ள சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டும்- தேன் முதலிய அனுபானாதிகளில் கொடுக்க விஷபேதி, அதிசாரபேதி, கிராணி, மூலவாயு முதலிய ரோகங்கள் தீரும்.

இங்கிலீஷ் முறைகள்
ஓர்வகைப் பானம்
விருத்தம்

தோல கற்றிய சுக்கில வங்கமப் பட்டை
ஏலஞ் சாதிக்காய் வசம்பொடு மேற்றநன் மிளகாய்
சால வேசுட்ட சாம்பலிற் றனித்தனி நான்கு
கோல மாம்விரா கன்னெடை கையினிற் கொள்ளே

கொண்டு புட்டிச்சா றாயத்திற் போட்டுமே குலுக்கு
விண்ட வோர்தின மேவியே யூறின பின்பு
கண்டு நான்காங் கரண்டி வெந் நீரினிற் கொடுக்க
அண்டு பேதிவிட் டகல்வது நிச்சய மாமே.

இக்காலத்தில் இந்த வியாதிக்கு இங்கிலீஷ் மருந்துகளில் அதிக நம்பிக்கை யிருப்பதாலும் பலராலும் விசேஷமாய்க் கையாளப்பட்டு வருகின்றபடியாலும் அவற்றுள்ளும் பிரபலமான சில முறைகளையும் இங்கெழுதுவாம்.

10) மேல் தோல் சீவின சுக்கு, லவங்கம், லவங்கப்பட்டை, சாதிக்காய், ஏலம், மிளகாய், வசம்பு (இதனைவறுத்துச் சாம்பலாக்கிக் கொள்ளவேண்டும் அல்லது நெருப்பிற் சுட்டுக் கரியாக்கிக் கொள்ள வேண்டும்) இந்த ஏழுசரக்கும் வகை 1-க்கு விராகனெடை -4. இவற்றை யிடித்து -1-புட்டி நல்ல சாறாயத்தில் அல்லது பிராந்தியிற் போட்டு அடிக்கடி குலுக்கி 12-மணி நேரம் ஊறின பிறகு இதில் இரண்டு முதல் நான்கு கரண்டி யளவு கொஞ்சம் வெந்நீரில் விட்டுக் கொடுக்கலாம். தித்திப்பாக்க அவசியமிருந்தால் கொஞ்சம் சர்க்கரையைச்சேர்த்து இனிப்பாக்கியுங் கொடுக்கலாம். வியாதி கண்டவுடனே இதனை உபயோகிக்கவேண்டியது. இதைக்குடித்து ஒருமணிக்குள்

சுகுணங் காணாவிட்டால் மறுபடியும் மருந்தை உபயோகிக்க வேண்டியது. ரோகி நன்றாய்ப் போாத்துக் கொண்டு நிம்மதியாய்ப்படுத்திருக்க வேண்டியது.

விஷபேதிச் சிகிச்சை

மதுராஸ் மெயில் பத்திரிகையில் P. எனக் குறிப்பிட்டவர் எழுதி யிருப்பதின் கருத்தை பின்வருமாறு யிங்கு சுருக்கமாய் எழுதுவாம்.

ஐயா,

தற்காலம் இச் சென்னையில் இவ்வியாதி அதிகமாயப் பரவி யிருப்பதால், விஷேமாய்ப் பிரசுரிக்கப்படும் தங்கள் பத்திரிகையின் மூலமாகக் கிருபையுடன் சில சிகிச்சைகளை வெளிப்படுத்தினால் வெகு ஜனோபகாரமா யிருக்கும். (சில நாள்களுக்கு முன்) இந்த வியாதி பரவியிருந்தபோது ஒருவர் பின் வருமாறு எழுதியிருந்தார்.

சில வருஷங்களுக்கு முன் நான் கல்கத்தாவிலிருந்தபோது கல்கத்தாவில் பிரசுரமாம் தின வர்த்தமானப் பத்திரிகைகளுள் ஒன்றில் அவ்விடத்துள்ள ஒரு மருந்து ஷாப்புக்காரரின் உதவி அங்கத்தினரால் பிரசித்தஞ் செய்யப்பட்டிருந்த முறைப்படி சிகிச்சை செய்து வந்தேன் அம்முறை யாவது:-

திறமானகாடி சுமார் மேஜைக் கரண்டியளவு (சுமார் அரை அவுன்ஸ் அல்லது சுமார் அரைப்பலம்) இதற்குத் சமனளவு தண்ணீர். இவ்விரண்டையுங் கலந்து சாப்பிடவேண்டியதே.

இதனால் ஒருவாறு வெற்றியடைந்து வந்தேன். ஆயினும் சீராம்பூருக்கு நான் மாற்றப்பட்டபோது அப்போது அவ்விடம் சீவில் மெடிகல் ஆபிஸரா யிருந்து காலஞ் சென்ற டாக்டர். ஜேம்ஸ் ஸ்கிரீனோ என்பவர் பின் காணும் நிச்சயமான முறையைக்குறித்துச் சொல்லினர் அதாவது:-

காரமான காடி திராவகம் துளி-30
ஸ்வீட் ஸ்பிரிட்ஸ் ஆவ் நைடர் துளி- 10.

or

Strong acetic Acid drops-30
Sweet spirits of nitre drops-10

இவ்விரண்டையுங் கலந்து அரை கிளாஸ் அல்லது அஞ்சு பலந் தண்ணீரிற் கலந்து சாப்பிட வேண்டும்.

இதனை இந்த வியாதியின் எந்த நிலைமையிலும் உபயாகிக்கலாம்.

இவர் உத்திரவின்படியே சிகிச்சை செய்ய ஆரம்பித்த இந்தப் பத்து வருஷங்களுக்குள் என்னிடம் வந்தவர்களுள் ஒருவருந்தவறாமல் எல்லோருஞ் சுகமடைந்தார்கள். இந்த வியாதியின் பல நிலைமைகளில் சிகிச்சை செய்ய ஆரம்பித்தும் ஒருவராயினும் நஷ்டமடைய வில்லை. ஒரு தடவை கொடுத்த மருந்தே. போதுமானதாகக் காணப் பட்டிருக்கிறது. இரண்டாந் தடவை கொடுக்கும்படியாகப் பெரும்பாலும் நேர்ந்த தில்லை. தண்ணீரையும் புகையிலையையும் அறவே தள்ளவேண்டியது. இவைகளை யெந்த விதமாகவும் உபயோகிக்க லாகாது. இதுவும் சிகிச்சையின் ஒரு பாகமாம். இந்த வியாதியினின்றும் முற்றும் சவுக்கிய மடைகிறவரையில் மேற்கண்டவைகளைத் தள்ளிவைக்க வேண்டியது. தாகமதிகமா யிருந்தால் சோடாவாட்டர் ஒரு வாய்கொண்ட அளவுகுடிப்பாட்டலாம். சவ்வரிசி யானது இலகு மலகாரியாகையால் அதை நீக்கவேண்டியது ஆனால், தனி ஆரரூட் கஞ்சி காச்சிக்கொடுக்காலாம். 12-மணி நேரஞ் சென்ற பின் கோழிக் குஞ்சுச் சூப்புடன் ரொட்டி கொடுக்கலாம். மதுபானங் கூடாது. ஒவ்வொரு குடும்பமும், ஓர் அவுன்ஸ் தூரமான காடித்திராவகமும் ஒரு அவுன்ஸ் ஸ்வீட் ஸ்பிரிட் ஆவ் நைடர் திராவகமும் தனித்தனி கல்காரக்கிட்ட இரண்டு சிறுபுட்டிகளில் வாங்கிச் சித்தமாய் வைத்திருக்க வேண்டும். இவ்விரண்டும் எந்த இங்கிலீஷ் மருந்து ஷாப்பு களிலும் கிடைக்கும் என்பதே.

இந்த அவுடதமானது இலகுவானதும் யாவராலும் உபயோகப் படுத்தக்கூடியதும் ஆனதால் அவரவர்கள் தம் தம்மிடம் முன்னதாகவே வாங்கிவைத்திருப்பது உத்தமம். மேலும் இந்த மருந்தானது அஜீரணம், பித்தவாயு தொந்திரவு, வாந்தி, வயிற்றிரைச்சல் வயிற்றுப்பிசம் முதலிய நோய்களுக்கும் உபயோகமாம்.

கீழ்க்கண்டும் முறைகளும் பலரால் பல தடவை களில் உபயோகப் பட்டவைகளா கையால் அவைகளையும் இங்கெழுதுவாம்.

கர்ப்பூரக் கலவைத் திராவக மென்னும் கேம்பரடைன் (Camphoro dyne இந்த அவுடதமும் இங்கிலிஷ்ஷாப்பில் விற்கப்படுகிறது. ஒரு அவுன்ஸ் ஜலத்தில் 30- துளி மேற்படி திராவகத்தை விட்டுக் கொடுக்கலாம். இவ்விதம் சமயோசிதமாக இரண்டு மணிக்கொருதடவை உபயோகித்து வரலாம்.

2) வங்க உப்பு (Sugar of Lead) 12- கிறேன், ரச பஸ்பம் (Caloine) 18-கிறேன், சூடன் 12-கிறேன், அபின் 6-கிறேன், சுக்குச் சூரணம், 1- கிறேன் மிளகுச் சூரணம் 1-கிறேன் அரிசித் திப்பிலிச் சூரணம்-1-கிறேன் இவைகளைச் சேர்த்தரைத்து - 12- மாத்திரைகளாகச் செய்து பெரியவர்களுக்கு இரண்டு மாத்திரைகளும், 15- வயதள்ளவர்களுக்கு -1-மாத்திரையும் 10- வயதுள்ளவர்களுக்கு அரை மாத்திரையும் 2-3-மணிக் கொருதடவை சுகுணம் பிறக்கிற வரையிற்கொடுக்க வேண்டியது. இதனோடு ஓமத்தண்ணீருங் கொடுத்துக் கொண்டு வரலாம். **Dr. Patcrsons, Cholera pill.**

மாத்திரை

வெண்பா

மாமிளகின் சூரணமும் வாகான காயமபின்
தாமதமில் லாமற் சமமாக்கிக்- காமமுற
மாத்திரைகள் செய்து வழங்கினாற் பேதிமிடி
காத்திரம்விட் டோடுமே காண்.

3) மிளகுச்சூரணம், பெருங்காயம், அபினிவகை 1-க்கு கிறேன் 12, இவைகளை மிஸ்ரமித்து - 1-2-மாத்திரைகளாகச் செய்து, ஒரு மாத்திரை விகிதம், அரை, ஒரு மணிக் கொருதடவை ரோகந் தணிகிற வரையிற்கொடுத்து வரலாம். 7-14- வயதுடையவர்களுக்கு அரை மாத்திரை கொடுக்கலாம்.

4) கர்ப்பூரம்- 5- கிறேன், அபின் 1.2,கிறேன் இவைகளைச் சேர்த்து மாத்திரை செய்து-1- 2- நாழிகைக் கொருதடவை, ரோகந் தணிகிற வரையிற் கொடுத்து வரலாம்.

விசூசி திராவகம்

விருத்தம்

சுக்கிலவங்கஞ் சாதிக்காய்
        சுட்ட வசம்பு மிளகாயும்
மிக்காகற்புவாப் பட்டையுடன்
        மிளங்குமேலும் விராகனெடை

ஒக்கநான்கு தனித்தனியே
        யுவப்பாயிடித்தோர் புட்டியிலே
மிக்கவுறைசாறாயத்தில்
        விளங்கப்போட்டுக் குலுக்கிவிடே.

விட்டேசாம மைந்துமட்டு
        மேவியூறப் பின்னெடுத்துக்
கிட்டிக்கரண்டி நான்குதனைக்
        கிளர்வெந்நீரிற்குளமிட்டு
இட்டமுடனே கொடுத்துவிட்டா
        லிருக்காபேதி யிருக்குமெனில்
திட்டமுடனே மறுபடியுஞ்
        சிறப்பா யருந்தப் பறக்காதோ.

5) சுக்கு, லவங்கம், கருவாப் பட்டை, சாதிக்காய், ஏலம், மிளகாய், சுட்ட வசம்பு, வகை 1-க்கு 4-வராகனெடை, இடித்து ஒரு புட்டி பிராந்தியிற் போட்டுக் குலுக்கிக் குலுக்கி, 12-மணிநேரம் ஊறின பிறகு அதை உபயோகிக்கலாம். வியாதி கண்டவுடனே இதில் 2-4-கரண்டி அளவு எடுத்துக் கொஞ்சம் வெந்நீரில் விட்டு இனிப்புகாகச் சர்க்கரை சேர்த்துக் குடித்து விடலாம். இதைக் குடித்து ஒரு மணிக்குள் குணங்காணா விட்டால் மறுபடியும் முன்மருந்தையுபயோகிக்க வேண்டியது. ரோகி கம்பளி முதலியவைகளைப் போர்த்துக்கொண்டு நிம்மதியாய்ப் படுத்துக் கொண்டிருக்க வேண்டியது.

6) டாக்டர், டப்ளியூ, மிச்செல் என்பவரும் பின்வரும் அவுடதத்தைச் சருமத்தில் பீச்சிடச் சொல்கின்றார்.

கெந்தகத் திராவகம்	டிராம் - ½
ஸல்பேட் ஆவ் மார்பியா கிறேன்	டிராம்- ¾
பிராந்தி	டிராம் - 1½
தீநீர்	அவுன்ஸ் - 3

இவைகளை யொன்றாய்ச் சேர்த்துத் தேகத்திற் பீச்சிடவும்.

7) டாக்டர் ஜீ. தஹர்ஸ்டன் என்பவர் சொல்கின்றார்.

ரஸபஸ்பத்தையும் அபினியையும் மாற்றி மாற்றிச் சிலமணி நேரம் கொடுக்கவேண்டும். அதனுடன் கீழ்க்காணும் முறையையும் உபயோகித்து வரவேண்டும்.

கஞ்சாச் சத்து	கிறேன்-12
சூடன்	டிராம்- ½
குளோர பாரம்	அவுன்ஸ்-½
கற்பூரத்தைலம்	டிராம்- 2
விளாம்பிசின் பாகு	அவுன்ஸ்- ½
சாதாரண ஷர்பத்து	அவுன்ஸ்- ½
லவங்கப்பட்டைத்தீநீர்	அவுன்ஸ்- 1

இவைகளை யொன்றாய் மிஸ்ரமித்து ஒவ்வொரு தேக்கரண்டியளவு ஒன்று அல்லது இரண்டு மணிக் கொருதடவை, வியாதியின் கொடுமைக்குத் தகுந்தபடி கொடுத்துவரவேண்டு மென்பதே.

8) டாக்டர் ஜே.டி. ஜோன்ஸ் என்பவர் பின்காணும் முறையை இந்தரோகி ஜில்லிட்டுக் குளிர்ந்திருக்கும்போது கொடுக்கலாமெனச் சொல்கின்றார்.

கிரியாஸோடி (Criasoti)	துளி-ஒன்று
கர்ப்பூர ஜலம்	டிராம்- 6
ஜென்ஷியன் கலவைப்பாவன திராவகம்	டிராம்-6

இவைகளை மிஸ்ரமித்து ஒரு தடவை கொடுக்கவும் இவ்விதம் இரண்டு மணிக்கொரு தடவை கொடுத்து வரவேண்டும்.

9) டாக்டர் ஸ்டீவன்ஸ் துரை சொல்கிறதாவது இந்த ரோகிக்குக் கெண்டை யேறுதல் என்னும் நரம்பு வலிப்பு, தேகங் குளிர்தல், நாடி நடை நிற்குதல் ஆகிய குணங்களுண்டானால் இந்த வியாதியானது இரண்டாம் நிலையிலாகி விட்டதென நிதானித்துக் கீழ்க்காணும் பிரயோகத்தை உபயோகிக்க வேண்டியது அம்முறை யிது.

குளோரைட் ஆவ் ஸோடியம்	டிராம்-2
கார்போனெட் ஆவ் ஸோடா	டிராம்-2
குளோரைட் ஆவ் பொடாஷ்கிறேன்	- 40
தண்ணீர்	அவுன்ஸ்-6

இவைகளை யொன்றாய் மிஸ்ரமித்து இரண்டு மேஜைக் கரண்டி யளவு, கொஞ்சம் தண்ணீருடன் அரை மணிக் கொருதடவை கொடுத்து வரவேண்டும்.

வயிற்றுவலிச் சிகிச்சை
வெண்பா

பேதியா லுண்டாம் பெரிய வயிற்றுவலிக்
கோது கடுகை யுடனரைத்துப்- போதத்
துணியிற் றடவிச் சொலுமகட்டிற் போடத்
தணியும் வலியென்றே சாற்று.

வயிற்றில், வலி வயிற்றுப் புரட்டல் முதலியவை அதிகமா யிருந்தால், கடுகையரைத்து ஒரு துண்டுத் துணியில் தடவி வயிற்றின் மீது போடவேண்டும்.

10) டாக்டர் டப்ளியு ஸெட் ஜுரிக்துரையவர்கள் சொல்கிறார்:- விளாவின பாஸ்பரிக் ஆஸிட் அரை டிராம், கொஞ்சம் நாரத்தம்பழ ஷர்பத்துடன் கலந்து பணிக்கட்டி ஜலத்தையும் கூடவிட்டு நன்றாய் மிஸ்ரமித்துக் கொடுத்தால், பேதி, விஷபேதியின் ஆரம்பஸ்திதி ஆகியவைகளில் கெந்தகத் திராவகத்தால் உண்டாம் பிரயோசனத்தைப் பார்க்கிலும் அதிகப் பிரயோஜன முண்டாம் என்பதே.

டாக்டர். ஜீ. ஜான்ஸன். எம்.டி. என்பவர் சொல்கிறார்.

இந்தப் பேதியில் அபினியை அளவிற் கதிகமாகக் கொடுத்து வெளிப்பட வேண்டிய துர்மலத்தைத் தடைப்படுத்த லாகாது, வெளிப்பட வேண்டிய அம்மைக் கொப்பளத்தை வெளிப்படாமல் அழுந்திப் போகச் செய்வதால் எவ்விதம் கெடுதி யுண்டாமோ அவ்விதமே மேற்கண்ட பேதியைத் தகாதவிதமாய்த் தடை செய்வதால் விபரீத முண்டாகும். ஆகையால் இந்த வியாதியில் விஷத்தை வெளிப்படுத்த வேண்டியபோது தண்ணீரைக் கொடுத்து விஷத்தை வெளியாக்கிக் குடலைச் சுத்தி செய்யவேண்டியது. இவ்விதம் நிதானித்து அறியக் கூடிய விஷயம் தகுந்த அநுபவசாலிகளுக்கே தகும். ஆயினும் வயிற்றில் கையைவைத்துப் பார்ப்பதனாலும் வயிற்றைத் தட்டிப் பார்ப்பதனாலும், உப்பிசம், கனம் முதலியவைகளை நிதானித்துக் கொள்ளலாம். அபினி சாப்பிட்டதால் குடலில் தொழில் குறைந்து விஷ மலங்கள் சேர்ந்து அபாயத்துக் கிடமா யிருந்தால், உடனே ஒரு மேஜைக் கரண்டியுளவு ஆமணக் கெண்ணெயை எலுமிச்சம் பழச்சாறு தண்ணீர் ஆகியவைகளில் ஒன்றுடன் சேர்த்துக் கொடுக்கவேண்டும். அரைமணி நேரம் வரையில் நோயாளியை நிம்மதியாய்ப் படுத்திருக்கச் செய்யவேண்டும். இப்படிச்

செய்வதால் இரண்டு மூன்று மணிக்குள்ளாக இதன் குணம் செம்மையாய் வெளிப்பட ஏதுவாகும். பிறகு ஒரு மேஜைக்கரண்டி யளவு பிராந்தியை இளகலான அரரூட் கஞ்சியுடன் அல்லது அரிசி நொய்க் கஞ்சியுடன் சேர்த்துக் கொடுக்கவேண்டும். வயிற்றில் வலி அதிகமா யிருந்தால், 5-10- துளி லாடனத்தைக் குளிர்ந்த ஜலத்திற் கலந்து கொடுக்க வேண்டும். இந்தச் சிகிச்சையால் அனேகருக்குச் சீக்கிரங் குணமுண்டாகி யிருக்கிறது.

ஆமணக்கெண்ணெய்க்குப் பதிலாய்- 15- கிறேன். ரேவல் சீனிச் சூரணத்தை அல்லது அரை டிராம் ரேவல் சீனிபாவனத் திராவகத்தைக் கொடுக்கலாம். ஆமணக் கெண்ணெய் உபயோகிக்க வேண்டியபோது வாந்தியாகிக் கொண்டிருந்தால் வெந்நீரை அதிகமாய்க் குடிப்பாட்டி நன்றாய் வாந்தி செய்வித்துப் பிறகு மேற்படி எண்ணெயை உபயோகிக வேண்டும். வாந்தியில்லாமல் வயிற்றில் துர்மலத்தால் அல்லது அஜீரண வஸ்துவால் வெறும் ஒக்காள மாத்திர மிருந்தால், 20-கிறேன் இபிகாகுவானாவை அல்லது ஒரு கரண்டி கடுகையும் அவ்வளவு உப்பையும் சேர்த்த கலவையைக் கொடுத்து வாந்தி செய்விக்க வேண்டும்.

11) ஜான் மர்ரே எம்,டி, துரையவர்கள் சொல்கின்றார், ஜீரணமாகாத சத்துக்கள், வயிற்றில் சேர்ந்திருப்பதால் பேதியானால் அந்த அசுத்த சத்து உடனே நீங்கிப் போம். வாந்தி, பேதியாகியவை பாகியும் அது வெளிப்படா விட்டாலும், பேதி யதிகமாவதைத் தடுக்கவேண்டியபோதும் கீழ்க்காணும் மாத்திரையை யுபயோகிக்க வேண்டியது.

அபினிச் சூரணம்	கிறேன்- 1
மிளகுச் சூரணம்	கிறேன்-2
பெருங்காயச் சூரணம்	கிறேன்-3

இவைகளைச் சேர்த்து ஒரு மாத்திரையாகச் செய்து கொடுக்க வேண்டும். இம்மாத்திரையை எந்தச் மயத்தில் உபயோகித்தாலும். குற்ற மில்லை. இதனால் பேதிகட்டுப்படுவதுடன் வயிற்றிலுள்ள அசுத்த மாசுகள் வெளியாகும். இந்த மாத்திரை யிந்தவியாதிக்குபயோகப்படுவது மன்றி மற்றும் பல வியாதிகளுக்கு உபயோகப் படுகிறது பேதியாகும்போ தெல்லாம் ஒவ்வொரு மாத்திரையாகக் கொடுத்துவர வேண்டும். இந்த மாத்திரையை ஒவ்வொரு குடும்பத்திலும் கட்டாயம் சித்தம் செய்து வைத்திருக்க வேண்டும். வியாதி யாரம்பித்த வுடனே யிதனை உபயோகிக்க வேண்டும்.

டாக்டர் ஸ்கிவிப் என்பவர் சொல்கிறார்.

விஷபேதி பரவி யிருக்குங் காலங்களில், 24-மணி நேரத்திற்குள் வழமைக்கு விரோதமாய் மலோபாதைகழிக்க நேரிட்டால், உடனே அதைக் கவனித்துச் சமயத்திற்குத் தகுந்ததுபோல் நடத்தவேண்டியது. கீழ்க்காணும் முறையை எல்லா வகையிலும் உபயோகிக்கலாம். அம்முறையிது:-

சுத்திசெய்த அபினிப் பாவனத் திராவகம் அவுன்ஸ்-1	
ஸ்பிரிட்ஸ் ஆவ் காம்பர் அவுன்ஸ்-1	
சீமைமிளகாய்ப்பாவனத்திராவகம்	அவுன்ஸ்-1
பியூர் குளோர பாரம்	டிராம்-2
அல்கோஹல் (95- p-c)	அவுன்ஸ்-5

இவை யெல்லா வற்றையும் ஒன்றாய்க் கலந்து கீழ்க்கண்டபடி தண்ணீரிற் கலந்து கொடுக்கவும்.

18-வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஒரு தேக்கரண்டி யளவும் 14-வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஒருசிறு தேக்கரண்டி யளவும் பத்து வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அரைத் தேக்கரண்டி யளவும், 6-வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 30-துளியும், இரண்டு வயதுக்கு மேற்பட்டவர் களுக்கு 10-முதற் - 30 துளி வரையிலும் சிறு பிள்ளைகளுக்கு வயதிற்குத் தகுந்த விதமாக-1- முதல் 10-துளி வரையிலும் தண்ணீரிற் கலந்து கொடுக்கலாம்.

இது நல்ல முறை யாகையால் இதனை வாங்கி யெப்போதுங் கையிருப்பாக வைத்திருக்க வேண்டியது. இந்த விஷபேதி தவிர மற்றெல்லா வகைப்பேதிகளிலும் இதனை உபயோகிக்கலாம். பெரியகுடும்பமுள்ளவர்களும் அதிக ஜனக் கட்டுள்ளவர்களும் இதனைச் சித்தமாய் வைத்திருப்பதால் அவசரத்திற் குதவும். இது சாதாரணமாய் எல்லா இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் சொற்ப விலைக்குக் கிடைக்கும். தனவான்கள் பரோபகாரமாய் மேற்படி முறைப்படி சித்தப்படுத்திச் சிறு சீஷாக்களிலடைத்து அதையுபயோகிக்கவேண்டிய விதத்தையும் சிறு கடிதாசித் துண்டிலச்சிட்டு அதன் மேல் ஒட்டி யிலவசமாய்க் கொடுத்துப் புண்ணியம் சம்பாதிக்கலாம்.

குளோரர்டைன்

இந்த அவுடதமானது மேற்கண்ட வியாதிகளிலும் மற்ற வியாதிகளிலும் அதிகங் கையாளப்பட்டு வருகின்றபடியால் அநுபவமான இரண்டொரு முறைகளையும் இங்கெழுதுவாம்.

ஸ்ல்பேட்ஆவ் மார்பியா	கிறேன்	- 80
விளாவின ஹைட்ரோ ஸியானிக் ஆஸிட்	அவுன்ஸ்	- ½
கிளீஸிரீன்	அவுன்ஸ்	- ½
காராமெல்	அவுன்ஸ்	- ½
கஞ்சாச்சத்து	கிறேன்	- 40
பெபர்மின்ட் ஆயில்	டிராம்	- ½
ஒலியோ ரிஸினி காப்ஸிலை	மினிம்	- 15
பியூர்குளோரபாரம்	அவுன்ஸ்	- 6
அல்கோஹல்	அவுன்ஸ்	- 1

இவை யெல்லாவற்றையும் ஒன்றாய்க்கலந்து பெரியவர்களுக்கு- 30- துளி கொடுக்கலாம். மற்றவர்களுக்கு வயதிற்குத் தகுந்தபடி அளவை யேற்படுத்திக் கொள்ளவேண்டும்.

குளோரர்டைன் (வேறு)

பியூர் குளோர பாரம்	டிராம்- 4
ஸல்பியூரிக் ஈதர்	டிராம்-4
அபினிப்பாவனத் திராவகம்	டிராம்-4
சீமை மிளகாய்ப் பாவனத் திராவகம்	டிராம்- 3
விளாவின ஹைட்ரோஸியானிக் ஆஸீட்	டிராம்-1
சாதா ஷர்பத்து	அவுன்ஸ்-4

இவைகளை மிஸ்ரமித்துக்கொள்ளவும். பெரியவர்களுக்கு - 20- முதல் - 30- துளிவரையிற் கொடுக்கவும் மற்றவர்களுக்கு வயதிற்குத் தக்கபடி கொடுக்கவேண்டும். தண்ணீர் முதலியவைகளிலும் அனுபானித்துக்கொடுக்கலாம். தனியாகவும் கொடுக்கலாம். ஒவ்வொரு தடவையும் பேதியாகும்போதெல்லாம் கொடுத்து வியாதி முற்றிலும் நிற்கிறவரையில் உபயோகிக்கலாம்.

குளோரர்டைன் (வேறு)

பெபர் மின்ட் மது (Spirit)	டிராம்-2
கர்ப்பூர மது	டிராம்-2
குளோரபார மது	டிராம்-2

சீமை மிளகாய்ப்பாவனத் திராவகம் (Tineture)	டிராம்-2
சுக்குப் பாவனத் திராவகம்	டிராம்-2
கரசுக்கட்டிப் பாவனத் திராவகம்	அவுன்ஸ்-6
டிஜிடாலிஸ் பாவனத் திராவகம்	அவுன்ஸ்-1
விளாவின ஹைட்ரோஸியானிக் ஆஸிட்	டிராம் -2
கிளிஸிரீன்	அவுன்ஸ்-3
பிராந்தி சாறாயம்	அவுன்ஸ்-2

இவை யெல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து கொண்டு சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டும். இரு பது துளியை ஒரு டிராம் தண்ணீரிற் கலந்து, நான்கு மணிக்கு ஒரு தடவை வாந்தியும் பேதியும் நிற்கிற வரையிற் கொடுத்து வரவேண்டும்.

டாக்டர் டப்ளியு வாகர் துரை இதைப்பற்றிச் சொல்கிறார்:- விஷபேதி கண்டவுடனே தாமதமின்றி மேற்படி குளோர்டைன்- 20- துளியை ஒரு உத்திரணி ஜலத்திற் கலந்து கொடுக்கவேண்டும். அவசியமானால் ஒவ்வொரு - 15- நிமிஷத்திற் கொரு தடவையும் கொடுத்து வரலாம். இரண்டொரு தடவைக்குள்ளாகவே சுகுண முண்டாகி விடுகின்ற படியால் மூன்றாம் தடவை கொடுக்கும் படியான அவசியம் பெரும் பாலும்நேரிடாது. இதனுடனே சிகிச்சைக் குரிய மற்றவிஷயங்களையும் கையாடி வரவேண்டியது. இந்தக் குளோர்டைன் ஆனது குழந்தைகளின் பேதி, சீதபேதி முதலியவைகளிலும் பெரும் பிரயோசனத்தைத் தருகிறது. ஆனால் பெரியவர்களின் சிகிச்சைக்காக மேற்படி குளோர்டைன் மூன்று அவுன்ஸிற்கு 1-டிராம் அபினிப் பாவனத் திரவத்தைச் சேர்த்துக் கொண்டு, டிஜிடாலிஸ் பாவனத் திரவத்தை நீக்கி விடவேண்டும்.

மேற்கண்ட குளோர்டைன் ஆனது அபினி சேராததாகையால் எந்தச் சமயத்திலும் சந்தேக மின்றி உபயோகிக்கலாம்.

டாக்டர் சிடான்ஷா அவர்கள் இந்த வியாதியின் சிகிச்சையிற் பின் வரும் விஷயங்களைக் கவனிக்கவேண்டிய தெனச் சொல்கின்றார் அவையாவன:-

1) இந்த நோயாளியைக் கட்டிலின் மீது நிம்மதியாகப் படுத்திருக்கச் செய்யவேண்டும்.

2) இந்த நோயாளியின் மலம் மூத்திரம் முதலியவைகளை, அன்ன பேதித் தூள், மண் ஆகிய இரண்டும் ஒன்றாய்க் கலந்து ஒரு சட்டியில் அரைவாசி போட்டு, அதில் புதைத்து வாசஸ்தானம்.

கிணறு முதலியவைகளுக்குத் தூரமான விடத்தில் புதைக்க வேண்டும்.

வெண்பா

விடபேதிகண்ட தொரு வீட்டிலசுத்தம்
படலாகா கந்தம் பரவுந்- திடமான
தூமம் பலவிட்டுச் சூழ்ந்தவிட மெவ்விடத்துஞ்
சேமமுற வேசுத்தி செய்.

3) இந்த நோயாளி யுள்ள வீட்டில், சந்தனம், கெந்தகம், முதலியவைகளைப் புகைக்க வேண்டும்.

4) இந்த நோயாளியுள்ள அரையில் பலரும் சேர்ந்திருக்கக் கூடாது. நோயளியின் சவரக்ஷணைக் காகத் தகந்த இரண்டொருவர் இருந்தால் போதுமானது.

5) நோயாளிக் குண்டாகும் துர்க் குறிகளை அவனுக் கெதிரில், அல்லது அவனறியும்படி சொல்லலாகாது.

வெண்பா

பயந்தவர்வெங் காயம் பகரும் பிறாந்தி
நயந்தருந்த வேண்டுமவர் நண்பர்- இயைந்து
திடஞ் சொல்லப் பேதிவந்து சேராது துன்பம்
உடம்பொன்றி டாதங் குரை.

6) இவ்வியாதி பரவி யிருக்குங் காலங்களில் பயத்தால் மனங் கலங்கினால் வெங்காயத்தை அல்லது பெப்பர் மென்டை அல்லது ருசியுள்ள அவுதத்தை அல்லது சட்னியைக் (சுண்டாங்கியை) கொடுக்கவேண்டும். பயங் கொண்டவர்களுக்கு வயிற்று நோவு அல்லது வயிற்றில் குறு குறுப்பு அல்லது பேதியாகும்போல் தோற்று மாகையால் அவர்களுக்குக் குளோர்டைனை அல்லது பிறாந்தியைக் கொஞ்சம் கொடுக்கவும். நல்ல விதமாகத் தெம்பு தைரியம் சொல்லி அவனைத் தேறுதல் செய்யவேண்டும். துணிவுள்ளவனுக்குப் பேதியானால், அவனுக்குச் சுகமா யிருக்குமே தவிர வேறொன்றுஞ் செய்யா தாகையால் ஒன்றுமே அவசியமில்லை

7) வாந்தியாவதால் பலங் குறையாமல் வயிற்றின் கனங் குறைந்து வந்தால் அதன்னை நிறுத்த முயலலாகாது. ஆனால் வயிற்றின் கனம் கொஞ்சமுங் குறையாம லிருக்கும் பக்ஷத்தில்

கடல் தேங்காயைப் பன்னீரிலிழைத்துக் கொடுக்கலாம். அல்லது சோடாவாடரைக் குடிப்பாட்டலாம். காடி ஷர்பத்தைக்கொடுக்கலாம். வயிற்றுக் கன மில்லாமலும் நோயாளியின் பலமுங் குறைந்து வரும் பக்ஷத்தில் இரண்டு புஜங்களையும் இறுக்கிக் கட்டவேண்டும். சவுக்கியமாக மல்லாந்து படுத்திருக்கும்படி செய்யவேண்டும். வயிற்றில் சூடதிகரித் திருந்தால் சந்தனம் முதலியவை களை வயிற்றில் பற்றிட வேண்டும். வயிற்றின் மீது விசிறலாம். கடல் தேங்காயைப் பன்னீரி லிழைத்துக் குடிப்பாட்டலாம். வயிற்றில் சூடில்லாத காலங்களில் பெபர் மெண்ட், ஏலக்காய், பொதினா ஆகியவைகளி லொன்றைக் காய்ச்சின கஷாயத்தைக் கொடுக்கலாம். வாந்தியை நிறுத்த வயிற்றின் மீது கடுகுபோல் டீஸைப்போடுவது வயித்தியரின் அபிப்பிராயத்தைச் சார்ந்தது.

8) பேதி யாவதால் தேகபலங் குறையா திருந்தால் அதை அவசரமாய்க் கட்ட முயற்சி செய்ய வேண்டியதில்லை. அல்லது உடனே குளோர் டைனில் பெரியவர்களுக்கு 20.துளி வகிதம் பன்னீரில் அல்லது தண்ணீரிற்சேர்த்துக் கொடுக்கவேண்டும். ஆனால் நான்கு தடவைக் கதிகம் கொடுக்கலாகாது. குளோர்டைனை உபயோகித்துப் பேதி குறைந்து கொஞ்சமாகப் போனாலும் அல்லது பச்சை நிறமுள்ளதாக அல்லது மஞ்சள் வருணமுள்ளதாகப் பேதியானாலும் குளோர்டைனை நிறத்தி விடவேண்டும். அல்லது அஞ்சு அல்லது பத்து பத்து, துளிக்கணக்காகக் குறைந்த அளவாய்க் கொடுக்கவேண்டும். அல்லது வேறு இலகுவான மலபந்தன காரிகளை உபயோகிக்க வேண்டும். குளோர்டைனை நான்கு தடவைகள் உபயோகித்துங் குணங்காணா விட்டால் அதனிலும் பலமானமலபந்தன காரி யாகிய வங்கச் சர்க்கரையை அல்லது மாசக்காய்ச் சத்தை அல்லது சேப்புப்பழச்சத்தைக் கொடுக்கவேண்டும்.

9) வியாதியின் ஆரம்பத்தில் அல்லது சற்றுதாமதமாய் மூன்றாம் நிலைமையாகிய (குலாப்ஸ்) என்னும் தேகத்தளர்ச்சியின் குறிகளுண்டானால் தேகப்பலத்தை நிலையாய் வைக்க, அரை டிராம் பரிமள நவச்சார மதுவைக் கொஞ்சந் தண்ணீரிற்கலந்து கால்மணிக் கொருதடவை கொடுத்து வரவேண்டும். அல்லது ஏலக்காய், பொதினா ஆகிய இரண்டையும் அல்லது இரண்டி லொன்றைச் காச்சின கஷாயத்தை அடிக்கடி கொடுத்துவரவேண்டும். சுக்கு, சாதிக்காய், லவங்கம்

முதலியவைகளின் சூரணத்தைக் கைகால் முதலியஸ்தானங்களில் தேய்க்கவேண்டும்.

பேதியினாலுண்டாந் தாகத்துக்கு மருந்து
வெண்பா

சோம்புத்திரவஞ் சொலுமாதுளையிரதம்
ஓம்புபனிக் கட்டி யுடைந்த மோர் - காம்பில்லா
முந்திரிகை நற்பழமு முன்னுமே லக்காயு
வந்தவறள் போக்கு மதி.

10) தாகமதிகக் கடுமையா யிருந்தால் பனிக் கட்டியைக் கொடுத்துச் சப்பச் செய்யலாம், அல்லது சோம்புத் திராவகம், காவுஜ ்பான் திராவகம் முறித்தமோர், மாதுளம்பழரசம் முதலியவைகளி லொன்றைக் கெடுக்கலாம். தைரிய மிருந்தால் குளிர்ந்த ஜலத்தில் கைகாலை வைத்திருக்கச் செய்யலாம். பயமில்லா திருந்தால் தண்ணீரிலும் குளிப்பட்டலாம் (ஆனால் நம்மவர்கள் இந்தச் சமயத்தில் இவ்விதம் செய்ய விடுவார்க ளென்னும் நம்பிக்கை யில்லை யாயினும் எழுதவேண்டியதை யெழுதித் தீரவேண்டியதே கடமை). தண்ணீரை அல்லது பன்னீரைத் தெளித்து, விசிறச் செய்யலாம். வாயின் வறட்சியை நீக்க ஆலுபுகாறா, திராக்ஷப்பழம், ஏலக்காய் ஆகியவைகளி லொன்றை வாயில் வைத்திருக்கச் செய்யலாம்.

பேதிக்களைப்பிற்கு மருந்து
விருத்தம்

மன்னுகின்ற பேதியினாற் கண்ணிருண்டு
மதிமயங்கி வருந்துவோர்க்கு
முன்னுபரி மளநவச்சா ரம்மதுவைக்
கைக்கொண்டு முறையாய்நீரில்
நன்னயமாய்க் கலந்தருத்த மயக்கமொடு
தகையிளைப்பு நசிந்துபோகும்
பின்னமின்றிப் பேதியுற்றா னுயிர்பெறுவா
னிம்முறையைப் பேணிப்பாரே.

11) தாகத்தா லன்றி எடுப்பதாலும் படுப்பதாலும் மயக்கம், களை ஆகியவைக ளுண்டானால், அதை நீக்கப் பரிமள நவச்சார மதுவைப் பார்க்கிலும் அதிகம் உயர்ந்த மருந்து வேறொன்றும் யில்லை யெனச் சொல்லாம்.

பேதியிசிவுக்கு மருந்து
வெண்பா

வாடும் படியிசிவு வந்தாலுடனறிந்து
சூடன் கொடுக்கத் தொலைந்து போம் - கூடுங்
கடுப்பா மிடத்தையுற்றுக் கட்டுவத னாலும்
பிடிப்புவிட்டுப் போமிதனைப் பேண்.

12) கெண்டை யேறுதல் முதலிய இசிவால் அதிகத் தொந்திரவுண்டானால், சூடனைக் கொடுக்க வேண்டும். இசிவுள்ள விடத்தைக் கட்டி வைப்பதனாலும் குணமுண்டாகும்.

பேதிநீர்க்கட்டுக்கு மருந்து.
வெண்பா

நல்லகர்ப்பூ ரத்தயில நாடும்பிடரதனில்
ஒல்லையிலேதேய்க்க வுறுதியுடன்- தொல்லையா
நீருக்கட் டும்மதனா னேர்ந்தமிடி யுந்தீரும்
பாருக்கு ளீதுதிறம் பார்.

13) தண்ணீரில் வால் மிளகை யிட்டுக் காய்ச்சி யாறினபின் வடிகட்டின கஷாயத்தில் அல்லது சோம்புத் தீநீரில் நைட்ரிக் ஈதரைக் கலந்து - 15-15-நிமிஷத்திற் கொருதடவை குடிப்பாட்டவும். பிடரியில் கர்ப்பூரத் தைலத்தைத் தடவி ஒற்றிட மிடவும், அல்லது கடுகை யரைத்துப் பிளாஸ்டர் செய்யவும். இதனால் நீர்க்கட்டு, அதனாலுண்டாம் வேதனை நீங்கும். நோயாளிக்குப் பல மிருந்தால் வெந்நீரிலும் உட்கார வைக்கலாம்.

14) பெரும்பாலும் கடுந் தாகத்தால் அல்லது அதிகச் சூட்டால் அல்லது மூத்திரம், பேதி, வாந்தி ஆகியவை கட்டுப்படுவதால் உண்டாம் அருட்டல் புரட்டல் முதலியவைகளை நீக்க, அது உண்டான அந்தந்தக் காரணத்தை நீக்க முயற்சி செய்யவேண்டும். எல்லாச் சமயத்தினும் நைட்ரிக் ஈதரை உபயோகிப்பதால் குணமுண்டாகும்.

15) வயிற்றுப்பிசத்தை நீக்க உலர்ந்த ஒற்றிடம் அல்லது ஈரப்பசையான வஸ்துவால் ஒற்றிட மிடலாம். பெபர்மின்ட் அல்லது நைட்ரிக் ஈதர், ஏலக்காய்த் தைலம் ஆகியவைகளி லொன்றை உபயோகிக் கலாம். பேதி கட்டுப்பட்டிருந்தால் வர்த்தி செய்யலாம்.

16) நாலாம் நிலைமையில் மூளையில் இரத்தஞ் சேர்ந்திருந்தால் அது உண்டான காரணத்தை நீக்கவேண்டும். பேதி, மூத்திரம் ஆகியவை கட்டுப்பட்டது காரணமாயிருந்தால், மலம் ஜலம் ஆகியவைகளை வெளியாக்க முயற்சி செய்யவேண்டும். நெற்றியில்சந்தனத்தைப் பற்றிடலாம், கால்களைத் தண்ணீரில் வைத்துக் கழுவலாம். உப்பையும் நெய்யையுங் கலந்து கெண்டைக் காலில் தேய்க்கலாம்.

17) விக்கலை நீக்குவதற்காக முறித்த மோரை அல்லது ஒரு மிடறு தண்ணீரைக் குடிப்பாட்டலாம் இதனால் குணப்படா விட்டால் புஜங்களைக் கட்டி வைக்கலாம். வயிற்றில் வாயு நிறைத்திருந்தால் ஈதரினாலும், மலபந்தப் பட்டிருந்தால் வர்த்தியால் அல்லது காடி ஷர்பத்தாலும் நிவர்த்தி செய்யவேண்டும். வயிற்றில் ஒன்று மில்லாமல் வாயுலர்ந்து போனால் வெண்ணெயைக் கொடுப்பதாலும், பிடரி, மார்பு ஆகிய ஸ்தானங்களில் வெண்ணெயைப் பூசுவதாலும் குணமுண்டாகும். கடல் தேங்காய், புகையிலை ஆகியவைகளைப் புகைப் பிடிப்பதும் விக்கலை நீக்கும்.

18) வாய், சருமம் ஆகியவைகளின் வறட்சியை நீக்க வாதுமை நெய், ஜய்த்தூன் எண்ணெய் ஆகிய வைகளி லொன்றைத் தேகத்தின் மீது தேய்க்கலாம்.

19) வியாதியின் ஆரம்பத்திலிருந்து- 24- மணி நேரம் வரையில் நோயாளின் விருப்பமின்றி அல்லது இரைப்பை ஏற்றுக் கொள்ளாத வரையில் எந்தவகை ஆகாரத்தையுங் கொடுக்க லாகாது. அதற்குப் பிறகு நோயளிக்கு ஆகாரத்தில் விருப்பமுண்டானால் அல்லது இரைப்பை ஆகாரத்தை யேற்றுக் கொள்ள ஆரம்பித்தால் சவ்வரிசிக் கஞ்சி, அரருட்கஞ்சி ஆகியவைகளுள் ஒன்றில் பன்னீர் முதலியவைகளைச் சேர்த்துச் சுகந்த முண்டாக்கி கொடுக்கலாம். முக்கியமாய்க் கோழிக்குஞ்சுச் சூப்புடன் சேப்பு முறைப்பா, ஏலக்காய் ஆகியவைகளைச் சேர்த்துக் கொடுக்கலாம். கசகசாவைப் பாயசமாகச் செய்துங் கொடுக்கலாம். இரைப்பையில் பல முண்டானால் பசும்பாலை அல்லது ஆட்டுப்பாலைக் கொடுக்கலாம்.

மேற்கண்ட விஷயங்களைக் கவனித்துச் சமயோசிதமாய் நடத்தினால் கடவுளினது கிருபையால் எல்லா வகைகளிலும் சுகுணமே யுண்டாகும்.

மேற்கண்ட வகைகளில் பெரும்பாலும், ஆங்கிலேய அவுடதங்கள் சொல்லப் பட்டிருப்பதால், வெளியூர்களில் அவை கிடைப்பது அரிதாகும். மேலும் அவை சிலருக்குத் திருப்திகரமா யிருக்காது. ஆகையால், அச்சமயங்களில் உபயோகப் படத்தக்க சில ஆயுள்வேத முறைகளையும் எழுதுவாம்.

ஆயுர்வேத முறைகள்:- பின் சொல்லப்படும் முறைகளும் பல தடவை யனுபவப்பட்டவை களாகையால் பலருக்கு அதிக உபயோகப்படு மென்பதிற் சந்தேக மில்லை அவையாவன:-

வமன சஞ்சீவி

விருத்தம்

வண்ணமாமெலு மிச் சம்பழமொன்றை
வகையுடனிரண்டதா யறுத்து
எண்ணமாப்பிழிந்த ரசந்தனியிருக்க
ஏலமோர் விராகனைப் பொடித்துப்
பண்ணியவிரு துண்டினுநிறைத் தெரியிற்
பதம்பெறச் சுட்டுமுன் சாற்றில்
திண்ணமாயரைத்து மாத்திரை மூன்று
செய்திடத்தீரும் வாந்தியதே.

ஒரு எலுமிச்சம் பழத்தை யிரண்டாய் அறுத்து இரண்டு துண்டுகளிலும் கொஞ்சம் கொஞ்சம் ரசம் பிழிந்து தனியே வைத்துக்கொண்டு, ஒரு விரானெடை ஏலக்காய் விதையைப் பொடித்து, முன் துண்டுகளில் நிறைத்து, அவற்றைக் கரிநெருப்பின்மீது வைத்து, தோல்வெந்து கறுத்தவுடன் எடுத்துப் பொடித்து, முன்னெடுத்து வைத்திருக்கிற பழச்சாற்றையும் விட்டு மைப்போல அரைத்து 3-மாத்திரை செய்து ஒவ்வொன்றாய்க் கொடுக்கவும்? வாந்தி யுடனே நிற்கும் எந்த வாந்தியானாலும் தக்ஷணம் நிற்கும்.

இந்த ரோகத்தில் சிலருக்குச் சோறு சோறாக வாந்தியாவது உண்டு அதற்குப் பின்காணும் சுண்ணக் கஷாயத்தைக் கொடுக்கவும்.

சுண்ணக் கஷாயம்
விருத்தம்

சுத்தவத் திரத்தைப்பதினொன்றாச்
சதுரத்துண்டுகளாக்கிச்சுண் ணத்தைப்
பத்தியாயவற்றிற் றடவியே யடைபோற்
பக்குவத்துடனடுக் காக்கிப்
புத்தியாய்ப் புதுச்சட் டியினடு வைத்துப்
பொருந்தவே யெரித்துநீ றியபின்
அத்தரு ணத்தி லிரண்டா
ழாக் கமுத மதிற்சொரிந்தழகுடன் காய்ச்சே.

எட்டிலொன் றாக வெரிந்தபின்றுணியா
லிசைந்துமே சுத்தியா சுவடி
கட்டியே கொடுக்க வாந்தியினோடு
களைப்பும் விட் டொழியுங்கத் தூரி
கெட்டியாங் கோரோ சனையின்மாத்திரைகள்
கேண்மையாம்வமனசஞ் சீவி
யிட்டனுப் பானித் தீய்ந்திடச் சேர்ந்த
வெவ்வகை வாந்தியு மிறுமே.

உள்ளங்கையளவு சதுரமான -11- வெள்ளைத்துணித் துண்டுகளில், கற்சுண்ணத்தை யல்லது கிளிஞ்சிற் சுண்ணத்தைக் குழைத்துத் தடவி அடையைப் போல, அடுக்கடுக்காய் அடுக்கி, புதுச்சட்டியின் மத்தியில் வைத்து அடுப்பேற்றி யெரித்து, நெருப்பாகிச் சிவந்து சாம்பலானபின், அதில் இரண்டாழாக்குத் தண்ணீரைவிட்டு, எட்டிலொரு பாகமாய்க்காய்ச்சிச் சீலை வடிகட்டிப் பானஞ்செய்விக்கவும். உடனே வாந்தி நிற்கும். களை தீரும், இந்தக் கஷாயத்தில் கோரோசனை மாத்திரை, கஸ்தூரிமாத்திரை, மேற்படி வமனசஞ்சீவி ஆகியவைகளையும் அநுபானித்துக் கொடுக்கலாம். அஜீரணவாந்தி, கிருமியால் உண்டாம் வாந்தி முதலிய பல வமன ரோகங்களும் தீரும்.

இந்த ரோகத்தில் சிலருக்கு விக்கலும் காண்பது சகசமாகையால் பின்வரும் விக்கல்பானுவை உபயோகிக்கலாம்.

விக்கல்பாநு
விருத்தம்

சீரகம்வி ராகனெடை மூன்றி னோடு
திகழரிசித் திப்பிலியொன் றரைய நெல்லை
நேரவறுத் தெடுத்தபொரி யொன்றுஞ் சேர்த்து
நேயமுடன்வறுத்துச்சூ ரணமுஞ் செய்து
சாரமுள தும்பைமுக்கா வேளைவேருஞ்
சமமாக்க ஷாயமிட்டு முன்னேசெய்த
சூரணத்திற் சிறிதிட்டுப் பானஞ்செய்யச்
சொல்லவொணாவிக்கல்விட்டுத் தொலையும் பாரே.

நற்சீரகம் விராகனெடை - 3, அரிசித்திப்பிலி வராகனெடை- 1½, நெற்பொரி விராகனெடை -1 இம்மூன்றையும் வறுத்துத் தூள் செய்து கொள்க. முக்காவேளைவேர், தும்பைவேர், இவ்விரண்டையும் சமமாகச் சேர்த்துக் கஷாயம் செய்து, அதில் ஒருகரண்டி முன் சூரணத்தைக்கலந்து பானம் செய்துவரவிக்கல்நிற்கும்.

இதில் சிலருக்கு மலங்கட்டுப் பட்டால் வயிறு பொறுமி வருத்த முண்டாவது முண்டு, அதற்குப் பின்வரும் சிவதைச் சூரணத்தைக் கொடுக்கவும்.

சிவதைச் சூரணம்
விருத்தம்

கோலமுறுஞ் சிவதையின்வேர்ச் சூரணத்தில்
குறித்தேவி ராகனெடை யொன்றுங்காலும்
ஏலமிள கிடித்துவத்திர காயஞ்செய்த
வித்தூட்கள் டனித்தனியே காலுங்கூட்டி
சாலவிள வெந்நீரிற் கலந்துகொண்டு
சார்ந்துகுடிப் பாட்டமலக் கட்டினோடு
மாலடையு முப்பிசங்கள் பொறுமலெல்லா
மடிந்துவிடுந் தெய்வவருள் வலியினாலே.

சுத்திபண்ணின சிவதைவேர்ச் சூரணம் வராகனெடை- 1 3.4- மிளகு, ஏலம், இவ்விரண்டையும் தனித்தனி வறுத்து இடித்துத் தூள்செய்து வஸ்திரகாயம் செய்த சூரணம் வகை 1-க்கு விராகனெடை 3.4, மூன்றையும் ஒன்றாய்க்கலந்து இளவெந்நீரிற் கரைத்துக் குடிப் பாட்டவும் மலக்கட்டுத் தீர்ந்து உப்பிசம் பொறுமல் உடனே தீரும்.

இதில் வயிற்று நோய் கண்டாலும், நீர்கட்டுப் பட்டாலும் பின்வரும் சாரக் குளிகை கொடுக்கலாம்.

மேற்படி வயிற்றுவலிக்கு சாரக்குளிகை
கலித்துறை

காரத்தைச் செய்மிள குச்சூ ரணமுங் கருதுநவச்
சாரத்தின் றூளுஞ் சமன்சேர்த்து நீர்விட்டுச் சாமமரைத்
தாரத் திரள்சுண்டைக் காயென மாத்திரை யாக்கியொன்றை
நேரத் திகழ்வெப்ப நீரிற்கொடுவலி நீங்கிடுமே.

மிளகுச் சூரணம், நவச்சாரத்தூள், இவ்விரண்டையும் சமபாகமாய்ச் சேர்த்துக் கல்வத்திலிட்டுக் கொஞ்சம் தண்ணீர் தெளித்து - 1- சாமமரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இந்த மாத்திரை யொன்றைத் தகுந்த கஷாயத்தில் அல்லது, இள வெந்நீரில் கொடுக்க உடனே வயிற்றுநோய் தீரும். நீரும் தாராளமாய்ப் பிரியும்.

இந்த ரோகத்தில் வெயர்வை அதிகப்பட்டுத்தேகங் குளிர்ந்து ஜில்லிட்டால், பின்வரும் பூதிகாரைப் பிரயோகத்தைச் செய்யவும்.

பூதிகாரைப் பிரயோகம்
கொச்சகக் கலிப்பா

எருவந்த சாம்பல்பொடித் தேற்கவே தெள்ளி
ஒருபாயி லிட்டுநேர் யுற்றவனைத் தான்கிடத்தி
வருபழைய சுண்ணத்தின் வன்காரை யையிடித்துப்
பெருகவே தெள்ளிமணம் பெற்றகர்ப்பூரஞ் சேர்த்தே.

புதியவொரு சட்டியினிற் போதவறுத் தேதுணியாற்,
பொதியவே கட்டியங்கு பொக்கெனவே யொற்றடஞ்செய்து, அதின்
வெப்புமாற வடுத்தடுத்துச் சூடேற்றி, விதியுடனே யொற்ற விலகுமே
துர்க்குணந்தான்.

வராட்டியின் சாம்பலைப் பொடித்து மெல்லிதாயத் தெள்ளி, ஒரு பாயின் மீது கனமாகப் பரப்பி, அதன்மேல் ரோகியைக் கிடப்பாட்டி, அதிக நாட்பட்ட சுண்ணாம்புப் பழங்காரையை யிடித்துத் தெள்ளி, அதனுடன் கொஞ்சம் ஆலர்த்திக் கர்ப்பூரத் தூளையும் சேர்த்துப் புதுச்சட்டியில் வறுத்து, வெள்ளைத் துணியில் பொட்டலமாகக் கட்டிக்கொண்டு தேகத்தில் முகந் தவிர, மற்றவிடங்களி லெல்லாம் ஒற்றிடமிடவும். சூடாறினவுடன்

மறுபடியும் வறுத்து ஒற்றிடமிடவும். இதற்காக, முன் காரைத்தூளை இரண்டுபாகமாகச் செய்து, ஒன்றை வறுத்து ஒற்றிடங் கொடுத்துக்கொண் டிருக்கும்போது மற்றொன்றை வறுத்துக் கொண்டிருக்க வேண்டியது. முன்னது ஆறினவுடன் இதை வறுக்கவும், பின்னதை பொற்றிடமிடவும் இவ்விதம் மாற்றி மாற்றிச் செய்துகொண்டிருக்கவேண்டியது. தேகத்தில் சூடேறி துர்க்குணங்கள் நீங்கிச் சவுக்கியமுண்டாம்.

இந்தச் சிகிச்சையானது பட்டணவாசிகளுள் சிலருக்கு விருப்பமாயிராது. ஆயினும் அத்தகையினர்களும் மேற்கண்ட ஒற்றிடத்தை மாத்திரமேனு மிடவெறுப்பாகார்கள் என நம்பப்படுகிறது.

இதில் ஜன்னி, சயித்தியங் கண்டால் கீழ்க்காணும் விதமாயக் கஸ்தூரியை உபயோகிக்கலாம்.

கஸ்தூரிப் பிரயோகம்
விஷபேதி சஞ்சீவி மாத்திரை
வெண்பா

கத்தூரி குன்றியெடை காணவே மூன்றெடுத்து
மெத்தச் சுடாதவிள வெந்நீரில்- ஒத்தருந்தப்
பொல்லாவிடபேதிப் பொங்குசன்னிமற்றைவைபோர்
செல்லா திதற்குமுன்னே செப்பு.

மூன்று குன்றிமணியெடை முதல் தரமானகஸ்தூரியை இளவெந்நீரில் அல்லது மேற்கண்ட கஷாயங்களில் கரைத்துப் பானஞ் செய்வித்து வர, விஷபேதியிற் காணும், ஜன்னி, சயித்தியம் முதலிய சீதளந் தீரும்.

இச்சமயங்களில் கொடிச்சுண்ணம், கர்ப்பூரச் சுண்ணம், ஆகியவைகளி லொன்றைத் தனியாகவும் அல்லது மேற்கண்ட கஸ்தூரியுடன் கலந்தும் கொடுக்கலாம். இவ்விதமே குங்குமப்பூவையும் அரைத்துத் தனியாகவும் அல்லது கலந்தும் கொடுக்கலாம்.

செய்முறை:- சுத்திசெய்த வீரம், சுத்திசெய்த பூரம், சுத்திசெய்த லிங்கம், பாதரசம், அபின், சுக்குச் சூரணம், மிளகுச் சூரணம், தஞ்சாவிரைத் தூள், குங்குமப்பூ இவைகளைச் சமனெடை எடுத்துக்கொண்டு வீரத்தில் நாலிலொரு பங்கெடை கஸ்தூரியையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு, பின் சொல்லப்பட்ட கஷாயத்தைக்கொண்டு ஒரு ஜாமம் அரைக்கவேண்டும்.

அந்தக்கஷாய மென்னவென்றால்:- கஞ்சாவேர், கீழ்காய்நெல்லிவேர், கொடிவேலிவேர், பெருங் காயம் இவைகளைச் சமனெடை எடுத்து சிதைத்துப் போட்டு ஜலம்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்ச வேண்டும். இந்தக் கஷாயத்தை விட்டரைத்த பிற்பாடு மருந்துடன் அஞ்சு சுண்ணங்களைச் சேர்த்துச் சாறாயம் விட்டு இரண்டு சாமமரைத்து மிளகுப்பிரமாணம். மாத்திரைகள் செய்து வைத்துக்கொள்ள வேண்டியது. முன்சொல்லப்பட்ட அஞ்சு சுண்ணத்தின் விபரம்.

அண்டச் சண்ணம், கற்சுண்ணம், கிளிஞ்சிற்சுண்ணம், கடல்நுரைச் சுண்ணம், சங்குச்சுண்ணம், இதுகள்செய்யும் முறையென்ன வென்றால், குஞ்சுபொரித்த முட்டைத்தோல், சுடப்படாத கற்சுண்ணாம்பு, சுடாதகிளிஞ்சில், கடல்நுரை (இதுகடையில் சாதாரணமாய் விற்கப்படும் Sepia என்னும் ஜந்துவின் முதுகெலும்பு அல்லது சமுத்திரத்தில் மிதந்துவரும் ஓர் விதமான பொரபொரப்பு உள்ள கல்லு) சங்கு இதுகளைத் தனித்தனியே சுண்ணாம்புத் தெளிநீர் விட்டரைத்து இரண்டுபுடம் போட்டால் சுண்ணமாகும். இந்தச் சுண்ணத்தைத் தனித்தனி வீரத்துக்கு ஐந்து பங்கெடை சேர்த்துக்கொள்ளுகிறது

இந்த மாத்திரைகளைப் பின் சொல்லப்பட்ட கஷாயத்தில் உரைத்துச் சமயோசிதம் போல் கொடுக்க வெகு சிலாக்கியமாயிருக்கும். இந்தக் கஷாயத்தை மருந்தை உரைத்துக்கொடுக்க உபயோகிப்பதோடு வியாதிக்காரனுக்குத் தாகம் எடுத்தபோதெல்லாம் அதில் கொஞ்சம் கஸ்தூரியைக் கலந்து உள்ளுக்குங் கொடுக்கவும் வேண்டியது கஷாயத்தின் விபரம்.

நாயுருவிவேர், புளியந்தோடு, ஒதியம்பட்டை, மாவிலிங்கப்பட்டை, சிவனார்வேம்பு, தென்னமரத்தின் இளங்குரும்பை, எருக்கம்பூ இவைகளை நொருக்கிப்போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொள்ளுகிறது. தாகத்துக்கு இதைக் கொடுக்கும்போது கொஞ்சம் கஸ்தூரியைச் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

ஒரு நண்பர் எழுதுகின்றா[illegible]றாவென்னும் இக்கொடி வியாதியானது பற் பல வி[illegible]களிலும் பரவி ஜனங்களை உபத்திரவப் படுத்தி வரும் சங்கதி உலகமுழுவதும் பிரசித்தமாய்த் தெரிந்த விஷயம். இதற்காகத் தாங்கள் [illegible]

போதினியில் லோகோபகாரமாகவும் ஜீவகாருண்யத்துடனும் எழுதிவந்த பலமுறைகளும் மிகவும் சிறந்தவைகளே. அச்சிகிச்சையால் அத்துஷ்ட வியாதிக்குட்படாம லனேகர் தப்பிப் பிழைத்தார்க ளென்பதை தங்கள் போதினிமூலமாக வெளிப்படுத்தித்தங்களுக்குநன்றி யுள்ளவனாக இருப்பதுடன். இந்த வியாதிக்கான பல சிகிச்சைகளையும் எழுதின கனவான்களுக்கும் யான் மாத்திரமல்ல அம்முறைகளாற் பலப்பிராப்தியடைந்தவர்களும், அவர்கள் பந்துஜன மித்திரர் முதலிய யாவரும் முடிவாய் உலகத்தா ரெல்லோரும் இருதய பூர்வமாய் நன்றிசெலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றார்கள். இன்னும் இக்கொடிய வியாதிக்குத் தத்தமக்கு அநுபவசித்தமான அவுடதங்களை யெழுத முன்வரும் கனவான்களுக்கு இகம்பர மென்னும் இரண்டிலும் கிடைக்கும் புண்ணியம் இவ்வளவுதானெனெ முடிவுசொல்லக் கூடுமா? ஒருவராலும் ஒரு போதுமே கூடாது. கீழ்க்காணும் விஷயங்களைத் தாங்கள் தயவுடன் தங்கள் போதினியின் மூலம் வெளிப்படுத்தும்படி மிகவும் கேட்டுக் கொள்கிறேன்.

விஷபேதியைத் தடுக்கும் வகைகளும் அது தொத்தாதிருக்க முன் ஜாக்கிரதையும்

லெப்டினென்ட், கர்னஸ், ஜே, பீ, டியூக், ஐ, எம் எஸ், என்பவ் தாம் இவ்விந்தியாவில் உத்தியோகஞ் செய்த காலங்களில் இந்த வியாதிக்குச் சிகிச்சை செய்யும் பொருட்டுப் பற்பல நகரங்களிலும் பற்பல சேனைகளிலும் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்ட படியால், இந்த வியாதியைப் பற்றிப் பல வகைகளிலும் ஆராய்ச்சி செய்து அநுபவ சித்தமானவைகளின் சில குறிப்புகளை ஒரு கிரந்தமாக எழுதியிருக்கின்றார். அதின் கருத்தை மாத்திரம் இங்கு சுருக்கமாக எழுதுவாம்.

1) இந்த வியாதிக்கு ஆதாரமாகிய விஷக் கிருமிகள் மனித தேகத்திற்குப் புறம்பே தண்ணீரில் வசித்து அதில் விர்த்தியாகின்றன வென இது வரையில் பற்பல சாஸ்திரிகளாலும் பல வகைகளாகவும் செய்துவந்த ஆராய்ச்சிகளால் நிச்சியிக்கப் பட்டிருக்கின்றன.

ஆகையால் குடிக்க உபயோகிக்கும் தண்ணீர், கைகால், தேகம், பாத்திரங்கள் முதலியவைகளைக் கழுவ உபயோகிக்குந் தண்ணீர், கூட்டுடன் உள்ளபாலிற் சேர்க்க உபயோகப்படுத்தும்

குளிர்ந்த பானவகைகள் அல்லது தண்ணீர், வெந்நீரில் விட்டுத்துளாவ உபயோகிக்கும் ஐம், ஈரமாயிருக்கிற எல்லாவஸ்துக்கள் முதலியவைகளைப் பற்றிக் கவனிக்க வேண்டியதே, சமையலறை, சோடா, லெமனேட், முதலிய பானவகைகளையும், காபி, தேபானம் ஆகியவைகளையும் தயாரித்து விற்கு மிடங்கள், தோசை, இட்டலி, முதலிய சிற்றுண்டிகளை விற்கு மிடங்கள் கடைகள் முதலியவைகளும் சந்தேகிக்கத் தகுந்தவை களேயாம்.

இவ்விஷக் கிருமிகளோ, நெருப்பாலும் வெயிலாலும், அழுகலைத் தடுக்கும் மருந்துகளாலும் அதிசீக்கிரம் நாசமாகிவிடும். ஆகையால், தண்ணீர் முதலியவைகளைக் காய்ச்சுவதாலும், வெய்யிலில் உலர்த்துவதாலும், பெனைல் Phenyle முதலிய கிருமிநாசகாரிகளைத் தெளிப்பதாலும், கெந்தகம் முதலிய வைகளைப் புகைப்பதாலும் நாசப்படுத்தக் கூடிய விஷ ஜெந்துக்களில் இதுவு மொன்றே. ஆகையால் மேற்கண்டவைகளை யநுசரிப்பதால் இக்கிருமிகளை யொழித்து விடலாம்.

பனிக்கட்டி (Ice) முதலிய வைகளைப்போன்ற உறையச் செய்யும் வஸ்துக்களால் அக்கிருமிகளை நாசப்படுத்த முடியாது.

காய்ச்சுவதால் சீக்கிரமாகவும் இலகுவாகவும் இக்கிருமிகளை நாசப்படுத்தி விடலாம்.

காய்ச்சின வெந்நீரானது எல்லா விஷயங்களுக்கும் பயமற்றது. அதாவது குடிக்கவும், சமையல்களுக்காவும், சமையற் பாத்திரங்களைச் சுத்தஞ் செய்வதற்காகவும், ஸ்நானம், கைகால் முதலியவைகளைக் கழுவுவதற்காகவும் உபயோகிக்க வேண்டியது. இப்படிச் செய்வதால் அவ்வியாதி தொற்றாதிருக்கப் பெரும்பான்மையும் அநுகூலமா யிருக்கும்.

இரண்டு அல்லது மூன்று நிமிஷங்கள் நன்றாய்க் கொதிக்கும்படி காய்ச்சினால் போதுமானது. அதாவது இரண்டு மூன்றுகொதி வருகிறவரையிற் காய்ச்சுவதால் அக்கிருமிகள் நாசமாகிவிடும். அவ்விதம் காய்ச்சின தண்ணீரை யெவ்வித பயமுமின்றி உபயோகிக்கலாம்.

நன்றாய்க் காய்ச்சி விட்டோமே யென்றெண்ணி ஈரமாயிருக்கிற வேறு பாத்திரத்தில் விடலாகாது காய்ச்சின பாத்திரத்திலேயே வைத்தருந்து வேறுசிறுபாத்திரங்களால் மொண்டெடுத்து

உபயோகிப்பது உத்தமம். காய்ச்சும்போது அப் பாத்திரத்தின் வாயை மூடியே காய்ச்சவேண்டியது. வாய் மூடிக் காய்ச்சினபடியே கீழிறக்கி உபயோகிப்பதும் சிரேஷ்டமேயாம். காய்ச்சும் பாத்திரத்திற்குக் குழாய் வைத்து, வாயை மூடினபடியே விட்டுவைத்து, அக்குழாய் மூலமாகக் காய்ச்சின தண்ணீரை யெடுத்துக் கொள்வதும் உசிதமாம். இப்படிச் செய்வது அனேகருக்குக் கஷ்டமா யிருக்குமாகையால், ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் காய்ச்சி, மறுபாத்திரத்தில் தண்ணீரை விடாமல் நன்றாய்ச் சூடுண்டாக்கி, அதில் முன் காய்ச்சின தண்ணீரை விட்டு அவசியமானபோது வெங்கலச்செம்பு தாம்பிரச்செம்பு, கிளாஸ் முதலியவைகளால் மொண்டு உபயோகித்துக் கொள்ள வேண்டியது.

வெயிற்காய்ந்தால் இவ்விஷப் பூச்சி நாசமாகிவிடும், ஆகையால் சந்தேகமுள்ள பாய், தலையணை, கட்டில், மெத்தை, திரைகள், முதலியவைகளைச் சில மணிநேரம் காயவைத்தபின் கழுவக்கூடிய வகைகளை வெந்நீரால் கழுவிவிடுவது உத்தமமாம்.

புளித்த திராவகங்களால் இவ்விதக் கிருமிகள் நேரே கொல்லப்படுகின்றன. (ஆகையால் காடி, காடித்திராவகம், விளாவின கெந்தகத் திராவகம் ஆகியவைகளும் இவை போன்ற வைகளும் இவை சம்பந்தமான அவுடதங்கள் இந்த வியாதியைத் தடுக்க அதிகம் ஏற்றவைகளாம்.

சோடாவாட்டர், லெமனேட் முதலியபானவகை களிலுள்ள கார்பாலிக் ஆஸிட் காஸால் இப்பூச்சிகள் சீக்கிரங் கொல்லப்படுகின்றன. ஆனால், அதில் பைகார்பொனெட் ஆவ் ஸோடாவானது வழமையாய்ச் சேர்க்கப்படுவது போல் சேர்க்கப்படாதிருக்க வேண்டும். காஸால் (Gas) அவை யுடனே கொல்லப் படுகிறதில்லை. ஆனால் சிலமணி நேரங்களுக்குப் பின் அவை கொல்லப் படுகின்றன. ஆகையால். அதனைப் புட்டியில் பிடித்த பின்பு குறைந்தபக்ஷம் மூன்று மணிநேரம் செல்லவேண்டும். எவ்வளவு காலம் தாமதமாய் உபயோகமாகின்றதோ அவ்வளவுக் கவ்வளவ் நன்மையேயாம்.

சமையல் செய்யப்பட்ட அறையின் தரையை பிரதிதினமுங் பெர்மங் கனேட் ஆவ் பொடாஸியம் ஸொலியூஷனாற் கழுவவேண்டும மேற்கண்ட அவுடதம் அரை அவுன்ஸை ஒரு

தொட்டித் தண்ணீரிற் விட்டுக் கலக்கிக் கொண்டு, தரையில் விட்டுக் கழுவவேண்டும்.

இந்த அவுடதத்தாலே மேற்படி ஒரு அவுன்ஸ் போதுமானது இவ்விதமே ஆழத்திற்குத் தகுந்த விதமாகப் போடவேண்டும்.

பால்பாத்திரம், தயிர்ப்பாத்திரம். முதலியவைகளையும் அவசியம் கவனிக்கவேண்டியது. தண்ணீர்வைக்கப் பட்டிருக்கும் கூஜா, கூஜா போன்ற வைகளையும் கவனிக்க வேண்டியது. ஏனெனில் ஜலத்தைக் காய்ச்சி அதில் விட்டு வைத்திருந்த போதிலும் அவை குளிர்ந்து விட்டால் ஒரு வேளை அந்த விஷந்தொற்ற ஏதுவாகு மென்பதே காரணம். ஆகையால் தாம்பிரப் பாத்திரங்களாயிருந்தால் அவற்றை அடுப்பில் வைத்துச் சூடாக்கி யாகிலும் அல்லது அதில் சூடான சாம்பலை நிறைத்து வைத்தாகிலும் அவைகளைச் சுத்திசெய்ய வேண்டும்.

இந்த வியாதியானது விஷமித்த தண்ணீரால் பெரும்பான்மையும் பரவுகிறதாக நிச்சயப் படுத்தப் பட்டிருக்கிறது. ஆகையால் இது பாவுதற்கு மூலமாயிருப்பது தண்ணீர், பால், ஆகியவைகளும், இவை போன்றவைகளுமாம், பாலேடு (பாலாடை) உறைந்து தயிர், மோர், அழுகின பழவர்க்கங்கள், குளிர்ந்த பக்ஷணங்கள் (இட்டலி, தோசை, பலகாரம்) முதலியவை போன்றவைகள், நாறிப்போன மாமிசங்கள், நொந்துபோன மீன் வகைகள், நன்றாய் வேகாத காய்கறிகள், சந்தேகமான எருவாலுண்டாக்கப்பட்ட காய்கறிகள் ஆகியவைகளும், இவை போன்றவைகளும் சந்தேகிக்கத் தகுந்தவைகளேயாம்.

வியாதிகண்டவர்கள், வியாதி யுள்ளவனுடைய சம்பந்தப் பட்டவர்கள் ஆகிய இவர்கள் இரண்டு நாள் முதல் 3-நாள் வரையில் சந்தேகிக்கப் பட்டவர்கள். அதாவது கூடிய வரையில் மேற்கண்ட நாட்கள் இவர்களுடன் கூட்டுறவு இல்லாதிருப்பது உத்தமமாம்.

இவ்வியாதியைத் தடுப்பதற்காக வீட்டிற்குச் சுண்ணாம்பைப் பூசவேண்டும். அல்லது வெள்ளையடிக்கவேண்டும். பத்து பவுன் நிறையுள்ள சுண்ணாம்புடன் ஒரு பவுன் குளோரைட் ஆவ் லைமைக் (Chloriden f Lime) கலந்து உபயோகிக்க வேண்டும் இவ்விதஞ் செய்வதால் வியாதி பரவ ஏதுவிராது சாணியால் மெழுகினதரையைச் சுத்திசெய்ய வேண்டுமாயின் சந்தேகபபட்ட தரையில் வைக்கோலைப்பரப்பித் தீயிட்டுக்

கொளுத்திவிடவேண்டும். அல்லது விராட்டிகளையடுக்கித் தீயிட்டுக் கொளுத்திவிட வேண்டும்.

கூறைவீட்டில் மேற்கண்ட இரண்டுவகைகளையும் செய்ய முடியாதாகையால், கீழ்க்காணும் அவுஷதங்களைக் கீழ்க்கண்ட அளவுப் பிரகாரம் கலந்து வீட்டைச் சுத்திசெய்ய உபயோகிப்பதால் அவ்விஷம் பறந்துபோம்.

Solution of Crossive Sublimate	1 - to 1000
Hydro Chloric Acid	1 - to 1000

சொலூஷன் ஆவ் கிராஸ்ஸிவ் சப்ளிமேட் பங்கு - 1 தண்ணீர் பங்கு 1000

ஹைட்ரோ கிளோரிக் ஆஸிட் பங்கு - 2 தண்ணீர் பங்கு 1000

இக்கணக்கின் படி கலந்து வீட்டில் தெளித்துக் கழுவிச் சுத்தி செய்யவேண்டும்.

வியாதிக்காரனுடைய மலம் ஜலம் முதலியவைகளை ஆழத்திற்புதைத்துவிட வேண்டும். கார்பாலிக் ஆஸிட் அல்லது பெனைல் Phenyle-20- பங்கு ஜலத்தில் ஒருபங்கைச் சேர்த்துக் கலக்கிச் சுத்திசெய்வதுமன்றி அவ்விடங்களில் தெளித்தும் வைக்கவேண்டும். மேற்கண்ட மருந்துகள் அகப்படாவிட்டால் விளாவின கெந்தகத் திராவகத்தை உபயோகிக்கலாம்.

வியாதிக் காரனிடத்தில் உபயோகிக்கப்படும் பாத்திரங்கள், வஸ்திரங்கள் முதலானவைகளைத் தனியே வைத்திருக்க வேண்டும்.

அந்த அறையை விளக்குந் துடப்பமும் முதலியவைகளையும் தனியே வைத்திருக்க வேண்டும்.

இவ்வியாதி பரவி யிருக்குங் காலங்களில் சிறிய விஷயந்தானே யென்று அலட்சியஞ் செய்யாமல் ஒவ்வொன்றையும் கவனித்து நடத்திவர வேண்டும். கிணறு முதலிய நீர்நிலையங்களையுங் கவனிக்கவேண்டும். காய்கறிகளை வெந்நீரால் கழுவிச் சமைக்கவேண்டும். வெள்ளரிக்காய், சுரைக்காய், இலந்தம்பழம், பேரிக்காய், வாழைப்பழம், கீரை யினங்கள் ஆகியவைகளை இவ்வியாதி பரவி நிற்கும் காலங்களில் அதிகம்

உபயோகிக்கா திருப்பது உத்தமம். இன்னும் பால், தயிர், வெண்ணெய் ஆகியவைகளையும் அவ்விடங்களில் வாங்கலாகாது.

இந்த விஷமானது பானத்தின் மூலமாயாவது அல்லது வேறுவகை ஆகாரத் தோடாவது மனித தேகத்திற்குள்ளே போனால் மாத்திரம் இந்த வியாதிக் கேதுவாகுமே யொழிய வேறு விதமாக இந்த வியாதி தொத்துகிற தில்லை யென்பது இக்காலத்து. ஆங்கிலேய பண்டிதோத்தம சிகாமணிகளால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இந்த விஷமானது காற்றில் தங்கி யிருப்பதில்லை ஆனால் இந்த விஷம் பரவும்படி காற்றும் சில சமயம் ஒத்தாசையா யிருக்கலாம். இந்த வியாதிக்குப் பயப்படும் சுபாவ முடையவர்களும் இதன் பெயரைக் கேட்ட மாத்திரம் திகிலடையும் சுபாவ முடையவர்களும் மற்றவர்களைப் பார்க்கிலும் அதிக இலகுவாய் இவ்வியாதிக்கு இலக்காவார்களாகையால், அவ்விதம் பயப்படுவதும் திகில்படுவதும் அநாவசியமாம். இது பரவி யிருக்கும் இடங்களிற் பயமில்லாமற் போகலாம். ஆனால் வயிறு. ஈரல் ஆகியவைகள் மூடப் பட்டிருக்க வேண்டும். வெறுவயிறாயிருக்கும்போது போகலாது. வியாதிக் காரனைத் தொட்டால் கை, புஜம், முதலியவைகளை வெந்நீராற் சுத்தமாய்க் கழுவிவிட வேண்டும்.

இவைகளே யென் அநுபவத்தாலும் மற்றவர்களின் அநுபவத்தாலும் நிச்சயிக்கப் பட்டவைகள்.

விஷபேதிக்கு இலகுவானதும் அதிக குணமுள்ளதுமான ஒரு முறை.

விருத்தம்

தோலகன்ற சுக்கிலவங் கஞ்சா திக்காய்
சொல்லிலவங் கப்பட்டை மிளகா யைந்தும்
கோலமுற விடித்துவஸ்திர காயஞ் செய்து
கொள்ளுவாய் தனித்தனியே நிறைதான் ரூபாய்
காலதிலே பாதியந்தச் சரக்கை செயல்லாங்
கருதிடுமூன் றரைப்பலமாம் பிராந்திதன்னில்
காலமொரு சாமமட்டுஞ் சிறுக வார்த்துக்
கலந்தரைத்து மிகுந்திருந்த பிராந்தி தன்னில்.

முன்னரைத்த வற்றையெல்லாம் போட்டு நன்றாய்
முடிவுபெறக் கலக்கியே பதனஞ் செய்து
பின்னமுறும் பேதிகண்ட மானி டர்க்குப்
பெருமையுடன் மூன்றுபலம் பாணி தன்னில்
சொன்னவவு டதத்திற்காற் பலங்க லந்து
சூட்டுடனே குடிப்பட்டு குணமின்றாகில்
மன்னிமறு படியுமுன்போற் கொடுப்பாயானால்
மடிந்துவிடும் விடபேதி வழுத்தக் கேளே.

மேல் தோல், சீவின சுக்கு, லவங்கம், லவங்கப்பட்டை, சாதிக்காய், மிளகாய் இவ் வைந்தையும் தனித்தனி யிடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் வகை 1-க்கு ரூபாயெடை-¾, பிறாத்தி பலம் - மூன்றரை, மேற்கண்ட சரக்குகளை யெல்லாம் கல்வத்திலிட்டு மேற்படி பிறாந்தியைச் சிறுகச்சிறுகவிட்டு ஒரு சாமம் அரைத்து மீதியாயுள்ள பிறாந்தியிற் கலக்கி வைத்துக்கொள்ள வேண்டும். மூன்றுபலந் தண்ணீரில் காற்பலம் மேற்படி அவடதத்தைக் கலந்து சகிக்கக்கூடிய சூட்டுடன் குடிப்பாட்டலாம். ஒரு மணிக்குள் குணங்காணா விட்டால் மறுபடியுங் கொடுக்க வேண்டும். பெரும்பாலும் இரண்டாந் தடவைகொடுக்க நேரிடாது. கம்பளி போர்த்திச் சுத்தமான காற்றுள்ள விடத்திற் படுக்கச் செய்யவேண்டும். ஈரமான வஸ்திரங்களை யடிக்கடி மாற்றிவிட வேண்டும். சோடாவைத் தாராளமாய்க் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு அரை முதல் ஒரு விராகனெடை வரையிற் கொடுக்கலாம். சாம்பிறாணி, சூடன் ஆகிய இரண்டையும் சமனாய்ச் சேர்த்துப் பொடித்து நோயாளியுள்ள விடத்திற் புகைக்க விஷமித்த காற்றுப் பறந்துபோம். அரிசியை வறுத்துச் செய்த கஞ்சி, புனர்ப்பாகம் ஆகியவைகளைத் தவிர மற்றவைகளாகா வியாதி முற்றும் குணப்படுகிற வரையில் பத்தியமாக வேயிருந்து பின்பு படிப்படியாய் ஆகார போஜனாதிகளை உபயோகித்து வரவேண்டும்.

இந்தச் சிகிச்சையானது பல தடவைகள், பலருக்குக் கொடுத்து அநுபவப் பட்டிருக்கிறதாக நிச்சயப்படுத்தப் பட்டிருக்கிறது. இம்முறையையே நாம்முன் சஞ்சிகையி லெழுதி யிருக்கின்றோ மாயினும் செய்பாகமானது முன் முறையைப் பார்க்கிலும் இது விசேஷமாகக் காணப்பட்ட படியால் மறுபடியும் இங்கெழுத நேரிட்டது. மேலும் இம்முறையிலுள்ளவை எப்போதும் எங்கும் மிகவும் சுலபமாய்க் கிடைக்கக் கூடியதும் அதி சீக்கிரம்

சித்தஞ்செய்யக் கூடியதும் பயமின்றி யெவரும் உபயோகிக்கக்கூடு மென்பதும் விளங்கும்.

விஷபேதிக் கனுபவசித்தமான ஒரு அவுடதம்

உலாந்தா லிங்கம் பலம் -1 , அல்லது தேவையான அளவு இது ஒரே கட்டியாயிருக்க வேண்டும். நல்ல தேன், வெங்காயச்சாறு இவ்விரண்டை யுஞ் சமனாய்ச்சேர்த்து மேற்படி லிங்கக்கட்டியை அப்பிரேகத் தகட்டின்மீது வைத்துச் சுருக்கிட வேண்டும். நான்கு சாமம் சுருக்கிட்டால் விசேஷமாம். சமயம்போல் ஒரு சாமத்திற்குக் குறையாமற் சுருக்குக் கொடுக்க வேண்டும். அவசரமான காலங்களில் சுருக்குக் கொடுக்காமலுஞ் சேர்த்துக்கொள்ளலாம். அல்லது வேறு வகையாகக் கட்டின் லிங்கமாயினும் சேர்த்துக்கொள்ளலாம்.

மேற்படி லிங்கம், பாற்சாம்பிறாணி, தீபகற்பூரம் இம்மூன்றும் சமனெடை. முன்னர் சாம்பிறாணியையும் தீப கர்ப்பூரத்தையும் கல்வத்திலிட்டுத் தூள் செய்து கைவிடாமலரைத்துவரின் மெழுகுபோலாம். பின்னர் லிங்கத்தை நன்றாய்ப்பொடித்துச் சேர்த்தரைக்க மெழுகுபோலாம். பிறகு தேற்றான்விதைப் பிரமாணம் மாத்திரைகளாயுருட்டித் தேனிற்போட்டு வைத்துக்கொள்ளவேண்டும். விஷபேதி கண்டவர்களுக்கு ஒரு உருண்டைவீதங் கொடுக்கவேண்டும். வியாதியின் உக்கிரத்திற்குத் தகுந்தபடி, மூன்று அல்லது நான்கு மணிக் கொருதடவை கொடுக்கவேண்டும். மூன்று உருண்டைகளுக்கதிகங் கொடுக்கும்படி நேரிடாது. உருண்டையைத் தேனுடன் வாயிலிட்டுப் பல்லிற் படாதபடி விழுங்கிவிடவும். மலத்தைக் கட்டும், வாந்தியை நிறுத்தும், விக்கல், ஆயாசம், களை முதலியவைகளை நீக்கும். அந்த வியாதியில் ஜன்னி யேர்ப்பட்டிருக்கினும் குணமாம். பத்தியம் வறுத்த அரிசிக்கஞ்சி, புனர்ப்பாகம் முதலிய இலகு ஆகாரங்களை யுபயோகிக்கவேண்டும்.

காலரா ரோகத்திற்குக் கைகண்ட மருந்து

புதிய மண்சட்டியில் பட்டணம்படியால் கால்படி சுத்தஜலத்தை வடிக்கட்டிவிட்டு மேற்படி சட்டியை அசையாமல் பூவியில் வைத்து நல்லதுணியால் வேடுகட்டி சட்டி விளும்பில் துணியில் ஜலத்தைத் தடவிவிட்டு மேற்படி துணியின்மேல் இரண்டு ரூபா யெடை கர்ப்பூரத்தைக் கையால் தூள் செய்துபோட்டு ஒரு பித்தளை அல்லது தாம்பிரத் தாம்பாளத்தில் நிறைய நெருப்புத்

தணலைப் போட்டுச் சட்டியின்மேல் மூடிவிட்டு அரைமணி அல்லது ஒருமணி நேரம் கழித்துத் தாம்பாளத்தை எடுத்துப் பார்த்தால் இந்த உஷ்ணத்தால் கர்ப்பூரம் தண்ணீரிற் படிந்திருக்கும். மேற்படி ஜலத்தை காலரா ரோகம் கண்டவுடன் அரைமணி நேரத்திற்கு ஒருதரம் அரைக்கால் சேர்வீதம் கொடுத்து அந்தக் கர்ப்பூரத்தை மூன்று பணவெடையை வெற்றிலையில் வைத்து ஜலம் கொடுத்த ஒவ்வொரு தரமும் கொடுக்கவேண்டியது. இப்படிச் செய்தால் சவுக்கியமாகிவிடும்.

இன்னும் வேறு ஒருமுறை

ஒருசேர் வெள்வேலன் பட்டையை இடித்துப் பட்டணம் ஒருபடி தண்ணீரில் போட்டு கால் படியாகக் காய்ச்சி வடிகட்டி குண்டுச்சட்டியில் விட்டு மேற்கண்டபடி எல்லாவிதமும் செய்து கொடுக்கலாம்.

விஷபேதி நிவாரணி
முற்றுப் பெற்றது.

தாமரை
நூலகம்